


கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

**நியூ செஞ்சுரியின்**

# உங்கள் நூலகம்

**மாத இதழ்**

*திருவள்ளுவராண்டு 2053*

*மலர் - 14 இதழ் - 04 - ஜுலை 2022*

ஆசிரியர்

**த.ஸ்டாலின் குணசேகரன்**

பொறுப்பாசிரியர்

**சண்முகம் சரவணன்**



ஆசிரியர் குழு

முனைவர் ஆ.சிவசுப்பிரமணியன்
முனைவர் ச.சுபாஷ் சந்திரபோஸ்
முனைவர் ந.முத்துமோகன்
முனைவர் மு.இராமசுவாமி
முனைவர். நா.இராமச்சந்திரன்
முனைவர் பா.ஆனந்தகுமார்
முனைவர் ஞா.ஸ்டீபன்
ப.கு.ராஜன்
முனைவர் இரா.அறவேந்தன்
முனைவர் இரா.காமராசு
முனைவர் உ.அலிபாவா
ஜி.சரவணன்

இதழ் வடிவமைப்பு

*கா. குணசேகரன்*



நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142), ஜானி ஜான்கான் ரோடு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014
ungalnoolagam@gmail.com | www.ncbhpublisher.in
இணைய தள முகவரி: **www.keetru.com**

தனி இதழ் ₹ 45.00, ஆண்டு சந்தா ₹ 540.00
மாணவர்களுக்கு ₹ 500.00
ஆயுள் சந்தா ₹ 5400.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 4050.00

*சந்தா தொகையை*
**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch, Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.



**பொறுப்பாசிரியர்**
**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**


## உள்ளே...


**1** கோசம்பியின் முறையியலுக்கும் ஆய்வுகளுக்கும் வழிகாட்டும் நூல்
ஆ.சிவசுப்பிரமணியன்.......04

**2** தமிழ்ப் பயிற்றுமொழிக்கு பகைவர் யார்?
டாக்டர். சு.நரேந்திரன்.......11

**3** தன்னனுபவங்களின் அடிப்படையிலான திருக்குறள் உரைநூல்
நீதியரசர் ஆர்.மகாதேவன்.......17

**4** கொல்ல வருஷம் (மலையாள ஆண்டு)
அ.கா.பெருமாள்.......23

**5** மானுடவியல் ஆய்வுப் பதிவுகளில் இனங்காணலாகும் சில சொல்லாட்சிகளை மீளாய்வு செய்தல்
முனைவர் சி.மகேசுவரன்.......29

**6** 101ஆம் வயதில் தோழர் 'ஜனசக்தி' வி.ராதாகிருஷ்ணன்
பொன்.தனசேகரன்.......33

**7** கவி கா.மு. ஷெரீபின் கலைஞர் 63
பேராசிரியர் உ.அலிபாவா.......35

**8** தமிழகத்தில் திராவிட கருத்தியலின் நீண்ட பயணம்
ஏ.தெ.சுப்பய்யா.......38


**9** மாற்றிலக்கண மொழியியலின் தந்தை நோம் சோம்ஸ்கி
ச.சுபாஷ் சந்திரபோஸ்.......43

**10** கண்டிப்பு, அக்கறையோடு குழந்தை வளர்க்கும் பெற்றோர்கள்
மருத்துவர் ப.வைத்திலிங்கம்.......51

**11** இடைக்காலத் தமிழில் சில பிராகிருதச் சொற்கள்
ஆ.கார்த்திகேயன்.......55

**12** செவ்வியல் நூல் தொகையாக்கமும் பட்டியலாக்கமும் மறுவரையறை / மறுகட்டமைப்பாக்கத் தேவையும்
பேரா.தெ.வெற்றிச்செல்வன்.......60

கட்டுரை



# கோசம்பியின் முறையியலுக்கும் ஆய்வுகளுக்கும் வழிகாட்டும் நூல்

ஆ.சிவசுப்பிரமணியன்

ஆட்சியாளர்களின் பரம்பரைப் பட்டியலையும்; அரசர்கள் நிகழ்த்திய போர்ப் பயணங்களையும்; மேற்குடிகளின் ஆடம்பர வாழ்க்கையையும்; அரண்மனைகள், கோவில்கள் குறித்த வருணனைகளையும்; அந்தப்புர மனைவியரின் எண்ணிக்கையையும் வரலாறு என்ற பெயரில் படித்து வந்தோம். இதில் ஆர்வம் காட்டாமல் சற்று வேறுபாடான முறையில் இந்திய வரலாற்றை, இந்திய மக்களது வரலாறாகப் படிக்க விரும்புவோருக்கு நன்கு அறிந்த பெயரே கோசம்பி. இவரது பெயர் பல்வேறு உச்சரிப்புகளில் தமிழில் வழங்கி வரும் நிலையில் அவரது மராத்தி மொழிப் பெயரின் சரியான உச்சரிப்பு கோசம்பி என்று கூறுவதுடன் இந்நூல் தொடங்குகிறது.

+++

*மூன்று பகுதிகளாகப் பகுக்கப்பட்ட இந்நூலின் முதற் பகுதி இரண்டு இயல்களைக் கொண்டுள்ளது. இதில் முதலாவது இயல் அவரது தந்தையைக் குறித்த அறிமுகத்துடன் தொடங்கி அவரது மாணவப் பருவம், அமெரிக்காவில் கல்வி பயின்றமை, இந்தியா திரும்பி பல்கலைக்கழக ஆசிரியர் பணி, டாட்டா அடிப்படை ஆராய்ச்சி நிறுவனத்தில் (Tata Institute of Fundamental Research) கணித அறிவியலாளராகப் பணியாற்றியமை, அவர் ஆர்வம் காட்டிய பல்துறை ஆய்வுகள், குறிப்பாக நாணயவியல் ஆய்வு, பெரிய அளவிலான அணைகள் கட்டுவது குறித்த அவரது கருத்து, அவர் மேற்கொண்ட சீனப் பயணம் என்பனவற்றைக் கூறிச் செல்கிறது.*

இரண்டாவது இயல், வரலாறு பற்றி கோசம்பி கொண்டிருந்த மார்க்சியப் பார்வையை அறிமுகம் செய்கிறது. கோசம்பிக்கு முன்பு இந்திய வரலாற்றாசிரியர்கள் காலனியவாதிகளாகவோ தேசிய இயக்கம் சார்ந்தவர்களாகவோ இருந்தனர். முன்னவர்கள் ஐரோப்பிய மேலாண்மை உணர்வுடன் இந்திய மக்களைப் பார்த்தனர் என்றால், பின்னவர்கள் இந்தியாவின் பண்டைய பெருமையிலும் காவிய இதிகாசங்களிலும் முகம் புதைத்து மகிழ்ந்தனர். ஒன்றுக்கொன்று முரண்பட்ட இவ்விரு வரலாற்று வரைவியலில் இந்தியாவின் எளிய மக்களுக்கு இடமில்லாமல் போனது. அம்மக்களது இடத்தை மன்னர்களும் வைசிராய்களும் கவர்னர் ஜெனரல்களும் பிடித்துக் கொண்டார்கள்.

வரலாற்றுப் பாரம்பரியம் மிக்க இந்திய நாட்டின் வரலாற்றை எழுதுவதற்கான வரலாற்றுச் சான்றுகளை எங்கே கண்டறிவது என்பதில் தெளிவில்லாத நிலை. இத்தகைய அறிவுச் சூழலில் நம்முடைய வரலாற்று வரைவுக்கான சான்றுகள் எங்கே புதைந்துள்ளன என்பதைக் கண்டறிந்ததுடன், அவற்றைப் பயன்படுத்தி எழுதும் வரலாற்று வரைவுக்குப் பொருத்தமான வரலாற்று முறையியலாக மார்க்சியத்தை அறிமுகப்படுத்திய பெருமைக்குரியவர் டி.டி. கோசம்பி என்று சுருக்கமாக அழைக்கப்படும் தாமோதர் தர்மானந்த கோசம்பி.

கணித அறிவியலாளராக விளங்கினாலும் வரலாறு, தொல்லியல், தத்துவம், அறிவியல், தொழில்நுட்பம், மானுடவியல், இனவரைவியல், நாட்டார் வழக்காற்றியல் போன்ற அறிவுத்துறைகளில் ஆர்வமும் புலமையும் அவருக்கு இருந்தது. இத்துறைகள் சார்ந்த நூலறிவுடன் நின்றுவிடாமல் இவை சார்ந்த கள ஆய்வுகளையும் அவர் மேற்கொண்டார். சமஸ்கிருதம், பாலி போன்ற இந்தியாவின் தொன்மையான மொழிகளில் புலமை மிக்கவராகவும் விளங்கினார். இவ்வகையில் கணித அறிவியலாளர் என்ற எல்லையைக் கடந்து ஓர் இந்தியவியலாளராக (Indologist) அவர் மாறிவிட்டார். அவரது இந்தியவியல் என்பது உயர்கல்விப் புல எல்லையைக் கடந்து, மக்களை நோக்கியதாகும். இதற்குப் பின்வரும் நான்கு காரணங்கள் உள்ளன என்று குறிப்பிட இடமுள்ளது.

முதலாவது காரணம், ஆய்வுக் கட்டுரைகள், ஆய்வு நூல்கள் என்பனவற்றை மட்டுமே ஆய்வுத் தரவுகளாகக் கொள்ளாமை.

இரண்டாவது காரணம், மக்களைச் சந்திக்கும் வகையிலான கள ஆய்வுகளை மேற்கொண்டு உற்றுநோக்கியும் உரையாடியும் பெற்ற தரவுகளைப் பயன்படுத்தியமை.

மூன்றாவது காரணம், இவ்வாறு சேகரித்த தரவுகளை ஒன்றிணைக்கும் வகையிலான பல்துறை இணைப்பு (inter disciplinary) ஆய்வு அணுகுமுறையைக் கையாண்டது.

நான்காவது காரணம், தன் ஆய்வு முறையியலாக (methodology) மார்க்சியத்தைப் பயன்படுத்தியது.

இந்நான்கு காரணங்களும் அவரது சமகாலத்து ஆய்வாளர்களிடமிருந்து அவரை வேறுபடுத்திக் காட்டியதுடன், பன்முகத் தன்மை கொண்ட ஆய்வாளர் என்ற அடையாளத்தையும் வழங்கியது.

அத்துடன் அவரது வரலாற்றாய்வின் சிறப்புத் தன்மைகளில் ஒன்றாக யூஜினா வனினா என்பவரின் கூற்றும் கவனத்தில் கொள்ளவேண்டிய ஒன்று. அக்கூற்று வருமாறு:

> மத்தியகால இந்தியா குறித்த தனது ஆய்வில் கோசம்பி இந்திய வரலாற்றினை வெளி உலகத்திலிருந்து ஒருபோதும் தனிமைப்படுத்தியது இல்லை. அவரைப் பொறுத்தவரை, இந்திய வரலாறு என்பது மனிதகுல பொது வரலாற்றின் ஒருங்கிணைந்த பகுதி ஆகும். இந்திய வரலாற்றின் வளர்ச்சிக் கட்டங்கள், ஆளுமைகள், நிகழ்வுகள், இலக்கியப் பிரதிகளை, அவற்றுக்கு இணையான வெளி உலக - எகிப்து, கிரேக்கம், சீனம், ரோம், மத்தியகால மேற்கு ஐரோப்பா - இணைகளுடன் ஒப்பிட்டு அலச கோசம்பி ஒருபோதும் தவறியதில்லை. (பக்கம்100)

+++

இந்நூலின் இரண்டாவது பகுதி, கோசம்பியின் ஒருங்கிணைந்த முறையியலையும் பேசுபொருள்களையும் அறிமுகம் செய்கிறது. கணித அறிவியலாளரான கோசம்பி இந்திய வரலாற்றில் கொண்டிருந்த ஈடுபாடே, அவரை ஒரு வரலாற்றாசிரியராக மாற்றியது என்றால், அவர் மேற்கொண்ட வரலாற்று ஆய்வு அவரை மார்க்சியவாதி ஆக்கியது.

மார்க்சியத்தின் மீது கோசம்பி கொண்டிருந்த ஈடுபாடு பின்வரும் செய்தியால் புலனாகும். சமஸ்கிருத செவ்வியல் கவிஞர் பத்ரஹரியின் கவிதைகள் புத்தகத்தை கோசம்பி பதிப்பித்துள்ளார். அந்நூலை *"இன்றைய சமுதாயத்தின் மாபெரும், தன்னிகரற்ற முன்னோடிகளான மார்க்ஸ், எங்கல்ஸ், லெனின் ஆகியோரின் புனிதமான நினைவுகளுக்கு"* என்று எழுதி அம்மூவருக்கும் அர்ப்பணித்துள்ளதையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

மார்க்சியத்தை ஏற்றுக் கொண்டவர்களை இரு பிரிவினராகப் பாரக்க இடமுண்டு. முதற்பிரிவினர் அதை ஓர் அறிவார்ந்த முறையியலாக மட்டுமே ஏற்றுக் கொண்டு ஓர் அறிவுப் புலத்தில் செயல்படுபவர்கள். இரண்டாவது பிரிவினர் செயலுக்கான வழிகாட்டியாக அதை ஏற்றுக்கொண்டு கம்யூனிஸ்ட் கட்சி

என்ற அமைப்புடன் (இயக்கத்துடன்) தம்மை இணைத்துக்கொண்டு களத்தில் செயல்படுபவர்கள். இச்செயல்பாட்டின் போது நடைமுறை உத்தியாக (tactics) மார்க்சியம் என்ற கருத்தியல் நிலைப்பாட்டிலிருந்து தற்காலிகமாக விலகிச் செல்வதும் நிகழும். சிலர் இதை நிரந்தரம் ஆக்கிக் கொள்வதும் உண்டு. இவ்விரு பிரிவினரில் கோசம்பி முதற்பிரிவைச் சார்ந்தவர்.

இந்திய கம்யூனிஸ்ட் இயக்கங்களின் முக்கிய பலவீனமாக இன்றுவரை தொடர்வது இவ்விரு பிரிவினருக்கும் இடையே நிலவும் இணக்கமின்மைதான். பண்பாடு, பண்பாட்டு அரசியல், அடித்தள மக்கள் வரலாறு, இந்திய அரசியலிலும் சமூக இயக்கங்களிலும் முன்னோடிகளாகச் செயல்பட்ட ஆளுமைகள் மீதான மதிப்பீடு (சான்றாக பெரியார், அம்பேத்கர் பற்றிய மதிப்பீடுகள்), சாதி, மதம், மொழி என்பன குறித்த பார்வை என ஆராயவேண்டிய பல்வேறு ஆய்வுச் சிக்கல்கள் இன்று இந்தியச் சமூகத்தில் உருவாகி நிலைபெற்றுள்ளன. இது குறித்த உரையாடலை இவ்விரு பிரிவினரும் இணைந்து நடத்தவேண்டிய வரலாற்றுச் சூழல் இன்று இந்திய அரசியலில் உருவாகியுள்ளது. ஆனால் 'தலைவனாய் இரு அல்லது தலைவனோடு இரு' என்ற விருது வாக்கியத்தைப் பின்பற்றும் போலியான (pseudo) மார்க்சியர்கள் இரு பிரிவிலும் இயங்கி இத்தகைய இணக்கம் உருவாகாமல் பார்த்துக் கொள்ளும் அவலத்தை இன்று காண்கிறோம்.

கோசம்பியைப் பொறுத்தவரையில் மார்க்சியத்தை ஓர் ஏணியாகப் பயன்படுத்தியவரில்லை; 'மூடுண்ட சிந்தனையாக'வும் பார்க்கவில்லை. அவரது மார்க்சியம் என்பது மனித குல வரலாற்றினைத் திட்டவட்டமான ஆய்வுக்கு உட்படுத்தும் அறிவியல்முறை ஆகும். மார்க்சிய தத்துவத்தின் ஒரு முக்கிய கூறு 'வரலாற்றுப் பொருள்முதல்வாதம்' ஆகும். இந்திய வரலாற்றை அவர் ஆராயத் தொடங்கும்போது வரலாற்றுப் பொருள்முதல்வாத முறையியலின் தேவையை வலியுறுத்தினார்.

இந்தியாவில் சாதி அமைப்பும் வர்க்கச் சமுதாயமும், இந்திய நிலவுடைமை முறை, மார்க்ஸ் குறிப்பிட்ட ஆசிய உற்பத்தி முறை என்பன குறித்த கோசம்பியின் கருத்துகளுடன் மார்க்சியர்கள் உடன்படவும் மாறுபடவும் இடமுண்டு. இதன் அடிப்படையில் மார்க்சியக் கருத்துநிலைக்குப் புறம்பானவர் என்று அவரை முத்திரை குத்திவிட முடியாது. அல்லது அவருக்கு முன்பே தோன்றியவர் மார்க்ஸ் என்று கால ஆராய்ச்சி செய்து கோசம்பியின் கருத்துக்கள் தவறானவை என்று முடிவு கட்டிவிடவும் முடியாது. தரவுகளின் அடிப்படையில் திறந்த உள்ளத்துடன் ஆராயவேண்டும்.

+++

மார்க்சியம் குறிப்பிடும் அடித்தளம்-மேற்கோப்பு என்ற இரண்டில் பண்பாடு என்பது மேற்கோப்பில் இடம்பெறுகிறது. அடித்தளமே மேற்கோப்பை உருவாக்கும் என்று மார்க்சியம் குறிப்பிடுவது உண்மைதான். ஆனால் இதை இறுக்கமான ஒன்றாக மார்க்ஸ் வரையறுக்கவில்லை. பண்பாட்டின் சில கூறுகள் அடித்தளத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தவும் செய்யும் என்பதை அவர் உணர்ந்திருந்தார் என்பதும் உண்மை. இதற்குச் சான்றாக ஜோசப் பிளாக் என்பவருக்கு 1890இல் எங்கல்ஸ் எழுதிய கடிதத்தில் இடம்பெற்றுள்ள பின்வரும் பகுதிகள் அமைகின்றன:

> '....பொருளாதாரக் காரணி மட்டுமே வரலாற்றை நிர்ணயிக்கிறது என்று யாராகிலும் ஒருவர் சொன்னால் அவர் மார்க்சின் கூற்றைப் பொருளற்ற அரூபமான அபத்தமான சொற்றொடராக மாற்றிவிடுகிறார் என்றுதான் கூறவேண்டும். பொருளாதார நிலை என்பது அடித்தளம். ஆனால் மேல்கட்டுமானத்தைச் சேர்ந்த பல்வேறு கூறுகள், வரலாற்றுப் போராட்டங்கள் எத்திசையிலே எந்தப் போக்கிலே செல்லவேண்டும் என்பதில் தமது செல்வாக்கைக் காட்டத்தான் செய்கின்றன. பல நேரங்களில் அப்போராட்டங்களின் வடிவத்தை முடிவு செய்வதில் அவையே முக்கியப் பங்கு வகிக்கின்றன.'

இதுபோன்றே போர்ஜியஸ் என்பவருக்கு 25 சனவரி, 1894இல் எழுதிய கடிதத்திலும் அரசியல், நீதிமுறை, தத்துவம், சமயம், இலக்கியம், கலை என்பன தங்களுக்குள் எதிர்வினை புரிவதுடன் பொருளாதார அடித்தளத்தின் மீதும் எதிர்வினை புரிவதாக எங்கல்ஸ் குறிப்பிட்டுள்ளார். "உற்பத்தி இல்லாமல் வரலாறு இல்லை" என்று குறிப்பிட்ட கோசம்பியும் தமது 'பண்டைய இந்தியா அதன் பண்பாடும் நாகரிகமும் பற்றிய வரலாறு'(1989) என்ற நூலில் "மக்கள் சமுதாய அமைப்பை நிர்ணயிப்பது பொருளாதார சக்திகள் மட்டுமே என்று கூறுவதும் போதாது. செல்வ விகிதாச்சாரத்தையொட்டி முன்னேற்றம் நடந்தே தீரும் என்ற அவசியம் ஒன்றுமில்லை. அப்படிச் சொல்வது உண்மையல்ல" (பக்கம்:17) என்று குறிப்பிட்டுள்ளார். அதே நேரத்தில் இந்த இடத்தில் ஆங்கிலேய மார்க்சியர் இ.பி. தாம்சனின் 'பண்பாடு இல்லாமல் உற்பத்தி இல்லை' என்ற கூற்றும் நினைவில் கொள்ளத்தக்கது.

இவ்வகையில் கோசம்பியின் வரலாற்றாய்வு என்பது பண்பாட்டுக் கூறுகளை ஒதுக்கிப் புறந்தள்ளி விடும் ஆய்வல்ல. இந்திய வரலாற்றில் நிகழ்ந்த ஒவ்வொரு சிறு நிகழ்வுகளையும் அவர் கூர்மையுடன் அவதானித்துள்ளார். சடங்குகள் அவற்றில் பயன்படுத்தும் கலன்களில்கூட வரலாறு மறைந்துள்ளதை அவர் வெளிப்படுத்தி உள்ளார்.

இன்று பண்பாடு என்பதைக் கூறத்தகாத ஒரு சொல்லாக மாற்றும் முயற்சியை மார்க்சியத்தின் பெயரால் சிலர் முன்னெடுக்கின்றனர். இத்தகைய சூழலில் இந்நூலாசிரியர் மார்க்சியச் சிந்தனையாளரும் வகுப்புவாதத்திற்கு எதிரான கருத்துநிலைப் போராட்டத்தில் தொடர்ச்சியாக இயங்கிவருபவருமான கே.எம். பணிக்கரின் பின்வரும் கூற்றை மேற்கோளாகக் காட்டியுள்ளார்:

> *'மார்க்சிய வரலாற்றியலில் பண்பாட்டாய்வுக்கு ஒப்பீட்டளவில் உரிய கவனம் அளிக்கப்படவில்லை எனில், அதனை வகுப்புவாதம் தன்வயப்படுத்திக் கொள்வதும், பண்பாட்டு ஆய்வில் ஏகாதிபத்தியம் மேலாதிக்கம் செலுத்திவிடுவதும் மிக எளிதாகிவிடும்' (பக்கம்:100).*

இம்மேற்கோள் ஓர் எச்சரிக்கை மணி என்பதை இன்றைய இந்திய அரசியல் சூழலை அறிந்தவர்கள் நன்கு அறிவர். இன்றைய அரசு பெருமுதலாளிகளுக்கான அரசு. ஆனால் பல்வேறு சமுகப் பிரிவினரின் ஆதரவைப் பெற்ற அரசு. இந்த ஆதரவைப் பெற அவர்கள், கையாளும் கருவியாக இந்துமதமும் அது சார்ந்த சனாதனச் சிந்தனைகளும் அமைந்துள்ளன. பண்பாடு என்ற பரந்த களத்திற்குள் (Domain) அடங்குவதுதான் சமயம். எனவே சமயம் சார்ந்த அரசியலை விமர்சிக்க பொருளாதார அரசியல் மட்டுமின்றி, பண்பாடு சார்ந்த அரசியலும் தேவைதானே. அரசியலில் முற்போக்காகவும் பண்பாட்டில் பிற்போக்காகவும் எப்படி இயங்க முடியும்?

ஆசிய உற்பத்தி முறை, இந்தியாவில் அடிமை முறை, இந்திய சாதிமுறை என்பன குறித்து அவர் விவாதித்துள்ளார். 'இந்தியாவில் நிலவிய தன்னிறைவு பெற்ற கிராம கம்யூன் முறைமையே ஆசியமுறை' என மார்க்ஸ் குறிப்பிடுகிறார் என்பது கோசம்பியின் கருத்தாகும். அதாவது பேரரசுகள் எழுந்தாலும் வீழ்ந்தாலும் மக்கள் கவலைப்படாமல் நிலத்தோடு தமது துயர வாழ்க்கையைத் தொடர்ந்தனர் என்கிறார் (பக்கம்:130). (இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன? என்பது ஒரு தமிழ்ப் பழமொழி). இந்தியாவைப் பற்றி (On India) என்ற நூலில் "தன்னகங்காரம் மிக்க கிராமங்கள்" என்று மார்க்ஸ் குறிப்பிடுவது இதைத்தான். 'ஆசிய உற்பத்தி முறை இருந்தது. அது இந்தியாவுக்கு மட்டும் பொருந்துவதாக உள்ளது' என்பது கோசம்பியின் கருத்து (பக்கம்:131).

எஸ்.ஏ. டாங்கே எழுதிய 'பண்டைக்கால இந்தியா' என்ற நூல் குறித்த அவரது மதிப்பீடும்(பக்கம்:72), பகவத்கீதையின் தோற்றமும் அதன் நோக்கமும் என்பன குறித்த கோசம்பியின் கருத்துக்களும் (பக்கம்:91-92, 148-152) அவரது நூல்களின் வழி அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

இந்திய அடிமை முறை குறித்த அவரது கருத்துக்கள் முற்றிலும் இறுதியான கருத்துக்கள் அல்ல என்றாலும்




வரலாறு, பண்பாடு, அறிவியல்
டி.டி.கோசம்பியின் வாழ்க்கையும் ஆய்வுகளும்
மூ.அப்பணசாமி
விலை: ரூ.400/- | வெளியீடு: ஆறாம்திணை

சில சான்றுகளின் அடிப்படையில் அறிவுப்பூர்வமான சில முன்மொழிவுகளை அவர் முன்வைத்துள்ளார். அவை விவாதிக்கப்பட வேண்டியவை. ஆவணங்களில் கூறப்பட்ட இடங்களையும் பொருள்களையும் தேடவேண்டும் என்பது அவரது ஆய்வு வழிமுறைகளில் ஒன்றாக உள்ளது. இது தொடர்பாக அவர் மேலும் கூறும் பின்வரும் செய்திகள் அவரது ஆய்வு வழிமுறையின் வெளிப்பாடாக அமைந்துள்ளன.

> குறிப்பிட்ட ஒரு சமூகப் பழக்கவழக்கம் எப்போது முதல் முதலாகக் குறிப்பிடப்படுகிறது, குறிப்பிட்ட உணவுப் பொருள் அல்லது தொழில்நுட்பம் முதல் முதலில் எப்போது அறிமுகமாகியது ஆகிய தரவுகளைத் தேட வேண்டும். உதாரணமாக, தேங்காய்! தேங்காயை பார்ப்பன பூசாரிகள் காலம் காலமாகப் பயன்படுத்துகிறார்கள் என நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், எந்தப் பண்டைய பார்ப்பனிய ஆவணத்திலும் தேங்காய் குறிப்பிடப்படவில்லை. பொ.ஆ. நான்காம் நூற்றாண்டு வாக்கில்தான் மலேயா போன்ற தென்கிழக்கு நாடுகளிலிருந்து தேங்காய் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. பசுவை புனிதப் பசு என்கிறார்கள். ஆனால், செழித்து வளர்ந்த கங்கைச் சமவெளிச் சேற்றில் நீர் எருமைகளே நன்றாக வளர்ந்து பலனையும் அளித்திருக்க முடியும். புத்தர் காலத்துக்குப் பிறகுதான் இந்த விலங்கு (பசு) முக்கியத்துவம் பெற்றிருக்க வாய்ப்புண்டு. இவ்வாறு ஆவணங்களை ஆராய்வதுடன் களப்பணிகளும் தொல்லியல் சான்றுகளுடன் ஒப்பிடுவதும் அவற்றை நவீன

அறிவியல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்திக் காலப்பகுப்புச் செய்து அறிதலும் அவசியம் ஆகும்.(பக்:124-125).

கோசம்பியின் வரலாற்றாய்வுகளும் புராண ஆய்வுகளும் தொன்மைச் சிறப்புடைய பண்டைத் தமிழக வரலாற்றாய்வுக்கு வழிகாட்டும் தன்மையன. இந்திய ஒன்றியமானது பல்வேறு பண்பாட்டுக் கூறுகளைக் கொண்ட நாடு. வேற்றுமையில் ஒற்றுமை கொண்ட நாடு. பல்வேறு மதங்களைப் பின்பற்றுவோரும் மொழி பேசுவோரும் உணவுப் பழக்கங்களைக் கொண்டோரும் இணைந்து வாழும் நாடு. எனவே இந்நாட்டின் அரசியல் சமூக வரலாற்றையும், பண்பாட்டு வரலாற்றையும் ஒற்றை அடையாளத்தை வெளிப்படுத்தும் அல்லது வலியுறுத்தும் நோக்கில் எழுதுவதென்பது தவறான செயலாக அமையும். இத்தவற்றைச் செய்யாமல் காத்துக்கொள்ள கோசம்பியின் வரலாற்று அணுகுமுறை வழிகாட்டியாக அமையும்.

+++

கோசம்பியின் எழுத்துக்களில் மார்க்சியத்தின் செல்வாக்கு தெளிவாக வெளிப்படுகிறது. இந்திய வரலாற்று வரைவின் போதாமை என்ன என்பது குறித்து "(மார்க்சியர்களாகிய) நம்மைப் பொறுத்தவரை, மனித சமுதாய உற்பத்தி உறவுகள் மற்றும் உற்பத்தி சக்திகளில் ஏற்படும் அடிப்படைத் தொடர் மாற்றங்களின் காலமுறை வளர்ச்சிப் போக்குகளே வரலாறு ஆகும். இத்தகைய வரலாறு நமக்கு (இந்தியர்களுக்கு) இதுவரை எழுதப்படவில்லை" என்று கூறிச் செல்கிறார் (பக்கம்:128-129). இப்படிக் குறைபடுவதுடன் நின்றுவிடாமல், இந்திய வரலாற்று வரைவில் பின்பற்ற வேண்டிய காலகட்டங்களை வரையறுப்பது தொடர்பாக கோசம்பி முன்வைத்துள்ள கருத்துகளையும் இந்நூலாசிரியர் அறிமுகம் செய்துள்ளார். இப்பகுதிகள் ஆழமான வாசிப்பிற்கு உரியவை என்பதுடன் வரலாற்று வரைவுக்கு வழிகாட்டும் தன்மையன.

இந்திய சமூக அமைப்பு குறித்த ஆய்வில் தவிர்க்க இயலாததாக அமைவது சாதி. இது குறித்த கோசம்பியின் கருத்துகளை இந்நூல் திரட்டித் தந்துள்ளது. சாதிகுறித்த புரிதலுக்கு இவை பெரிதும் உதவும் தன்மையன. சாதியின் தோற்றம் குறித்த ஆய்வுடன் நின்றுவிடும் பொதுவான மரபிற்கு மாறாக சாதி ஏன் தேவைப்பட்டது? அதன் செயல்பாடு என்ன? அதன் விளைவுகள் என்ன? என்ற வினாக்களுக்கு கோசம்பி விடை தேடியுள்ளதை இந்நூல் எடுத்துரைக்கிறது.

இந்நூலின் மூன்றாம் பகுதியில், இதுவரை தமிழில் வெளிவராத கோசம்பியின் எழுத்துகளை மொழியாக்கம் செய்து தந்துள்ளார். இந்தக் கட்டுரைகள் அறிவியல், ஆராய்ச்சி, திட்டமிடல், தொழில்நுட்பம் ஆகியன குறித்த கோசம்பியின் கருத்துகளைக் காட்டுகின்றன. இக்கருத்துகள் புதுமையாக உள்ளன.

+++

இத்தகைய சிறப்பியல்புகள் கொண்ட ஓர் ஆய்வாளரை அறிமுகம் செய்யும் நோக்கில் நூல் ஒன்றை எழுதுவது சற்றுக் கடினமான பணிதான். வாய்மொழி வழக்காறுகளைச் சேகரித்து விளக்கம் தருவது போன்று தரவுகளைச் சேகரித்து விளக்கம் தந்து எழுதிவிட முடியாது. ஆழமான வாசிப்பும் தரவுகளைத் தேடிக் கண்டறியும் விடாமுயற்சியும் சேகரித்த தரவுகளை இணைத்துப் பார்க்கும் ஆற்றலும் அவற்றை ஆராய்ந்து உண்மையைக் கண்டறியும் திறனும் தேவைப்படும் பணி இது.

மேலும் நாம் அறிமுகம் செய்யப்போகும் ஆளுமையின் வாழ்க்கை வரலாறு மட்டுமின்றி அவரது பணிகள் குறித்தத் தெளிவான அறிமுகமும் இடம் பெறவேண்டும். வாழ்க்கை வரலாற்றிலேயே வட்டாடிவிட்டு, அரசல் புரசலாக அவரது பணிகளைப் பட்டியலிடுதல் அல்லது அவரது வாழ்க்கை வரலாற்றை மேம்போக்காகப் பதிவிட்டுவிட்டு அவரது பணிகளை எவ்வித விளக்கமும் இன்றி பட்டியலிடுதல் ஆகிய, இருவிதமான போக்குகளை நாம் அவ்வப்போது சந்திக்கிறோம்.

இந்நூலாசிரியர் மேற்கூறிய இடர்பாடுகள் எவையும் இன்றி கோசம்பியின் வாழ்க்கை வரலாற்றையும் அவரது ஆய்வுகளையும் அழுத்தமாகப் பதிவு செய்துள்ளார். கோசம்பியின் நூல்களையும் கட்டுரைகளையும் வாசித்தறிந்தமை இந்நூலாசிரியரின் எழுத்துகளில் பளிச்சிடுகிறது.

கோசம்பியின் மறைவுக்குப் பின் (1966 ஜூன்) அவரையும் அவரது பணிகளையும் வெளிப்படுத்தும் வகையில், *'Historical probings : In Memory Of D.D. Kosambi', 'Essays in Honour Of Late Professor D.D.Kosambi', 'The Many Careers Of D.D.Kosambi'* என்ற தலைப்புக்களில் மூன்று தொகுப்பு நூல்கள் வெளிவந்துள்ளன. ஆங்கில ஆய்விதழ்கள் சிலவற்றில் ஆழமான கட்டுரைகளும் வெளியாகி உள்ளன. இவை எல்லாம் தமிழ் வாசகர்களுக்குப் பரவலாகக் கிட்டாத தமிழக அறிவுச் சூழலில் இந்நூல் வெளிவந்துள்ளது. இது தீவிர வாசகர்களுக்குப் பயன்தருவது மட்டுமின்றி ஆய்வு மாணவர்களுக்கும் வழிகாட்டும் தன்மையது.

இந்நூலின் தாக்கத்தால் கோசம்பியின் வரலாற்று நூல்களின் வாசிப்புத் தளம் தமிழகத்தில் விரிவடைவதுடன் அவரது வரலாற்று முறையியலை அடியொற்றி தமிழ்ச் சமூகத்தின் வரலாறு எழுதப்படும் என்று நம்புகிறேன். தோழர் மூ. அப்பணசாமிக்கு வாழத்துக்களும் பாராட்டுக்களும்.

டி.டி. கோசம்பியைக் குறித்தும், அவரது ஆய்வுகள் குறித்தும் எளிமையாகவும் அதே நேரத்தில் ஆழமான செய்திகளுடனும் எழுதப்பட்ட இந்நூலுக்கு முன்னுரை எழுதும்படி அன்பிற்குரிய எழுத்தாளத் தோழர் மூ. அப்பணசாமி பணித்ததை எனக்கு வழங்கப்பட்ட மரியாதையாகவே கருதுகிறேன்.

கட்டுரையாளர், தமிழர் சமூக வரலாற்று ஆய்வாளர்,
மார்க்சிய சிந்தனையாளர்

# 2022 ஆம் ஆண்டு ஈரோடு புத்தகத் திருவிழாவின் முழக்கம்

# இல்லந்தோறும் நூலகம்

★ 2022 ஆம் ஆண்டின் ஈரோடு புத்தகத் திருவிழாவினை விரிவான ஏற்பாடுகளுடன் மிகவும் தரத்தோடு நடத்த பெரும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது

★ இந்த ஆண்டின் சிறப்பு முழக்கமாக ' இல்லந்தோறும் நூலகம் ' பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. வாசிப்புப் பழக்கத்தின் அவசியத்தை பள்ளி , கல்லூரி மாணவர்களுக்கு வழிபாட்டுக் கூட்டங்களிலும் வகுப்பறைகளிலும் ஆசிரியர்கள் இப்புத்தகத் திருவிழாச் சமயத்தில் வலுவாக எடுத்துச் சொல்லி மாணவர்களிடையே புத்தக வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்த முயலவேண்டுமென பேரவை கேட்டுக் கொள்கிறது

★ ஆறாம் வகுப்பிற்கு மேற்பட்ட பள்ளி – கல்லூரி மாணவர்கள் அனைவரையுமே இந்த ஆண்டின் ஈரோடு புத்தகத் திருவிழாவிற்கு அழைத்து வந்து, அவர்கள் சில புத்தகங்களையேனும் வாங்கி அவரவர் வீட்டில் ஒரு சிறு நூலகத்தைத் தொடங்க கல்வி நிறுவனங்கள் வழிவகை செய்ய பேரவை வேண்டுகிறது

★ ஈரோடு புத்தகத் திருவிழாவில் ரூ 250க்கும் மேல் புத்தகங்கள் வாங்கும் ஒவ்வொரு மாணவருக்கும் திருவிழா முகப்பிலேயே ' நூல் ஆர்வலர் ' என்ற சான்றிதழ் வழங்கப்படுகிறது. மாணவர்களை வாசிக்கத் தூண்டும் மேலும் சில திட்டங்கள் உள்ளன

★ பாடப்புத்தகங்களோடு பிற பொதுப்புத்தகங்களையும் பள்ளி மாணவப் பருவத்திலேயே வாசிக்கத் தொடங்குகிற மாணவர்கள் வாழ்வியல் அறிந்தவர்களாகவும் , உலகியல் புரிந்தவர்களாகவும் தனித்திறமைகள் நிறைந்தவர்களாகவும் ஆளுமை மிக்கவர்களாகவும் பிற்காலத்தில் விளங்குவர்


★ வாசிப்பு சிந்தனையைத் தூண்டும். சிறந்த குடிமக்களை வார்த்தெடுக்கும்

**இல்லந்தோறும் நூலகம் உருவாக 2022 ஆம் ஆண்டுப் புத்தகத் திருவிழா அர்ப்பணிக்கப்படுகிறது. அரிதினும் அரிதான இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள அனைவரையும் வேண்டுகிறோம்**


## மக்கள் சிந்தனைப் பேரவை – ஈரோடு

Email: info@makkalsinthanaiperavai.org / Email: stalingunasekaran.t@gmail.com
Website: www.makkalsinthanaiperavai.org / www.erodebookfestival.org / www.tstalingunasekaran.com
Facebook: makkalsinthanaiperavaierode / Youtube: makkalsinthanaiperavaierode


# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்





₹ 350/-




₹ 115/-




₹ 380/-




₹ 180/-



கட்டுரை

# தமிழ்ப் பயிற்றுமொழிக்கு பகைவர் யார்?

டாக்டர் சு. நரேந்திரன்

கலைஞர் கருணாநிதி முதலமைச்சராக பொறுப்பேற்றிருந்த கால கட்டத்தில் 19-1-1999இல் தமிழ் அன்பர் நெஞ்சம் மகிழும் விருந்தாக எதிர்காலத் தமிழ் இளைஞர்களுக்கு நலம் பயக்கும் மருந்தாக அடுத்த கல்வியாண்டு முதல் (1999-2000) புவி இயல், வரலாறு, கணிதம், சமூக அறிவியல் பாடங்களை தமிழில் தான் கற்பிக்க வேண்டுமென்று நீதிபதி மோகன் அறிக்கையை முழுமையாக ஏற்றுக் கொண்ட தமிழக அரசு ஆணை பிறப்பித்தது.

ஆனால் அரசு வெளியிட்ட ஆணையை, தனியார் பள்ளிகளின் நிர்வாகிகளும், பெற்றோர்களும் எதிர்த்தனர். அவர்கள் போட்ட வழக்கு தமிழக அரசின் ஆணையை இலதாக்குவதில் (இரத்துச் செய்வதில்) முடிந்தது. இதைச் சற்று விரிவாகப் பார்ப்போம். அப்போது தமிழ்ப் பயிற்று மொழிக்கு பகைவர் யார்? என்று நமக்குத் தெரியும்.

**உயர்நீதிமன்றத் தீர்ப்பு என்ன?**

விரிவான விவாதங்களுக்குப் பின் தமிழ்வழிக் கல்வியைச் செயல்படுத்துவது குறித்து பரிந்துரைகள் வழங்க நீதிபதி மோகன் தலைமையில் தமிழக அரசு அமைத்த குழு முறையானது அல்ல என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இந்த வழக்கு முதலில் நீதிபதி சண்முகம் முன்னிலையிலேயே விசாரணைக்கு வந்தது.

நீதிபதி சண்முகம் ஏற்கனவே பயிற்றுமொழிக்கு ஆதரவான தீர்ப்பளித்தவர் என்பதால் அவர் இந்த வழக்கை விசாரிக்கக் கூடாதென மெட்ரிகுலேசன் பள்ளி வழக்கறிஞர் யு.என்.ஆர்.ராவ் வாதிட்டதைத் தொடர்ந்து நீதிபதிகள் ஏ.எஸ். வெங்கடாசலமூர்த்தி, எஸ்.ஜெகதீசன், என். தினகர் ஆகியோர் அடங்கிய அமர்வு நீதிமன்றமே இவ்வழக்கை விசாரித்தது. இவ்வழக்கின் முக்கியக் கருத்துகள் வருமாறு

1. பயிற்றுமொழியாகத் தமிழைக் கட்டாயமாக்கி அரசு வெளியிட்ட உத்தரவு தெளிவாக இல்லை. முரண்பாடுகளைக் கொண்டுள்ளது. இது அரசியல் சட்டத்தின் 14 வது பிரிவுக்கு எதிராக உள்ளது.
2. ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்டிராத குழந்தைகள் ஆங்கிலோ இந்தியன் மற்றும் சி.பி.எஸ்.இ பள்ளிகளில் 5ஆம் வகுப்புவரை ஆங்கில வழியில் படிக்க மாணவர்கள் மட்டும் தாய்மொழியில் படிக்க வேண்டும் என அரசு உத்தரவிட்டுள்ளது.
3. இந்த உத்தரவை வெளியிடுவதற்கு முன்பாக மெட்ரிகுலேசன் நிர்வாகங்களின் கருத்துகளை அரசு கேட்கவில்லை.
4. தங்கள் குழந்தைகளுக்கு எத்தகைய கல்வியைத் தர வேண்டும் என்பதைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்றோருக்கு உள்ளது என்று மனித உரிமை குறித்த சர்வதேச மாநாடு தீர்மானம் செய்துள்ளது. இத் தீர்மானத்தில் இந்திய அரசு 1992 டிசம்பர் 11ஆம் தேதி கையெழுத்திட்டுள்ளது.
5. கல்வி பெறுவது மக்களின் அடிப்படை உரிமை. எந்த மொழியில் படிக்க வேண்டும் என்பதை முடிவு செய்யும் உரிமையும் அவர்களுக்கு உள்ளது. பயிற்றுமொழி எது என்பதைக் குழந்தைகளின் பெற்றோர்தான் முடிவு செய்ய வேண்டும். அரசு உத்தரவு இந்த அடிப்படை உரிமையைப் பறிப்பதாக உள்ளது.
6. பயிற்று மொழியைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பறிக்கப்படுவதால் சிறுபான்மையினர்கள் உரிமையும் இந்த உத்தரவால் பாதிக்கப்படும். *(தினமணி 21.04.2000)*.

## நீதிபதிகள் கூறுவது இதுதான்

அரசாணையில் தமிழ் அல்லது தாய்மொழி என்று கூறப்பட்டுள்ளது. அப்படியானால் தமிழைத் தவிர வேறு மொழிகளைத் தாய் மொழியாகக் கொண்ட குழந்தைகளுக்கு எவ்வாறு பயிற்சி அளிக்கப்படும்? அதற்கு அரசாங்கம் தனது அரசாணையில் ஏதும் வழிவகை செய்யவில்லை. தாய்மொழிக் கல்வி பற்றிய கமிஷனும் இது குறித்து ஏதும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. எனவே மொழிவழி சிறுபான்மையினர்களுக்கு, அவர்களது நலன்களுக்கு ஊறு விளைவிக்கும் வகையில் இந்த அரசாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்கிறது உயர்நீதிமன்றம்.

அரசியல் சாசனத்தின் 51ஆவது ஷரத்து, 350ஆவது ஷரத்து மற்றும் சர்வதேச மனித உரிமை மாநாட்டு முடிவுகளின் 26(3)ஆவது பிரிவு ஆகியவற்றை உயர்நீதிமன்றம், விவாதித்து, அவற்றின் அடிப்படையில் சர்ச்சைக்குரிய அரசாணை செல்லாது என அறிவித்துள்ளது.

## அரசியல் சாசனத்தின் மேற்படி ஷரத்துக்கள் பின்வருமாறு கூறுகின்றன

(1) 51 (c) வரன்முறைப் படுத்தப்பட்ட மக்களிடையே ஒருவரோடொருவர் உறவு கொள்ளும்போது அவர்கள் சர்வதேச சட்டம் மற்றும் ஒப்பந்தங்களில் ஒப்புக் கொள்ளப்பட்ட கடமைகளை மதித்து நடக்குமாறு அரசு பார்த்துக் கொள்ள முடிய வேண்டும்.

(2) 350-ஏ சிறுபான்மை மொழிபேசும் மக்கள் தங்கள் குழந்தைகளுக்குத் தத்தம் தாய்மொழியில் ஆரம்ப நிலைக் கல்வி அளிப்பதற்கு ஒவ்வொரு மாநில அரசும், அம்மாநிலங்களில் உள்ள ஸ்தல ஸ்தாபனங்களும் முயல வேண்டும். இவ்வகையில், ஜனாதிபதி அவர்கள் எந்த ஒரு மாநில அரசையும் அத்தகைய வசதி செய்யுமாறு உத்தரவிடலாம்.

(3) 26(3) சர்வதேச மனித உரிமை ஒப்பந்தம்

தங்கள் குழந்தைகளுக்கு எத்தகைய கல்வி வழங்க வேண்டும்? என்று தீர்மானிக்கும் உரிமை பெற்றோருக்கு உண்டு.

இம்மூன்று ஷரத்துக்களையும் நீதிமன்றம் நுணுகி நுணுகி ஆராய்ந்துள்ளது. சர்வதேச மனித உரிமை மாநாட்டு ஒப்பந்தத்தில் இந்திய அரசு 1992 டிசம்பர் 11இல் கையெழுத்திட்டுள்ளது. அதனால் அதற்கெதிராக வேறெந்தச் சட்டமும் இந்நாட்டில் இயற்றப்படாததால் மனித உரிமை ஒப்பந்தத்தின் ஷரத்துக்களே இங்கு சட்ட ரீதியான அங்கீகாரம் பெற்றுவிட்டதாகவும் நீதிமன்றம் கூறியுள்ளது. ஆனால் அந்த ஷரத்தில் எத்தகைய கல்வியை அளிப்பது (what kind of education) என்பதைப் பற்றித்தான் கூறப்பட்டுள்ளதே தவிர, எந்த மொழி பயிற்சி மொழியாக இருக்க வேண்டும் என்பது பற்றி எந்தப் பேச்சும் இல்லை.

அந்த ஷரத்தில் கூறப்பட்டுள்ள விஷயத்துக்கு எதிராக எந்த ஒரு சட்டமும் இயற்றப்படாததால் மனித உரிமை மாநாட்டு முடிவே சட்டப்படி செல்லுபடி ஆகும் என்று நீதிமன்றம் கூறுகிறது. அரசாங்கம் இயற்றியுள்ள அரசாணை சட்டம் அல்ல என்றும் எனவே அது செல்லுபடி ஆகாது என்றும் கூறுகிறது.

அதாவது, அரசியல் சாசனத்தின் 253வது ஷரத்தை யாரும் பரிசீலனை செய்யவில்லை.

அப்பிரிவு பின்வருமாறு கூறுகிறது.

253ஆவது ஷரத்து, சர்வதேச ஒப்பந்தங்களை அமலாக்குவதற்கான சட்டம் இயற்றுதல் "இந்தப் பிரிவில் இதற்கு முன்னால் என்ன கூறப்பட்டிருந்தபோதிலும்? சர்வதேச மாநாடுகளில் பிற நாட்டுடனோ, பிற நாடுகளிலோ செய்து கொள்ளப்படும் உடன்படிக்கைகள், ஒப்பந்தங்கள், முடிவுகள் போன்றவற்றை அமலாக்கும் வகையில் சட்டம் இயற்றும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கே உண்டு."

அரசியல் சாசனத்தில் இந்தப் பிரிவு மிகத் தெளிவானது. மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது கூட, அரசியல் சாசனம் பாராளுமன்றத்திற்கு வழங்கியுள்ள அதிகாரத்தின்படி 1992 செப்டம்பர் 11இல் மத்திய அரசாங்கம் கையெழுத்திட்ட மனித உரிமைகள் (குழந்தைகள் உரிமை) பற்றிய சர்வதேச ஒப்பந்தத்தை அமலாக்கும் வகையில் பாராளுமன்றத்தில் சட்டம் இயற்றப்படவேண்டும். அப்படி ஒரு சட்டம் பாராளுமன்றத்தில் இயற்றப்படாத நிலையில் மேற்படி சர்வதேச ஒப்பந்தத்தின் ஷரத்துக்கள் இந்திய மக்களைச் சட்டப்படி கட்டுப்படுத்தக்கூடியதில்லை.

அரசியல் சாசனத்தின் இந்த ஷரத்தைச் சரிவரக் கணக்கில் கொள்ளாத நீதிமன்றம் வண்டிக்கு எதிராகக் குதிரையைப் பூட்டுகிறது.

"உள்நாட்டுச் சட்டத்திற்குப் புறம்பாக இல்லாத எந்த ஒரு சர்வதேச மாநாட்டு ஒப்பந்தமும் உள்நாட்டுச் சட்ட நூல்களில் சேர்க்கப்பட்டதாகவே கருதப்படும். அந்த வகையில் இவ்வழக்கைப் பொருத்தமட்டில் ஓர் அரசாணை மட்டுமே உள்ளது. அது எல்லாப் பள்ளிகளிலும் தமிழ் அல்லது தாய்மொழியிலேயே பாடங்கள் பயிற்றுவிக்கப்படவேண்டும் என்று கூறுகிறது. (இது அரசாணை, சட்டமல்ல) எனவே உள்நாட்டுச் சட்டம் ஏதும் இல்லாத நிலையில், சர்வதேசிய அளவில் நம்மால் ஒப்புக்கொள்ளப்பட்ட முடிவுகளையும் நடைமுறைகளையும் நம் நாட்டுச் சட்டங்களில் காணவேண்டியுள்ளது. இதன் பொருள், தங்களது குழந்தைகளுக்கு எத்தகைய கல்வியை அளிக்க வேண்டும் என்று தீர்மானிக்கும் உரிமை பெற்றோர்களுக்கு உரியது என்பதே ஆகும். அவ்வாறாயின், சர்ச்சைக்குரிய அரசாணையானது சட்டத்துக்கும் முரணானது. சட்டப்படிச் செல்லுபடி ஆகாதது. அமுல்படுத்த இயலாதது ஆகும். நாமும் அவ்வாறே கொள்கிறோம்.

இத்தகைய சிக்கலான பிரச்சினையைக் கையாளும்பொழுது யதார்த்தமான அணுகுமுறையைக் கையாள வேண்டும்.

எல்.கே.ஜி. வகுப்பிலிருந்து சந்தேகமில்லாமல் தமிழை ஒரு கட்டாயப் பாடமாக ஏற்றுக் கொள்ள வேண்டியது அவசியமே. பெற்றோர்கள் விரும்பினால் ஆங்கிலத்தைப் பயிற்சி மொழியாக அனுமதிக்கலாம்.

இக்கருத்தைச் சுட்டிக் காட்டிய உயர்நீதிமன்றம் ஆங்கிலப் பயிற்சி மொழிக்கு உள்ள தனது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளது.

இனி பண்பாடு என்பது குறித்து ஒரு விசித்திரமான கருத்தையும் உயர்நீதிமன்றம் வெளியிட்டுள்ளது.

"பண்பாடு என்பது நேர்மை, ஒழுக்கம் பற்றிய மதிப்புகள், தனது பணியின்பால் முழு ஈடுபாடு, தேசத்திற்காகத் தியாகம் செய்தல், சகிப்புத்தன்மை, பொதுவாழ்வில் தூய்மை ஆகியவையே ஆகும். இந்த அடிப்படையான பண்பாட்டையே ஒவ்வொரு இந்தியனும் பாதுகாக்க வேண்டும், போற்ற வேண்டும்," என்று அது கூறுகிறது.

நீதிமன்றம் கூறுவது, தனி மனிதன் சமூகம் அல்லது தான் வாழும் தேசத்தின்பால் காட்ட வேண்டிய பரிவு கடமை பற்றியதாகும். இதுவே பண்பாடாகிவிடாது. பண்பாடு, மொழி, வரலாறு, சமூகம் போன்றவையோடு சம்பந்தப்பட்டதாகும்.

"அரசியல் சாசனத்தின் 30(1)ஆவது ஷரத்து சிறுபான்மை மக்கள் கல்வி நிறுவனங்கள் நடத்தவும், வழி வகை செய்கிறது. அவைகள் தரமான முறையில் நடத்தப்படுமானால் அவைகளுக்கு அங்கீகாரமும் இணைப்பும் வழங்கப்பட வேண்டும். நிறுவனங்கள் நடத்தும் உரிமையில் பயிற்சி மொழி சட்டப்படியான வரைமுறைக்கும் உட்பட்டே ஒழுங்குமுறைகள் இந்நிறுவனங்கள் மீது புகுத்த இயலும். தமிழ் அல்லது தாய்மொழியிலேயே கல்வி புகட்டப்படவேண்டும் என்று கூறுவது ஒழுங்குபடுத்துவதல்ல. அவைகளின் உரிமைகளைக் கட்டுப்படுத்துவதாகும்" என்று உயர்நீதிமன்றத் தீர்ப்பு கூறுகிறது.

மேலும் இயற்கை நீதிக்குப் புறம்பாக மேல்மட்டக் குழுவின் நடவடிக்கைகள் இருப்பதாகவும் நீதிமன்றம் கூறியிருக்கிறது. எது எவ்வாறாயினும், அரசாங்கத்தின் இந்தக் கொள்கை யாருக்காக உருவாக்கப்பட்டுள்ளது என்று காண நீதிமன்றம் இந்த மெட்ரிகுலேஷன் பள்ளிகளும், நர்சரி பள்ளிகளும் அரசாணைகளின் மூலமே உருவாக்கப்பட்டன ஒழுங்குபடுத்தப்பட்டன என்பதைக் காணத் தவறிவிட்டன. உதாரணமாக, மெட்ரிகுலேஷன் பள்ளிகளுக்கான ஒழுங்கு முறை விதிகள் அரசாணை எண்ணின்படி உருவாக்கப்பட்டதாகும். எனவே அரசாணையால் உருவாக்கப்பட்ட ஒழுங்கு முறைகள் வேறொரு அரசாணையால் மாற்றப்படலாம் என்பது பெறத்தக்கது.

இந்தி ஆதிக்கத்தைத் தடுக்க வேண்டுமானால் தமிழ் மற்றும் எல்லாப் பிராந்திய மொழிகளும் வளரவேண்டும். அத்தகைய வளர்ச்சிக்குத் தடையாக இருப்பது ஆங்கிலமே.

ஆனால் இன்றுள்ள நிலை என்ன? 1 முதல் 5 வரை எல்லாப் பள்ளிகளிலும் தமிழே பயிற்சி மொழியாக அதாவது கணிதம், விஞ்ஞானம், வரலாறு ஆகிய பாடங்களில் பயிற்சி மொழியாகத் தமிழே இருக்க வேண்டும் என்று கூறும் அரசாணை செல்லாது என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**தமிழக அரசின் மேல்முறையீடு**

தமிழ்வழிக் கல்விக்கு எதிரான சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பைத் தொடர்ந்து தீர்ப்புக்கு எதிரான ஊர்வலங்கள், கூட்டங்களைத் தமிழ் அமைப்புகள் தமிழகமெங்கும் நடத்தின. தமிழ்வழிக் கல்விக்கு ஆதரவாக அரசு இருந்தபோதிலும் பல தமிழக அரசியல் கட்சிகள் இத்தீர்ப்பு குறித்து கருத்துச் சொல்லவில்லை என்பது ஆழ்ந்து நோக்கத்தக்கது.

**உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு**

தீர்ப்பை எதிர்த்து, தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தது.

அவர்களது மனுவில் கூறப்பட்டிருந்தவை இவை: (இதழ்களின் கருத்துக்கள்)

"ஆங்கில வழிக் கல்வி பயிலும் மாணவர் சங்கம் - கர்நாடக அரசு ஆகியவைகளுக்கு இடையேயான வழக்கில் தொடக்கக்கல்வி வரை தாய்மொழியே பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட்டு கூறியுள்ளது. இந்த நிலையில் தமிழ் வழிக் கல்வி தொடர்பாகத் தமிழக அரசு பிறப்பித்த உத்தரவை ரத்து செய்ய ஐகோர்ட்டுக்கு உரிமை உள்ளதா?

மேல் முறையீட்டு வழக்கு 31.9.2000த்தில் விசாரணைக்கு வந்தது.

2001 வரை இருந்த தி.மு.க. அரசு மேல் முறையீடு செய்தது. இப்போது இந்த வழக்கைத் தொடர்ந்து நடத்தப்போவது அ.தி.மு.க. அரசு. 22.7.2001இல் நிலை என்ன? (தினமலர்)

அதுபற்றித் 'தினமலர்',

"தமிழ்ப் பயிற்றுமொழி தொடர்பாக வழக்கு நடத்திய தி.மு.க. அரசு உச்சநீதிமன்றத்தில் தாக்கம் செய்த அப்பீல் மனு, உச்சநீதிமன்றத்தில் நாளை விசாரணைக்கு வருகிறது. அந்த உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்று அப்போது வலியுறுத்திய ஜெயலலிதா இப்போது தமிழக முதல்வராக இருப்பதால், இந்த அப்பீல் வழக்கில் தமிழக அரசு என்ன நிலையை எடுக்கப்போகிறது?" என்ற பரபரப்பான கேள்வி எழுந்துள்ளது.

**அரசு மேல்முறையீடு**

சென்னை உயர்நீதிமன்றம் அளித்த இந்தத் தீர்ப்பை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் கடந்த ஆண்டு ஜூலை 10ஆம் தேதி தமிழக அரசு அப்பீல் மனுவை தாக்கல் செய்தது. சில தமிழ் வளர்ச்சி இயக்கங்களும் உச்சநீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்துள்ளன. அப்பீல் மனுக்களை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட உச்சநீதிமன்றம், இதற்கு பதிலளிக்குமாறு நோட்டீஸ் அனுப்பியது. இதையடுத்து, வழக்கில் சேர்க்கப்பட்டவர்கள் தங்கள் தரப்பு பதில் மனுக்களை உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர்.

இந்நிலையில், உச்சநீதிமன்றத்தில் நீதிபதிகள் ராஜேந்திரபிரசாத், தாஜு ஆகியோர் அடங்கிய 'டிவிஷன் பெஞ்ச்' முன்பு, இந்த அப்பீல் மனுக்கள் நாளை மீண்டும் விசாரணைக்கு வருகிறது. தமிழகத்தில் ஆட்சி மாறியுள்ள நிலையில், இந்த அப்பீல் வழக்கைத் தமிழக அரசு எப்படி அணுகப்போகிறது? என்ற கேள்வி எழுந்துள்ளது.

ஏனென்றால், கடந்த தி.மு.க., அரசு பிறப்பித்த தமிழ்ப் பயிற்று மொழி தொடர்பான உத்தரவை ரத்து செய்யக்கோரி ஆங்கிலப் பள்ளிகள் சார்பில் வாதாடியவர் சீனியர் வக்கீல் என்.ஆர்.சந்திரன். இவர் இப்போது தமிழக அரசின் அட்வகேட் ஜெனரலாக உள்ளார்.

இதேபோல், ஆங்கிலப் பள்ளிகள் சார்பில் ஆஜரான சீனியர் வக்கீல் முத்துக்குமாரசாமி, இப்போது தமிழக அரசின் கூடுதல் அட்வகேட் ஜெனரலாக உள்ளார்.

கடந்த தி.மு.க. அரசு பிறப்பித்த தமிழ் வழிக் கல்வி உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்று வலியுறுத்திய ஜெயலலிதா, இப்போது தமிழக முதல்வராக உள்ளார்.

ஏப்ரல், 2002இல் இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இப்போது தமிழக அரசு தன் கொள்கை முடிவைத் தெரிவித்திருக்கவேண்டும். ஆனால் அப்படி ஏதும் தெரிவிக்கப்படவில்லை.

விசாரணையின் போது நடந்தவற்றைத் 'தினமணி' (4.4.2002) இதழ்,

"அப்போது தமிழக அரசு வழக்கறிஞர், 'இப் பிரச்சினையை நீதிமன்றத்தின் முடிவுக்கே விட்டுவிடுகிறோம்' என்று தெரிவித்தார்.

'அவ்வாறு சொல்ல முடியாது. மேல் முறையீட்டு மனுவை அரசு திரும்பப் பெற்றுக் கொள்கிறதா, இல்லையா?' என்று நீதிபதிகள் கேட்டனர்.

'திரும்பப் பெறவில்லை' என்று அரசு வழக்கறிஞர் கூறினார்.

'சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்கள் தொடர்பாக 11 நீதிபதிகள் கொண்ட முழு பெஞ்ச் விசாரணை நடத்துகிறது. அந்த விசாரணை முடியும் வரை இந்த வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது' என்று நீதிபதிகள் அறிவித்தனர்".

**அரசு சரியாக வாதாடவில்லை - தமிழண்ணல்**

இதன் தொடர்பான கருத்தினைத் தமிழறிஞர் முனைவர் தமிழண்ணல் வாயிலாகப் பார்ப்போம்.

உயர்நீதிமன்றத் தீர்ப்புக்குப்பிறகு கண் துடைப்புப் போல உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து, திறம்பட வழக்காடாமல் விட்டுவிட்டது. இது போன்ற ஒரு வழக்கில் கர்நாடக அரசு உச்சநீதிமன்றத்தில் வழக்காடி வென்றது.

இன்றைய அரசு நீங்களே தீர்ப்பு கூறுங்கள் நாங்கள் வழக்காடவில்லை என்று தாய்மொழியை அந்தரத்தில் தொங்கவிட்டுவிட்டது. இந்நிலையில் உச்சநீதிமன்ற நீதிபதிகள் 'உங்கள் வழக்கைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுங்கள்' என அறிவுரை கூறியுள்ளனராம்.

பாரதம் வேற்றுமையில் ஒற்றுமை பேணும் நாடு. பல தேசியமொழி, சமய இனங்களின் கூட்டமைப்புள்ள துணைக் கண்டம் இது. ஒரு தேசிய இனத்தையோ, மொழியையோ சமயத்தையோ, சமமாகப் பாவித்து சமநிலை தந்து, அரவணைத்து, இணைந்து போவதே இந்திய ஒருமைப்பாட்டைக் காக்கும். இவற்றுக்கு வெறி என்று பெயர் சுட்டி அழிக்க நினைப்பது தவறு. ஒரு தேசிய இனத்தையோ, மொழியையோ, சமயத்தையோ அழுத்தவும், அழிக்கவும் நினைப்பவர்களே பிரிவினைவாதிகள் அதாவது பிரிவினைவாதத்திற்கு வித்திடுபவர்கள்.

இத்தீய சக்திகள் பிறரை அடிமைப்படுத்த முயன்று கொண்டே அழுத்தப்படுபவர்கள் வலி தாங்காமல், எகிறி எழும் பொழுதெல்லாம் மேலும் மேலும் அழிக்கவே முயல்வது. அரவணைக்காமல் அழுத்திவிடலாம் என ஒரு குடியாட்சி நாட்டில் கடுமை காட்டுவது இந்திய இறையாண்மையைச் சிதைக்கும், ஒருமைப்பாட்டை அழிக்கும். இவர்களே பாரதத்தின் பகைவர். முடியாட்சிக் காலத்தில் எல்லாம் எதிர்ப்பை முறியடித்த தமிழும் குடியாட்சி காலத்தில் குடிமுழுகிப் போகும் என எதிர்பார்ப்பது அப்பட்டமான தவறு.

**மெட்ரிக் பள்ளிகளினால் தீமைகள் என்ன? தமிழ் வழிக் கல்வியினால் நன்மைகள் என்ன?**

கல்வியாளர்கள் உலகளவில் தாய்மொழி வழிக் கல்வியைத்தான் ஆதரித்துப் பேசி வருகின்றனர். தாய்மொழி வழிக் கல்வி அடிப்படை உரிமையென்றால், இது குழந்தைகளின் உரிமை, கல்விக்கான உரிமை. இதைப் பெற்றோருக்கு ஒதுக்கிவிட முடியாது. மெட்ரிக் பள்ளிகளுக்கும் இந்த உரிமையை வழங்கிவிட முடியாது. இப்படி வழங்குவது சரியான கல்விக் கொள்கையானது.

பணம் பண்ணுவதுதான் மெட்ரிக் பள்ளிகளின் முதன்மையான கொள்கை. மாணவர்களின் தலையில் வெற்று விவரங்களைத் திணித்து, அவர்களின் முதன்மை சுதந்திர உணர்வு, கலைத்திறன், ஆளுமை வளர்ச்சி முதலியவற்றை அழிப்பதில்தான் இவர்கள் முனைந்துள்ளனர். ஆங்கிலத்தையே வளர்ப்பது இந்த மெட்ரிக் பள்ளிகளின் நோக்கமாகக்கூட இருக்க முடியாது. இவர்களிடம் கல்வி கற்று மீண்டும் ஆங்கிலத்தின் மூலம் அறிவியல், கணினி முதலியவற்றில் தேர்ச்சி பெற்று, நம் மாணவர்கள் அமெரிக்காவுக்கோ, ஐரோப்பாவுக்கோ சென்று அவர்கள் பொருளியல் வளர்ச்சிக்கும் சேவை செய்கிறார்கள். மேற்கத்திய நாடுகள் உலகளாவிய ஆதிக்கம் பெறுவதற்கு இவர்கள் அடிமைகளாய்ச் சேவகம் செய்கிறார்கள். இந்தியா, தமிழகத்தின் மீது இவர்களின் ஆதிக்கம் இன்னும் கடுமையாவதற்கு இவர்களின் வேலை பயன்படும். இந்த அடிமைத்தனத்தை வளர்ப்பதற்குத்தான் மெட்ரிக் பள்ளிகள் துணைபோகின்றன. அரசுகளும் இந்த அடிமைத்தனத்தைத்தான் விரும்பி ஏற்கின்றன.

வரலாறு மற்றும் பண்பாட்டுச் சூழலிலிருந்துதான் நாம் எதையும் உள்வாங்கிக் கொள்கிறோம். மண்ணையும், உயிரினங்களையும், மக்களையும் இயற்கையையும் நேசிப்பதற்கான கல்விதான் உண்மையான கல்வியாக இருக்க முடியும். ஆங்கிலத்தின் வழியே கற்பதன் மூலமும் தமிழ்ச் சூழலை ஒதுக்கிவிட நேர்கிறது. இது மாணவர்களை மலடாக்குகிற, இயந்திரமாக்குகிற முயற்சி.


இந்த மாணவர்களிடம் பண்பு தங்க முடியாது. பணம் தான் இவர்களை ஊக்குவிக்கும். வசதியுள்ளவர்கள் தான் இந்தக் கல்வியைப் பெறமுடியும். வசதியில்லாத பெரும்பான்மையான தமிழ் மக்களை இவர்கள்தான் எதிர்காலத்தில் அதிகாரம் செய்வார்கள். தமிழ் மக்களின் அடிமைத் தன்மை அதிகரிப்பதில்தான் இதுபோய் முடியும் என்று கவலையுறுகிறார்.

**பீனிக்ஸ் பறவை கலைஞர் கருணாநிதி**

வழக்கு நிலுவையில் உள்ளது. மீண்டும் ஆட்சிக்கு வந்து கலைஞர் முதல்வரான பிறகு தமிழ் நாட்டில் பொறியியல் படிப்புகள் தமிழில் தொடங்கப்பட்டன. சிவில், மெக்கானிக் ஆகிய பிரிவுகளில் தமிழ்வழிப் பொறியியல் படிப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டு (2008) அதில் 900 மாணவர்களை அனுமதிக்க ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால் அடுத்த ஆண்டிலேயே ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. இந்நிலையில் பாடநூல்கள் முழுமையாக தயாராகவில்லை. தயாரித்த நூல்களும் கையேடு பேரில் இருந்தன. அவைகளையே நகல் எடுத்து மற்றவர்களும் படிக்க நேர்ந்தது. இப்படியான ஆட்சி மாற்றங்களினால் தமிழ் வளர்ச்சி, காலம் காலமாக தொடர் பேரிடிகளைக் கண்டு வருவதை தமிழர்கள் ஏன் கண்டு கொள்வதில்லை என்பது நாம் மொழி மீது கொண்டுள்ள அக்கறையைக் காட்டுகிறது. எனலாமா?

கட்டுரையாளர், சென்னை டாக்டர் எம்.ஜி.ஆர்.
மருத்துவப் பல்கலைக்கழக சிறப்புநிலைப் பேராசிரியர்.

# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்




₹ 310/-




₹ 20/-




₹ 70/-




₹ 100/-



நிகழ்வு

# தன்னனுபவங்களின் அடிப்படையிலான திருக்குறள் உரைநூல்

**நீதியரசர் ஆர்.மகாதேவன்**

எழுத்தாக்கம்: **ஜி.சரவணன்**

11-6-2022 அன்று சென்னை அண்ணா நூற்றாண்டு நூலக அரங்கில் நியூ செஞ்சுரி புத்தக நிறுவன வெளியீடாக ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரி திரு. இரா.பூரணலிங்கம் அவர்களின் 'வாழ்வில் வளம் பெற வள்ளுவம்' எனும் நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. நியூ செஞ்சுரி புத்தக நிறுவன மேலாண்மை இயக்குநர் சண்முகம் சரவணன் அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு வருகை புரிந்தோரை நியூ செஞ்சுரி புத்தக நிறுவனப் பொதுமேலாளர் தி.ரத்தினசபாபதி அவர்கள் வரவேற்றார்.

இந்நிகழ்வுக்குத் தலைமை தாங்கிய மாண்பமை நீதியரசர் ஆர்.மகாதேவன் அவர்கள் நூலை வெளியிட்டார். முதல் பிரதியை எம்.ராஜாராம் ஐஏஎஸ் (ஓய்வு) அவர்கள் பெற்றுக்கொண்டார். முனைவர் மு.ஆறுமுகம் அவர்கள் நன்றி கூறினார்.

**நீதியரசர் ஆர், மகாதேவன் அவர்கள் ஆற்றிய உரை**

நியூ செஞ்சுரி புத்தக நிறுவன வெளியீட்டு விழாவில் ஆகச்சிறந்த ஆளுமைகளும் அறிஞர்களும் கூடியிருக்கக்கூடிய இந்த நாளில் கலந்துகொள்வதில் ஆகப்பெரும் மகிழ்ச்சி எனக்கு.

வள்ளுவத்தைப் பற்றிய இந்த நூல் ஒரு அரசு அதிகாரியாக மாநில மத்திய அரசுத்துறைகளில் பணியாற்றி பல்வேறு நிறுவனங்களில் மூத்த அலுவலராகவும் பணியாற்றி தனக்குக் கிடைத்த அனுபவத்தை திருக்குறளின் வாயிலாகப் பதிவு செய்திருக்கிறார் திரு.பூரணலிங்கம் அவர்கள். இந்த முயற்சியை சாத்தியப்படுத்தியுள்ள நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் சண்முகம் சரவணன் அவர்களோடும் முதல் நூலைப் பெற்றுக்கொண்ட திரு. ராஜாராம் அவர்களோடும் திரு ஆறுமுகம் அவர்களோடும் வரவேற்புரை நல்கிய பொதுமேலாளர் ரத்தினசபாபதி அவர்களோடும் இந்த விழாவிலே கலந்துகொள்வது உண்மையிலேயே மகிழ்ச்சி தரக்கூடிய ஒரு நிகழ்வாக இருக்கிறது.

அரசுப்பணியிலே இருக்கக்கூடிய ஒரு அதிகாரி தான் வகித்த பதவிகளின் அடிப்படையில் தான் அடைந்த அனுபவங்களை எந்தவிதத்தில் பதிவு செய்திருக்கிறார் என்பதற்கு இந்த நூல் விடைதரும். டேவிட் டீன் ஷல்மன் எழுதிய 'தமிழ் எ பயாக்ரபி' எனும் நூலைப் படித்தபோது அதில் தமிழைப்பற்றி, தமிழ் மொழியைப் பற்றி, தமிழ் மொழியிலே

இதுவரை வந்திருக்கக்கூடிய இலக்கியங்களைப் பற்றி, திருக்குறளைப் பற்றி எழுதப்பட்டிருந்த விஷயங்களில் எல்லாம் தனது கவனத்தை செலுத்தியதால் அதனால் ஈர்க்கப்பட்ட திரு பூரணலிங்கம் அவர்கள் திருக்குறளைக் கையிலெடுத்து தன் வாழ்க்கையைத் தான் வகித்த பதவிகள் சார்ந்து அவற்றை இணைத்துப் பதிவு செய்திருக்கிறார்.

ஏன் திருக்குறளைக் கையிலெடுக்கவேண்டும் என்ற கேள்வியை எழுப்பினால் இரண்டாயிரம் ஆண்டுகளைக் கடந்துநின்று காலவெள்ளத்தால் அழியப்படாத பொக்கிஷமாகக் கருதப்படவேண்டியது திருக்குறள்.

தமிழிலே எழுதப்பட்டிருந்தாலும் இந்த உலகத்திலுள்ள அனைத்து நாடு சார்ந்த மனிதர்களுக்கும் பொருந்தக்கூடியதான ஒரு படைப்பு திருக்குறள். தான் சார்ந்த நாடு, மொழி, மக்கள், இறை, சமயம், சமூகம் போன்ற எந்தக் குறிப்புகளையும் தராமல் உலகத்திலே இருக்கக்கூடிய அத்தனை மாந்தருக்குமே பொருந்தக்கூடியதாக வந்திருக்கக்கூடிய படைப்பு என்று கொண்டால் உலகத்தின் முதல் படைப்பு திருக்குறள் என்றுதான் நாம் பதிவு செய்யவேண்டும். (கைதட்டல்)

இப்படித் தனக்கான, தான் சார்ந்த அடையாளங்கள் எதுவுமே இல்லாமல் அணுக்கதிர் தத்துவத்தால் இயங்கக்கூடிய இந்த உலகம் சார்ந்த விஷயங்களைக் கையிலெடுத்து மாந்தர்களுடைய மனமாச்சரியத்தை அகற்றி, மனிதர்கள் இப்படித்தான் தங்கள் வாழ்க்கையை வாழவேண்டும் என்கிற வகைமுறைகளைத் தந்து, இறையைப் பற்றி, நாட்டைப் பற்றி, மன்னனைப் பற்றி, அமைச்சைப் பற்றி, ஒரு நாடு எந்தவிதத்திலே தனது மக்களை கண்காணிக்கவேண்டும் அவர்களைக் காப்பாற்றவேண்டும், பராமரிக்கவேண்டும் என்பனவற்றைப் பற்றி, ஒரு அரசு எப்படிச் செயல்படவேண்டும் என்பதைப் பற்றி, வரிகள் விதிக்கப்பட்டு ஒரு நாட்டினுடைய ஆட்சிமுறை எப்படி செயல்படவேண்டும் என்பதைப் பற்றி, ஒரு நாட்டைப் பாதுகாக்கவேண்டிய அனைத்துக் கூறுகளைப் பற்றி...

தனிமனிதன் தன் வாழ்க்கையை எப்படி அமைத்துக்கொள்ளவேண்டும், அவனுக்கான இல்வாழ்க்கை எந்தவிதத்திலே சிறக்கவேண்டும், அவனுடைய மக்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கவேண்டும், மக்களைப் பெற்றவர்கள் அவர்களுக்கான பணியாகக் கருதவேண்டியவை எவை? முறையாக வளர்க்கப்பட்ட பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்கு ஆற்றவேண்டிய பணிகள் என்ன? சமுதாயம் சார்ந்த விஷயங்களிலே மனிதர்களுடைய மனம் எந்த விதத்திலே செல்லவேண்டும்? சமுதாயத்திற்கு அவர்கள் ஆற்றவேண்டிய பணி என்ன? நட்பு என்றால் என்ன? எது ஒழுக்கம் என்று அறியப்படும்? அறச்சிந்தனை என்றால் என்ன? அறத்தை ஒழுகக்கூடிய வாழ்க்கையைப் பற்றி இந்த மண் எப்படிப்பட்ட சித்தாந்தங்களைத் தந்திருக்கிறது?

அவற்றிற்கான கூறுகளையெல்லாம் உள்ளடக்கி திருக்குறள் தந்திருப்பதுபோல மனித வாழ்க்கைக்கு முக்கியத்துவம் தந்திருக்கக்கூடிய ஒரு படைப்பு உலகில் இல்லை என்று சொல்லிவிடலாம். அதனால் அந்தக் கருத்துகளால் ஈர்க்கப்பட்ட பூரணலிங்கம் அவர்கள் தனது வாழ்க்கைப் பயணத்திலே ஏற்பட்ட பல்வேறு அனுபவங்களை நூறு திருக்குறள் பாக்களின் மூலமாக நமக்கு இந்த நூலாக மாற்றித் தந்திருக்கிறார்.

திருக்குறள் உரைகள், திருக்குறள் சார்ந்த கதைகளையொட்டிய நூல்கள் என்று நூற்றுக்கணக்கிலே இருக்கின்றன. நானூறுக்கும் மேற்பட்ட உரைகள் வந்திருக்கின்றன. நறிக்குறவர்கள் பேசக்கூடிய வக்ஃபோலி என்ற மொழியில்கூட திருக்குறள் மொழிமாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. அரபு மொழியிலே அதனை அற்புதமாக மொழிமாற்றம் செய்த திரு அசோக் இங்கு வந்திருக்கிறார். அற்புதமான மொழிமாற்ற சூழ்ந்த உரைகள் திருக்குறளுக்காக வந்திருக்கின்றன.

இப்படிப்பட்ட இந்த திருக்குறளை ஆட்சிபீடத்திலே இருந்த காரணத்தால், ஆட்சி புரியக்கூடியவர்களோடு இணைந்து பயணித்த காரணத்தினாலும் தனக்கே உரித்தான சுதந்திரத்தைக் கையிலெடுத்து தான் பணியாற்றிய பல்வேறு துறைகளில் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களை நூறு குறட்பாக்களைத் தேர்வு செய்து இந்த நூலைத் தந்திருக்கிறார்.

அவருடைய முன்னுரையிலே தமிழையும் தமிழ் இலக்கியங்களையும் திருக்குறளையும் நீண்ட நாட்களாக நான் படித்தவனில்லை. சமீபத்திலே நான் படித்துப் பார்த்த ‘தமிழ் எ பயாக்ரபி’ எனும் நூலால் தாக்கம் ஏற்பட்டு திருக்குறளைக் கற்று எந்த அளவுக்கு மானுட வாழ்க்கையில் திருக்குறளின் தாக்கம் இருக்கிறது என்பதை உணர்ந்த காரணத்தினால் இந்த நூலை நான் வடித்திருக்கிறேன் என்று அவர் பதிவு செய்திருக்கிறார்.

இது அவருக்கு மட்டுமல்ல, திருக்குறளைப் படித்துப் பார்த்த உலகம் சார்ந்த அத்தனை விதமான அறிஞர்களுக்கும் ஒரே விதத்திலே தோன்றிய ஓர் உணர்வுதான். அப்படிப்பட்ட ஒரு அற்புதமான படைப்பு திருக்குறள். (கைதட்டல்)

ஒரு காலகட்டத்திலே மன்னர்கள் நாட்டை ஆண்டுவந்த காரணத்தினால் மன்னர்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கவேண்டும்? மன்னர்கள் என்றால் இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிறவர்கள் என்று நாம் பொருள்படுத்திக் கொள்ளலாம்.

“ தனக்கான இருப்பை முன்னிறுத்த வேண்டும் என்ற சிந்தனை இல்லாமல் வள்ளுவத்தை உணர்ந்து பார்த்த காரணத்தினால் வள்ளுவத்தின் போக்கு மானுடத்தைத் தவிர வேறு எந்தத் திசையிலும் இல்லை என்பதையும் உணர்ந்துவிட்ட காரணத்தினால் வாழ்வில் வளம் பெற வள்ளுவம் எனும் இந்த நூல் உதித்திருக்கிறது. ”



ஆட்சியிலே இருக்கிறவர்கள் எப்படிப் பட்டவர்களாக இருக்கவேண்டும்? அரசை செலுத்தக்கூடியவன் எப்படிப்பட்டவனாக இருக்கவேண்டும்? என்பதிலிருந்து துவங்கி வரி விதித்தல், விதிக்கப்பட்ட வரியை முறையாக ஈட்டுதல், ஈட்டிய வரியை பகுத்துண்டு பலவழிகளில் பயன்படும் வகையில் அதனைப் பிரித்து செயல்படுத்துதல் என்று ஒரு ஆட்சி நல்லமுறையிலே நடைபெறவேண்டும். அந்த ஆட்சியை நடத்தக்கூடியவர்களுக்கு உடனிருப்பவர்கள் நல்லவர்களாக, அறிவு சார்ந்தவர்களாக இருந்தால் அந்த ஆட்சி சிறந்த முறையிலே நடைபெறும். நல்ல ஆட்சி நடைபெறக்கூடிய ஒரு நாட்டில் வாழக்கூடிய மக்கள் அறச்சிந்தனை உடையவர்களாக வாழ்வார்களேயானால் அந்த மண் சார்ந்த விஷயங்கள் தானாகவே நல்லனவற்றை நாடிச் செல்லும்.

அப்படிப்பட்ட வாழ்க்கையை வாழக்கூடிய மக்கள் அவர்கள் சார்ந்த உறவினர்கள் எந்தவிதத்திலே தங்களுடைய வாழ்க்கையை அமைத்துக்கொள்வார்கள், அவர்களுடைய அன்பு சார்ந்த, அறம் சார்ந்த வாழ்க்கை எந்தவிதத்திலெல்லாம் செல்லும் என்பனவற்றையும் பதிவு செய்துள்ளது. இப்படிப்பட்ட வாழ்க்கையை வாழ்ந்தால் மனிதனுக்கு இறை என்கிற அடையாளம் தேவையில்லை. இறைவனைத் தாண்டிய ஒன்று இருக்குமானால் அது நல்ல வாழ்க்கையை வாழக்கூடிய மனிதர்கள்தான் என்று திருக்குறளிலே பதிவு செய்ததை உணர்ந்து இந்த நூலினுடைய பகுதிகளை அவர் வகுத்திருக்கிறார்.

அந்தக் காலகட்டத்திலே நாட்டை ஆளக்கூடிய மன்னனுக்கு அறிவுரை சொல்லவேண்டுமானால் அதற்குரிய மனத்திண்மை உள்ள அமைச்சர்கள் உடன் இருத்தல் வேண்டும்.

இவர் நூலின் முதலாவது எடுத்துக்கொண்ட முதல் தலைப்பே ஒரு மன்னன் எதைச் செய்யவேண்டும்? எதைச் செய்யக்கூடாது? என்ற கருத்து பொதிந்த தலைப்பாக அவர் கையாண்டிருக்கிறார்.

ஒரு சங்ககால புறநானூற்றுப் பாடலைச் சொன்னால் அதிலிருந்து இந்தத் திருக்குறளின் தன்மை என்ன என்பதை உணர்ந்துகொள்ளமுடியும்.

அறச்சிந்தனையில் வாழக்கூடிய ஒரு மன்னன் தன் மக்களுக்கு மட்டுமல்ல, தன்னுடைய நாட்டிற்கும் தன்னுடைய சந்ததியினருக்கும் சேர்த்து மிகப் பெரிய நல்லனவற்றைச் செய்வான் என்பதாக அந்த சங்ககாலப் புலவன் பதிவு செய்கிறான்.

உன்னுடைய வாழ்க்கையிலே நீ சந்திக்கக் கூடியவர்களைப் பற்றி யாரேனும் ஒருவர் ஏதேனும் கூறினால் அதனை அந்த விதத்திலேயே எடுத்துக்கொள்ள வேண்டாம். அதில் இருக்கக்கூடிய உண்மைத்தன்மையை உணர்ந்து, அந்தக் கருத்துகள் எந்த விதத்திலே இருக்கின்றன என்று ஆராய்ந்து தெளிந்து. யாருக்கு எதிராக ஒரு கருத்து சொல்லப்படுகிறதோ அந்தக் கருத்தைக் கூறியவர்களுக்கு வழங்கப்படக்கூடிய தண்டனையைத் தந்து, தண்டனையைப் பெற்றுவிட்ட அந்த மனிதன் தன் தவறை உணர்ந்து உன் எதிரிலே வந்து நின்றால், வழங்கவேண்டிய தண்டனையைக் குறைத்து அன்பு செலுத்தக்கூடியவனாக நீ இருத்தல் வேண்டும் என்ற கருத்தைப் பதிவு செய்த ஒரு புறநானூற்றுப் பாடல் ஊண்பொதி பசுங்குடையார் என்ற புலவர் பாடியது.

திருக்குறளைப் பற்றிப் பேசுகையிலே பழந்தமிழ் இலக்கியங்கள் சார்ந்த கருத்துகளையும் நாம் பதிவு செய்துதான் ஆகவேண்டும்.

அந்தப் பாடல்

**வழிபடுவோரை வல் அறிதீயே;**
**பிறர் பழி கூறுவோர் மொழி தேறலையே;**
**நீ மெய் கண்ட தீமை காணின்;**
**ஒப்ப நாடி, அத் தக ஒறுத்தி;**
**வந்து, அடி பொருந்தி,**
**முந்தை நிற்பின்,**
**தண்டமும் தணிதி, நீ பண்டையின் பெரிதே**

என்று சொல்லிவிட்டு,

**நெய்தலங்கானல் நெடியோய்!**
**எய்த வந்தனம் யாம்; ஏத்துகம் பலவே!**

என்று முடிப்பார் அந்தப் புலவர். இந்தப்பாடலின் பொருள்,

பிறர் மீது சொல்லப்பட்ட பழியை அவ்வாறே ஏற்றுக்கொள்ளாதே, யார் யாரைப் பற்றி என்ன சொன்னாலும் அதன் உண்மைத் தன்மையை உணர்ந்து அதற்குரிய செயலை நீ செய்தல் வேண்டும். குறையிருப்பின் தண்டனையும் அதனை உணர்ந்துவிட்டால் தண்டனையைக் குறைத்தலையும் செய்யும் நடுநிலைமையான தன்மை உனக்கு இருத்தல் வேண்டும் என்பதாக அந்தப் பாடல் அமைகிறது.

இந்தப்பாடலை வைத்து திருக்குறளோடு ஒப்பிட்டுப் பார்த்தால் மன்னன் பிறர் சொல்லக்கூடியவற்றைக் கேட்டுவிட்டு அந்தக் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு எந்த நடவடிக்கையும் எடுத்திடல் கூடாது. ஆராய்ந்து பார்த்து தவறு இருப்பின் அதற்குரிய தண்டனையை வழங்கி அந்தத் தண்டனைக்கு உரியவன் செய்த தவறை உணர்ந்து திருந்துகையிலே தண்டனையைக் குறைத்து அவன் திருந்தி வாழ்தலுக்குரிய அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தல் வேண்டும் என்பதாக முடியும் இந்தப் பாடல்.

மனிதர்களுடைய வாழ்க்கையை உணர்ந்துவிட்ட ஒரு மன்னனுக்கு எப்படிப்பட்ட மனிதர்கள் வேண்டுமானாலும் உன் எதிரிலே வரலாம்.

**சிறப்பில் சிதடும், உறுப்பில் பிண்டமும்,**
**கூனும், குறளும், ஊமும், செவிடும், மாவும்,**
**மருளும் உளப்பட வாழ்நர்க்கு எண்பேர் எச்சம்**
**என்றிவை எல்லாம் பேதைமை அல்லது**
**ஊதியம் இல் என**
**முன்னும் அறிந்தோர் கூறினர்; இன்னும்**
**அதனால், அறனும் பொருளும் இன்பமும்**
**மூன்றும்**
**ஆற்றும், பெரும! நின் செல்வம், ஆற்றாமை**
**நின் போற்றா மையே!**

என்பது அடுத்த பாடல்.

எட்டுவிதமான குறைகளைக் கொண்டவர்கள் மனிதர்கள். ஈட்டிவைத்த செல்வங்கள் காணாமல் போகும். எழுப்பிவிட்ட மாட மாளிகைகள் நிலைநிறுத்தக்கூடியவை அல்ல. உங்களால் சாதிக்கமுடியும் என்றும் அல்லது சாதித்துவிட்டதாக நினைத்தவையும் எல்லாம் ஒரு காலட்டத்திலே அழிந்துபோகும்.

மனிதர்களாகப் பிறந்தவர்கள் எட்டுவிதமான குறைகளைக் கொண்டவர்களாக இருக்கக்கூடியவர்கள்தான். அப்படிப்பட்டவர்களை நோக்கி கருணை பொங்கும் உள்ளத்தோடு உன்னிடம் இருக்கக்கூடிய, முறையாக ஈட்டிய செல்வங்களை அவர்களுக்கு வகுத்துக் கொடுத்து உன் ஆட்சியின் கீழ் மகிழ்ச்சியானவர்களாக அவர்கள் வாழக்கூடிய வழிமுறையை நீ தருதல் வேண்டும் என்று அந்தப் பாடல் பொருள் தரும்.

இந்தப் பாடலையொட்டி மனிதர்களைக் காப்பாற்றவேண்டிய ஒரு அரசு இப்படித்தான் தனக்கான திட்டங்களை வகுக்கவேண்டும் என்பதைப் பதிவு செய்து தனது அடுத்த கட்டுரையை இந்த உதாரணங்களின் மூலமாக வடித்திருக்கிறார் திரு பூரணலிங்கம் அவர்கள்.

சமுதாயத்தின் மீது சிறந்த சிந்தனை உள்ள ஒருவரால் மட்டுமே இந்த விதத்தில் பார்க்கமுடியும் (கைதட்டல்).

அரசுக் கட்டிலிலே வந்து அமரக்கூடியவர்கள் யாராக வேண்டுமானாலும் இருக்கலாம்.

கம்பன் ஒரு பாடலிலே சொல்வான்.

அரசனுக்கு அமையக்கூடிய அமைச்சன் அனைத்தும் அறிந்தவனாகவும் சிறந்தவனாகவும் இருத்தல் வேண்டும். எப்படியென்று அந்தப்பாடல் கூறும்.

**‘உமைக்கு நாதற்கும் ஓங்கு புள் ஊர்திக்கும்**
**இமைப்பு இல் நாட்டம் ஓர் எட்டு உடையானுக்கும்**
**சமைத்த தோள் வலி தாங்கினர் ஆயினும்**
**அமைச்சர் சொல் வழி ஆற்றுதல் ஆற்றலே.**

உமைக்கு நாதனாகிய சிவபெருமானுக்கும் மிக உயரத்திலே பறக்கும் உன்னதத் தன்மையுடைய கருடனை வாகனமாகக் கொண்ட விஷ்ணுவிற்கும் நான்கு தலைகளைக் கொண்டதால் எட்டு கண்களுடைய பிரம்மனுக்கும் உடனிருந்து தோள்வலி தாங்கிய தன்மை உடையவர்களாகவே இருந்தாலும், அத்தகைய சிறப்புமிக்க தன்மையை உடைய ஒரு மன்னன் இருந்தாலும் அமைச்சர் சொல்வழி ஆற்றுதல் ஆற்றலே என்று முடியும் அந்தப் பாடல்.

நல்லனவற்றை இதுதான் என்று சொல்லி அந்த வழிமுறைகளை வகுத்துக் கொடுத்து அந்த அரசாட்சி சிறந்த முறையிலே நடைபெறுவதற்குரிய வழிகளை சொல்லக்கூடிய அமைச்சனின் உதவி எந்தப் பெரிய மன்னனுக்கும் தேவை, ஆட்சி செலுத்துபவர்களுக்கும் தேவை என்பதாக முடியும் அந்தப் பாடல்.

ஒரு நாடு எப்படி துலங்கவேண்டும், ஒரு மன்னன் எப்படி ஆட்சி செய்யவேண்டும் என்பதற்கான பாடல்.

இந்தப்பாடல் சார்ந்த திருக்குறளை அற்புதமான கட்டுரையாக இந்த இடத்திலே யாத்துத் தந்திருக்கிறார் திரு பூரணலிங்கம் அவர்கள்.

திருக்குறளின் மேன்மையே மனிதர்களை பயமுறுத்தும் எந்தவிதமான முயற்சியையும் நீங்கள் காணமுடியாது என்பதுதான். மனிதர்கள் தங்களை உணர்ந்து, தங்களின் வாழ்க்கையின் தன்மையை அடுத்தகட்டத்திற்கு எடுத்துச் சென்று வாழுகின்ற வாழ்க்கை அறச்சிந்தனை மிக்கதாக மாறுமானால் இறைவனையே கண்டுவிடமுடியும் என்பதாகப் பதிவு செய்து, இதுதான் இறை என்று சொல்லாமல் இறைத்தன்மை என்றால் என்ன என்று சுட்டிக்காட்டிய அற்புதத்தை நிகழ்த்தியது திருக்குறள்.

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப்படும்**

அவன், யார் தெய்வம் என்று சொல்லவில்லை. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் என்று கூறி அந்த தெய்வத்து இணையான வாழ்வை உங்களால் வாழமுடியும் என்று காட்டிவிடுகிறார்.

**தெய்வத்தான் ஆகாதெனினும் முயற்சிதன்**
**மெய்வருத்தக் கூலி தரும்**

என்றும் அடுத்து சொன்னான்.

இறைவனாலேயே முடியாத விஷயமாக இருக்கட்டும், நீங்கள் முயற்சி செய்து பாருங்கள், இறையைக் காட்டிலும் சிறந்தவர்களாக நீங்கள் மாறுவீர்கள் என்று அடுத்த குறளைத் தந்தார் வள்ளுவர்.

இவன் இறையைக் கண்டு பயந்தவனில்லை. வாழ்க்கையில் மனிதர்கள் தங்களை உணர்தல் வேண்டும். சக மனிதர்களை நேசித்தல் வேண்டும். சக மனிதர்கள் மீது அன்பு செலுத்தக்கூடிய வகையில் ஒரு மனிதன் மாறிவிட்டால் அந்த வாழ்க்கைதான் வாழ்வதற்கான உண்மையான தன்மையுடையது என்பதாகப் பதிவு செய்தது திருக்குறள்.
அதனால்தான்,

**இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின்**
**பரந்து கெடுக உலகியற்றியான்**

என்ற குறளை வள்ளுவன் வடித்தான்.

எந்த ஒரு தனிமனிதன் தன் வாழ்க்கையை நடத்தமுடியாத நிலைமைக்குச் சென்று இரந்துதான் தன் வாழ்க்கையைக் கழிக்கவேண்டும் என்ற சூழ்நிலை உருவாகிறதோ அந்த நேரத்திலே இவ்வுலகத்தைப் படைத்தவனாக அறியப்படக்கூடிய இறைவனே நீ ஒழிந்து போ என்று இறைவனுக்கு சாபமிட்டு மனிதத்தன்மையை உயர்த்திக்காட்டியவன் வள்ளுவன்.

இதனை அற்புதமான ஒரு கட்டுரையின் மூலமாக மாறுபட்ட தன் பணி சார்ந்த விஷயமாக மாற்றிக் காட்டியிருக்கிறார் திரு பூரணலிங்கம் அவர்கள். (கைதட்டல்)

வாழ்க்கை மனிதர்களை ஒரேவிதத்திலே எடுத்துச் செல்வதில்லை. உறவுகளும் உதவிகளும் உங்களை நாடி வரலாம். தேடி வரலாம். உங்களை விட்டுச் செல்லலாம்.

வள்ளுவன் சொல்லுவான்.

**எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்ந்நன்றி கொன்ற மகற்கு.**

இந்தக் குறளுக்கு இணையான ஒரு சங்கப்பாடல் ஒன்றிருக்கிறது,

பல வரிகளில் பல பக்கங்களில் விளக்கம் தந்து வாழ்க்கையை உங்களுக்கு விளக்குவதற்கான புத்தகங்களை எடுத்துக் கொடுப்பதைக் காட்டிலும் இரண்டு வரிகளிலே உங்களுக்கு உங்களைக் காட்டிக் கொடுத்த ஒப்பற்ற படைப்பு திருக்குறள்.

அதனால் ஈர்க்கப்பட்டதால் இவர் நன்றியறிதலை இந்த நூலிலே ஒரு அற்புதமான கட்டுரையாக வடித்துக் காட்டியிருக்கிறார். அந்த சங்கப்பாடல் விளக்கம் இதுதான்.

நீங்கள் எதை வேண்டுமானாலும் செய்யலாம். பாலைத் தரக்கூடிய பசுவின் மடியை அறுத்து எறியலாம். கொடும் பாதகமான அந்த செயலுக்கு இயற்கை உங்களுக்கு மன்னிப்பை அளிக்கிறது. கர்ப்பிணியான ஒரு பெண்ணின் கருவைக் கலைத்துவிடமுடியும் ஒருவனால். அந்த பாதகச் செயலுக்கும் இயற்கை உங்களுக்கு மன்னிப்பை வழங்குகிறது. கற்றறிந்த சான்றோரை, வாழ்க்கை என்னவென்பதை உணர்த்தி அந்த வாழ்க்கை வாழ்வதற்கான வழிமுறைகளைச் சொன்ன மக்களை, அறிவில் சிறந்தவர்களை நீங்கள் அழிக்கலாம். அதற்கும் இயற்கை உங்களுக்கு விடுதலை தருகிறது. ஆனால் உள்ளன்போடு ஒருவன் செய்த நன்றியை மறந்தால் இந்த நிலமே இரண்டாகப் பிளந்து நிற்பினும் அவர்களுக்கு வாழ்க்கையில் உய்வு கிடையாது என்ற அற்புதமான சங்கப்பாடல்.

**'ஆன் முலை அறுத்த அறனிலோர்க்கும்,**
**மாண் இழை மகளிர் கருச் சிதைத்தோர்க்கும்,**
**................ தப்பிய கொடுமையோர்க்கும்,**
**வழுவாய் மருங்கில் கழுவாயும் உள' என,**
**'நிலம் புடைபெயர்வது ஆயினும், ஒருவன்**
**செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்' என,**
**அறம் பாடின்றே**

என்பது அந்தப் பாடல்.

உலகத்தின் இலக்கியங்கள் பல. லத்தீன் அமெரிக்கப் படைப்புகளை நீங்கள் எடுத்துப்

பார்த்தால் இலக்கியத்தின் போக்கு எப்படியெல்லாம் மாறியிருக்கிறது என்பதை நம்மால் உணர்ந்துகொள்ளமுடியும். பின்நவீனத்துவவாதிகள் ஏராளமான படைப்புகளைத் தந்திருக்கிறார்கள். ஃபூக்கோவை, நீட்சேவை நீங்கள் வாசித்துப் பார்த்தால், அந்த காலகட்டத்திலே வலதுசாரி சிந்தனையாளராக அறியப்பட்ட மார்ட்டின் ஹைடேக்கரின் படைப்புகளை நீங்கள் படித்துப் பார்த்தால் சார்த்தரின் படைப்புகளின் தாக்கங்களை எடுத்துப் பார்த்தால் புரியும், தி கிளீன் வெல் லைட்டட் ப்ளேஸ் *(A Clean Well Lighted Place)* என்ற எர்னஸ்ட் ஹெமிங்வேயின் படைப்பிலே இருக்கும் வெறுமை எனும் அம்சத்தை எடுத்துப் பார்த்தால் பலவிதமாகச் செல்லும் ஒரு பாடலிலே

*"Our nada who art in nada, nada be thy name thy kingdom nada thy will be nada in nada as it is in nada. Give us this nada our daily nada and nada us our nada as we nada our nadas and nada us not into nada but deliver us from nada; pues nada.* என்றெல்லாம் சொல்லிக்கொண்டே போய்

*Hail nothing full of nothing, nothing is with thee* என்று முடியும்.

இதனுடைய உள்ளர்த்தம் என்ன?

அந்தக் காலகட்டத்திலே பலரும் சொல்லிப் பார்த்த, தமிழிலக்கியங்களை வடித்துக்காட்டிய பலரது சாராம்சத்தை உள்வாங்கிய வள்ளலார் சொன்னார்,

**இன்று வருமோ நாளைக்கே வருமோ அல்லது மற்று**
**என்று வருமோ அறியேன் என் கோவே - துன்று மல**
**வெம் மாயை அற்று வெளிக்குள் வெளி கடந்து**
**சும்மா இருக்கும் சுகம்**

என்று சொல்லிப் பார்த்தார்.

வாழ்க்கையை உணரக்கூடியவர்கள், தன்னை உணரக்கூடியவர்கள், தங்கள் வாழ்க்கையின் போக்கை உணரக்கூடியவர்கள், உணரவேண்டிய விதத்திலே உணர்ந்துவிட்டால் தன்னை உணர்ந்தவர்கள், தன்னிலிருந்து விலகி இறை எனும் ஆனந்தத்தை அடையமுடியும் என்பதை வலியுறுத்தியது உலகப் படைப்புகளிலேயே திருக்குறள் மட்டும்தான். *(கைதட்டல்)*

திருக்குறளை உள்வாங்கிய காரணத்தினால் பூரணலிங்கம் அவர்கள் நூறு தலைப்புகளை கையிலெடுத்து அறம், பொருள் இரண்டிலும் குறட்பாக்களைக் கையிலெடுத்து நூறு தலைப்புகளிலே ஏதோ பொத்தாம் பொதுவாக சில கதைகளைச் சொல்லிவிட்டு அனுபவங்களைச் சொல்லிவிடலாம் என்ற சிந்தனை இல்லாமல் ஒரு பொறுப்பு மிக்க அதிகாரியாக வாழ்ந்த காரணத்தினால் இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

அதிகாரம் என்பது அனுபவிப்பதற்கான ஒன்று அல்ல. அதிகாரம் என்பது தான் வாழ்கின்ற வாழ்க்கையையும் மண் சார்ந்த சூழலையும் நேரப்படுத்திப் பார்த்தல். அந்தப் பார்வையை தன்னுடைய உள்ளத்திலே இருத்திய காரணத்தினால் அற்புதமான நூறு குறட்பாக்களைத் தேர்வு செய்து அதன் மூலம் தனது மனதை வெளிப்படுத்தி தமிழுக்கும் தமிழ்ப் படைப்புலகத்திற்கும் இந்த மண் சார்ந்த வாழ்க்கைக்கும் தனக்கான நியாயப்பாட்டைப் பதிவு செய்திருக்கிறார் திரு, பூரணலிங்கம் அவர்கள்.

திரு. பாலகிருஷ்ணன் ஐஏஎஸ் அவர்கள் இந்த மண்ணை மண்ணின் சிறப்பை தொல்லியல் நோக்கில் அற்புதமான ஒரு புத்தகத்தைத் தந்தார். அந்தப் புத்தகத்திலே அவர் கையாண்ட விஷயங்கள் இன்றைக்கும் எத்தியோப்பியாவிலே நீங்கள் பயணப்பட்டால், ஆப்கானிஸ்தானின் ஒரு மூலையிலே இருக்கக்கூடிய ஒரு குக்கிராமத்திற்கு சென்று பார்த்தால், மனித இனம் ஒன்றுபட்ட சிந்தனையையும் ஒரு வாழ்க்கையையும் ஒரு காலகட்டத்திலே கொண்டிருக்கிறது என்பதை அந்த நூலிலே பதிவு செய்திருப்பார்.

அவர் தனக்கான முன்னுரையிலே 'வாழ்வில் வளம் பெற வள்ளுவம்' எனும் இந்நூல் எந்தவிதத்திலே சிறந்ததாக மாறியிருக்கிறது என்பதைப் பதிவு செய்திருக்கிறார்,

'பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்' என்று சொல்லிப் பார்த்தது இந்த மண்தான்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று சொல்லிப் பார்க்கக்கூடிய பரந்த தன்மை இம்மண்ணைச் சார்ந்தவனுக்குத்தான் இருந்திருக்கிறது.

யார் வேண்டுமானாலும் எந்த விதத்திலேனும் எந்த வாழ்க்கையை வேண்டுமானாலும் வாழ்ந்து விடலாம். ஆனால் வாழ்க்கையை வாழ்வதற்கு அன்பு நிறைந்த மனமும் அதற்கான சிந்தனைப் போக்கும் தேவை என்பதை, அன்பிற்கும் உண்டோ அடைக்குந் தாழ் என்று வள்ளுவன் சொல்லிப் பார்த்ததை அழகான விளக்கங்களோடு இந்த நூலிலே திரு பூரணலிங்கம் அவர்கள் தந்திருக்கிறார்.

நல்ல நூலைப் படிப்பது என்பது படித்து முடித்த பின் அந்த நூல் நமக்குள் எந்தவிதத் தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதை ஒட்டித்தான் அமையும். எந்த நோக்கமும் இல்லாமல், தனக்கான இருப்பை முன்னிறுத்த வேண்டும் என்ற சிந்தனை இல்லாமல், வள்ளுவத்தை உணர்ந்து பார்த்த காரணத்தினால் வள்ளுவத்தின் போக்கு மானுடத்தைத் தவிர, வேறு எந்தத் திசையிலும் இல்லை என்பதையும் உணர்ந்துவிட்ட காரணத்தினால் 'வாழ்வில் வளம் பெற வள்ளுவம்' எனும் இந்த நூல் உதித்திருக்கிறது. இதனை சாத்தியப்படுத்திய நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்திற்கும் திரு பூரணலிங்கம் அவர்களுக்கும் என்னுடைய வாழ்த்தைப் பதிவு செய்து இந்த நல்லதோர் வாய்ப்புக்கு நன்றி கூறுகிறேன், வணக்கம்.

●



கட்டுரை

# கொல்லவருஷம்
## (மலையாள ஆண்டு)

அ.கா.பெருமாள்

இன்றைய கன்னியாகுமரி மாவட்டத்தில் திருமண அழைப்பிதழ், வைதீகக் கோவில் திருவிழா அழைப்பிதழ், நாட்டார் சாமிகளின் கொடைவிழா அழைப்பிதழ், பொதுமக்களின் வாழ்க்கை வட்டச் சடங்கு அழைப்பிதழ் ஆகிய எல்லாவற்றிலும் மலையாள ஆண்டு குறிப்பிடப்படுகிறது, அடைப்புக்குறிக்குள் பொது ஆண்டு இருக்கும். இது இன்றும் நடைமுறையில் உள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் இப்போதும் வழக்கில் உள்ள கும்பகோணம் பஞ்சாங்கத்திலும் தினமலர், தினத்தந்தி போன்ற நாட்காட்டிகளிலும் மலையாள ஆண்டை பொதுவாகக் குறிப்பிடுகின்றனர். கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, மதுரை, விருதுநகர் ஆகிய மாவட்டங்களில், கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் வைதீக கோவில் ஆவணங்களிலும் மலையாள ஆண்டும் இடம்பெறுகிறது

தென் திருவிதாங்கூர் பகுதிகளில் பொ.ஆ 12 ஆம் நூற்றாண்டிலிருந்து நாஞ்சில்நாட்டில் கிடைக்கின்ற, அழகியபாண்டியபுரம் ஊரில் கிடைத்த முதலியார் ஓலை ஆவணங்களிலும் அடிமை ஆவணங்களிலும் விலை ஒற்றி பத்திரங்களிலும் மலையாள ஆண்டே குறிக்கப்படுகிறது.

சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு வரை பேச்சுவாக்கில் பத்து கொல்லம் முன்பு நடந்தது என்று இளைஞர்கள் கூட பேசினார்கள். கொல்லம் ஆண்டு எப்போது உருவானது? இதன் தோற்றக் காரணம் என்ன? என்பது பற்றிய விடை பெரிய அளவில் ஊகங்களாகவே உள்ளன. இன்றும் அது சரியான முடிவுக்கு வரவில்லை.

இந்திய வரலாற்றை எழுதியவர்கள் "பழங்கால இந்தியாவின் பழைய ஆவணங்களில் முறையாகப் பதிவு செய்யப்பட்ட ஆண்டும் தேதியும் இல்லை, இங்கே பொ.ஆ முதல் நூற்றாண்டில் கூட இந்த நிலைதான் இருந்தது. ரோமானிய வரலாற்றை எழுதியவர்கள் அப்போது இருந்த முறையான ஆண்டைக் குறிப்பிட்டது போன்று பழம் இந்தியாவில் குறிப்பிடவில்லை. என்பதை சொல்லித்தான் ஆகவேண்டும்" என்று கூறுகின்றனர்.

ஆரம்பகால இந்திய வரலாற்றாசிரியர்களும் தொல்லியலாளர்களும் வடகிழக்குப் பகுதியில் இருந்து அந்நியர்கள் இந்தியாவிற்கு வந்தபோது குறிப்பிட்ட வருஷங்களை, இந்திய அரசர்களின் ஆட்சியாண்டுகளுடன் கணக்கிட்டு இந்திய வரலாற்று நிகழ்வைக் கூறும் நிலை ஒரு காலத்தில் இருந்தது.

இந்தியப் பேரரசுகளின் அறிவிப்புகள் கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் பிற ஓலை ஆவணங்களிலும், ஒரே மாதிரியான வருஷத்தைக் கொண்டதாய் இருக்கவில்லை. இந்தக் கருத்தில் யாருக்கும் மாறுபாடு இல்லை. இந்தியாவில் பேரரசுகளும் சிற்றரசுகளும், தங்களுக்கு என்ற ஏதோ ஒரு வருஷத்தைக் கொண்டிருந்தனர். இவர்கள் இப்படிப் பின்பற்றியதற்கு தனித்த காரணம் இருந்தது. அதையே தங்கள் கல்வெட்டுகளிலும் குறிப்பிட்டனர்.

இதனால் வரலாற்றாசிரியர்கள் பொது ஆண்டை கணக்கிடுவதில் சிரமப்பட்டனர். மிகுந்த உழைப்பு, தொடர்ந்த சேகரிப்பு, பெரும் போராட்டத்திற்குப் பின்னரே, இந்திய அரசர்களின் வரலாற்று ஆண்டை ஓரளவு வரையறை செய்தனர். இந்த வரையறைதான் தற்கால ஆராய்ச்சியாளர்களுக்கு பொது வழியைத் திறந்து விட்டது. இது இவர்கள் சுதந்திரமாக ஆராய்ச்சி செய்ய ஏதுவாயிற்று!

இந்தியாவில் வழக்கத்தில் உள்ள வருஷங்களை வரலாற்றாசிரியர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றனர்:

| வருஷம்பெயர் | | தொடக்கவருஷம் (பொ.ஆ). |
|---|---|---|
| சப்தரிஷி | வருஷம் 7 | 6 |
| விக்கிரம் | வருஷம் | 56 |
| சக | வருஷம் | 78 |
| கால சூரி | வருஷம் | 248 |
| குப்த | வருஷம் | 320 |
| ஹர்ஷ | வருஷம் | 660 |
| சாலிவாகன | வருஷம் | 78 |
| போஜராஜசப் | தம் | 147 |
| பிரதாபருத்ராப்தம் | | 687 |
| இராமதேவாப்தம் | | 1300 |

இந்தப் பத்து ஆண்டுகள் தவிர பாண்டவாப்தம், கலியாப்தம், பிராபதி, சேஷகலி, கிருஷ்ணராப்தம் பசலி, ஹிஜிரி, கேதி, சுதர்சன், இலஷ்மண சேனா வள்ளுவர் என்னும் வேறு பல ஆண்டுகளும் உள்ளன.

கேரள வரலாற்றில் கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் கொல்லம் வருஷம் இரண்டறக் கலந்து விட்டது. கேரள நாட்டார் வழக்காற்றில் பேச்சுவழக்கில் கொல்லம் என்று குறிப்பது சாதாரணமாக உள்ளது. மலையாள நாட்டார் பாடல்களிலும் கொல்லமாண்டு குறிப்பிடப்படுகிறது.

பாமர மனிதர்களுக்குக் கொல்லம் வருஷம் தெரியும். தமிழகத்தில் சுழற்சி வருஷம் வழக்கில் இருந்தாலும் சாதாரண பாமரர்களிடம் வழக்கில் இல்லை, நாட்டார் வழக்காறுகளிலும் இல்லை. நாட்டார் பாடல்களில் மேற்கோளாக எங்குமே வரவில்லை. கதைப்பாடல்களில் வரவில்லை. நாட்காட்டியைப் பார்த்து இந்த ஆண்டின் பெயர் என்ன என்பதைத் தேடவேண்டிய நிலை இன்றும் உள்ளது. இந்த சுழற்சி வருஷம் வைதீகம் சார்ந்து இருப்பது மாதிரி ஒரு பிரம்மையை உருவாக்கிவிட்டது. கொல்லம் வருஷத்தின் நிலை அப்படி அல்ல.

கேரளத்தின் பண்பாட்டில் முழுதுமாக பரவி இருக்கின்ற கொல்ல வருஷம் முதல் முதலில் வேணாட்டு அரசனான ஸ்ரீ வல்லபன் கோதையின் மாம்பிள்ளி செப்பேட்டில் குறிக்கப்படுகிறது. இச்செப்பேடு கொல்லம் வருஷம் 149 ல் எழுதப்பட்டது (பொ. ஆ 974). இதற்கு முன்பு கொல்லம் வருஷம் குறிப்பிடப்பட்ட ஆவணங்கள் கிடைக்கவில்லை என்று கூறுகின்றனர்.

கொல்லம் ஆண்டு தென் கேரளத்தில் சிங்கம் மாதத்திலும் ( ஆகஸ்ட், செப்டம்பர்), வட கேரளத்தில் கன்னி மாதத்திலும் (செப்டம்பர்) ஆரம்பிப்பதாக கூறும் மரபு உண்டு என்கின்றனர். கொல்ல வருஷம் தோன்றியது குறித்த செய்தி தொன்மமாகவே உள்ளது. கேரள வரலாற்று பேராசிரியர் ஸ்ரீதரமேனன் "கேரள வரலாற்றில் இது ஒரு புதிர் இன்றும்கூட. இது விடுவிக்கப்படவில்லை" என்கிறார்.

### கொல்லம் வருஷம் உருவான காரணம் பற்றிய ஊகங்களைப் பார்ப்போம்

திருவனந்தபுரத்திலிருந்து நாற்பது மைல் தொலைவில் உள்ள கொல்லம் நகரத்துடன் தொடர்புடையது, மலையாள வருஷம் என்பது ஒரு கருத்து. இவ்வாறு கூறுகின்ற கருத்தாளர்கள் கொல்லம் நகரம் வணிக நகரமாக உருப்பெற்ற காலத்தில் இந்த ஆண்டு தொடங்கப்பட்டு இருக்கலாம் என்கின்றனர்.

கொல்லம் ஆண்டு தோன்றுவதற்கு முன்பே இந்த நகரப்பகுதியில் குடிபெயர்ந்த நம்பூதிரிகள் இப்பகுதியை கொலம்பா என்னும் சமஸ்கிருதச் சொல்லால் அழைத்தனர். கொல்லம் தோன்றி என்பது கொல்லம் உருவானதைக் குறிக்கும் வழக்காறு என்றும் கூறுகின்றனர். நம்பூதிரிகளே இந்த ஆண்டை நிறுவினர் என்பர். இதை, மலபார் சகாப்தம் என்றும் இது கலி வருஷம் 3926ல் ஆரம்பித்தது என்றும் கூறுகின்றனர்.

நம்பூதிரிகள் கேரளத்திற்கு வந்தது கொல்லம் வருஷம் தோன்றிய பின்னர்தான். அவர்கள் குடியேறிய காலத்தில் கொல்லம் வருஷம் வழக்கிலிருந்தது. அவர்கள் தங்கள் சமஸ்கிருதச் செல்வாக்கை எல்லா இடத்திலும் நிலைநாட்டியது போல கொல்லம் நகரத்தையும் மாற்றினர். கொல்லம் வணிக நகரம் ஆனதற்கும் நம்பூதிரிகளுக்கும் தொடர்பு இல்லை என்று கூறுகின்றனர்.

வேணாட்டு அரசனான உதய மார்த்தாண்ட வர்மா, ஒரு முறை வானியல் ஜோதிடம் அறிந்த அறிஞர்களை எல்லாம் தன் சபையில் கூட்டினாராம். அவர்களிடம் வேணாட்டுக்கு என்று ஒரு வருஷத்தை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டாராம். பன்னிரண்டு ராசிகளுக்கு உட்பட்ட நட்சத்திரங்களை ஆய்வு செய்து ஒரு ஆண்டைக் கண்டுபிடித்தார்களாம். அந்த வருடத்தின் முதல் மாதம் சிங்கம். இந்த மாதத்தின் முதல் தேதியே, வருஷப்பிறப்பு ஆகும் என்று முடிவு செய்தார்களாம். இது நடந்தது பொ. ஆ 825 ஆகஸ்ட் 15ல் (கலி 3926) இதை சூரிய ஆண்டு என்றும் கூறுகின்றனர். இப்படி ஒரு கருத்து உண்டு.

ஆரம்ப காலத்தில் திருவிதாங்கூர் வரலாற்றை ஆங்கிலத்தில் எழுதிய சங்குண்ணி மேனன் தன் நூலில் கொல்லம் ஆண்டு உருவானது பற்றி ஒரு காரணத்தைக் கூறுகிறார்: திருவனந்தபுரம் பத்மநாபசுவாமி கோவில் உருவான வருஷத்தைக் கொல்லம் ஆண்டாகக் குறிப்பிட்டனர் என்றும் இந்தக்கோவிலைக் கட்டியவர் உதய மார்த்தாண்ட வர்மா என்றும் கோவிலின் தோற்றமும் கொல்லம் வருஷத் தோற்றமும் ஒன்று என்றார் அவர்.

சங்குண்ணி மேனனின் கருத்து ஆரம்பகாலத்தில் ஏற்றுக்கொள்ளப் பட்டது. ஆனால் பின்னர் இக்கருத்தை மறுத்து பலரும் விமர்சித்துள்ளனர். மனோன்மணியம் நாடக ஆசிரியரான பேராசிரியர் பெ. சுந்தரனார் சங்குண்ணி மேனனின் 'கருத்தை ஒத்துக்கொள்ள' முடியும் என்கிறார். ஸ்ரீதரமேனன் இந்தக் கருத்தை மறுக்கிறார். காரணமும் கொடுக்கிறார். திருவனந்தபுரம் பத்மநாபசுவாமி கோவில் உருவான காலம் பற்றி துல்லியமான ஆவணங்கள் கிடைக்கவில்லை. ஆகவே இது பொருந்தாது என்கிறார்.

அறுபத்திமூன்று நாயன்மார்களில் ஒருவரான, சேரமான் பெருமாள் நாயனார் இஸ்லாமிய சமயத்திற்கு மாறிய பின்னர் மெக்காவுக்குச் சென்றார். அப்படிச் சென்ற ஆண்டில் உருவானது கொல்லம் வருஷம் என்பது ஒரு கருத்து.

லோகன் என்ற அறிஞர் பாரசீக வளைகுடாவில். ஒரு இடத்தில் சேரமான் பெருமாளின் கல்லறை உள்ளது என்று கூறுகிறார். சேரமான் பெருமாள் நாயனார் மறைந்தது கலி 3966ல் என்றாலும் அவர் மெக்கா புறப்பட்ட வருஷமே கொல்லம் ஆண்டு உருவாக்கத்திற்குக் காரணமானது என்பது அவரது கருத்து.

இந்தக் கருத்தை, முந்திய அறிஞர்கள் பலரும் மறுத்திருக்கிறார்கள். மனோன்மணியம் சுந்தரனார் 1894ல் வெளியிட்ட Sovereigns of Travengore என்ற தன் சிறு நூலில், ஒரு அரசன் மதம் மாறியது ஒரு நிகழ்வே தவிர அது வரலாற்று முக்கியம் உடையது அல்ல. அவரது மறைவு கேரளத்திற்குப் பெருமை சேர்ப்பது என்று கொண்டாலும் மொத்த கேரளமும் அதை தங்களின் ஆண்டின் தொடக்கமாகக் கொள்வதற்கு இணங்கி இருப்பார்களா? வைதீகர்கள் இதற்குச் சம்மதிப்பார்களா? கோவில் ஆவணங்களிலும் கல்வெட்டுகளிலும் அந்த வருஷத்திற்கு முக்கியம் கொடுப்பார்களா? இந்த ஊகம் பொருத்தமில்லாத கற்பனை என்று சிலர் மறுப்பு கூறுகின்றனர்

மேலும் சேரமான் பெருமாள் மதம் மாறியது பற்றிய நிகழ்வை | பெரியபுராணம், திருக்கயிலாய ஞான உலா ஆகிய நூற்கள் பேசவே இல்லை. கேரளத்திற்கு வந்த இஸ்லாமிய பயணிகளான சுலைமான்(பொ. ஆ850) அல்பரேணி (990 - 1030) | மார்க்கோபோலோ (பொ. ஆ. 1241- 1294) போன்றோர்கள் இப்படி ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிடவும் இல்லை. ஆகவே இந்த கருத்து முழுக்கவும் கற்பனையானது என்று கூறுகின்றனர்.

சோழர் வரலாற்றை எழுதிய சதாசிவப் பண்டாரத்தார், சேரமான் பெருமாள் கைலாயம், சென்ற ஆண்டின் 'நினைவாக' கொல்லம் ஆண்டு உருவாகியிருக்கலாம் என்று ஒரு கட்டுரையில் கூறுகிறார். இதுவும் ஊகமே. இதற்கு வேறு சான்றுகள் இல்லை.

கேரளோப்பத்தி என்ற மலையாள நூல் கொல்லம் வருஷத் தோற்றத்தை ஆதிசங்கரருடன் இணைத்துக் கூறுகிறது. நம்பூதிரி சாதியினரான ஆதிசங்கரர் தன் 'அனாசார வழக்கத்தை' பின்பற்றிய வருஷமே கொல்ல வருஷம் என்று இந்த நூல் கூறுகிறது. ஆனால் இக்கருத்து பொருத்தாது என்பதற்கு ஸ்ரீதர மேனன் சான்றுகள் தருகிறார்...

சங்கரர் பொது ஆண்டு 820 இல் மறைந்தார்.. அவரது மறைவு கேரளத்தில் பொ.ஆ 825 இல் அறிவிக்கப்பட்டது. அதுவே கொல்லம் ஆண்டின் தொடக்கம் என்ற கருத்தையும் மேனான் மறுக்கிறார். சங்கர ஸ்மிருதியில் அனாச்சாரம் பற்றி பேசப்படவில்லை. சங்கரர் பொ.ஆ 778ல் பிறந்து பொ.ஆ 820 இல் மறைந்தார். எனவே மேற்கண்ட கூற்றுக்கள் முற்றிலும் தவறு உடையவை என்பது அவரது வாதம்

மகோதயப் பேரரசர்களில். ராஜசேகர குலசேகரன் (பொ.ஆ.820 - 844) என்ற அரசர் காலத்தில் கொல்லம் வருஷம் ஆரம்பித்தது. இந்த அரசன் கேரளத்து விவசாயம், மழைக்காலம், பயிர் விளைச்சல் போன்றவற்றின் பின்னணியில் ஒரு ஆண்டை உருவாக்குமாறு அறிஞர்களிடம் கேட்டுக்கொண்டான். அதுவே கொல்ல வருஷம் என்பது ஒரு கருத்து.

இந்தக் கருத்தையும் மேனன் மறுத்து இருக்கிறார். மகோதய அரசர் காலத்தில் எழுதப்பட்ட சங்கர நாராயணீயம் என்னும் வானியல் நூலில் மலையாள ஆண்டு இல்லை. இதில் கலி ஆண்டு குறிப்பிடப்படுகிறது. மகோதய ராஜசேகரன் கொல்லம் ஆண்டை தொடங்கியிருந்தால் இந்த இந்நூலில் கொல்லம் ஆண்டு குறிப்பிடப்பட்டிருக்கும். அப்படி இல்லை எனவே மேற்கொண்ட கருத்து தவறு என்கிறார்.

ஓணம் பண்டிகையுடன், கொல்லம் ஆண்டு: தொடர்புடையது. இது உருவான நாளில் கொல்லம், தொடங்கப்பட்டது என்பது ஒரு கருத்து. இதைப் பலரும் மறுக்கின்றனர். ஓணம் சங்க காலத்தில் நடந்த ஒரு விழா. இது உருவான காலம் சரியாகத் தெரியாது. ஆகவே இந்தக் கருத்து பொருத்தமற்றது என்கின்றனர்.

கொல்லத்தில் உள்ள ஒரு சிவன் கோவில் கட்டப்பட்ட ஆண்டிலிருந்து கொல்லம் வருஷம் கணக்கிடப்பட்டது என்று மலையாள அகராதியை தொகுத்த குண்டர்ட் என்பவர் கூறுகின்றார். இது வாய்மொழிச் செய்தியின் அடிப்படையில் உருவானது. அதோடு கொல்லத்தில் எந்த சிவன் கோயில் கட்டப்பட்டது என்றும் இவர் கூறவில்லை.

பாண்டியன் ஸ்ரீ மாறன் ஸ்ரீ வல்லவன் என்பவனை (பொ.ஆ. 815 - 865) ஆய் மன்னன் ஒருவன் வெற்றி கொண்ட நிகழ்ச்சியின் அடிப்படையில் கொல்லம் வருஷம் உருவானது என்கின்றார் இ.வி கிருஷ்ணய்யர். இதுவும் சரியானதல்ல என்கின்றனர். ஆய் அரசர்களின் தலைநகரம் விழிஞம் ஆகும். கொல்லம் அல்ல என்பது அவர்கள் வாதம்.

இன்றைய கொல்லத்தை அடுத்த சில பகுதிகளில் குடியேறிய புனிதர்களான சமோர், மார்பரோத் ஆகிய இருவரின் பெயரால்; கொல்லம் சகாப்தம் உருவானது என்பது ஒரு கருத்து. இது பொருத்தம் இல்லை; இப்படி உருவான ஒரு வருஷத்தை வைதீக கோவில் பூசகர்கள் ஒத்துக் கொண்டிருக்க மாட்டார்கள்.

ஆற்றிங்கல் பக்கமுள்ள கீழப் பேரூர் என்ற இடம் குலசேகரரின் அம்மாவின் ஊர் ஆகும். இங்குள்ள கிருஷ்ணன் கோவில் உருவான நாளிலிருந்து கொல்லம் வருஷம் ஆரம்பித்தது என்னும் வாய்மொழி செய்திக்கும் வேறு சான்று இல்லை.

லோகன் என்பவர் கொல்ல வருஷம் தொடர்பாக ஒரு கருத்தைக் கூறுகிறார். கொல்லம் ஆண்டு தென் கேரளத்தில் சிங்கம் மாதத்திலும், வட கேரளத்தில் கன்னி மாதத்திலும் ஆரம்பிக்கிறது. இது குளத்து நாட்டிலிருந்து வேணாடு விடுதலை பெற்றதன் அடையாளமாகக் கூறப்படுவது என்று கூறுகிறார்.

மகோதய பேரரசு பொ.ஆ. ஒன்பதாம் நூற்றாண்டு முதல் பன்னிரண்டாம் நூற்றாண்டுவரை இருந்தது. அப்போது வேணாடும் கோலத்து நாடும் முழு சுதந்திர நாடாக இருக்கவில்லை. குலசேகரப் பேரரசில் இறுதிக்கு பின்னர் வேணாடு உரிமையுடைய நாடாக மலர்ந்தது, ஆகவே லோகன் கருத்து சரியல்ல என்கின்றனர்.

திராவிட மொழி அறிஞர் டாக்டர் கால்டுவெல் கொற்கை நகரத்துடன் கொல்லம் ஆண்டு தொடர்புடையது என்கின்றார். கிரேக்கர்கள் கொல் செய் என்று கூறுவது கொல்லத்தினைக் குறிக்கும். கொலச்சல், கொலம்போர என்னும் பெயர்களிலிருந்து வந்தது கொல்லம். இவை துறைமுகங்கள். எனவே 'கொற்கை கொல்லம்' தொடர்புண்டு என்கிறார். இதை கற்பனையான கருத்தாக எடுத்துக் கொள்ளலாம் என்று பேராசிரியர் சுந்தரம் பிள்ளை கூறுகிறார்.

மனோன்மணியம் நாடக ஆசிரியர் பெ சுந்தரம் பிள்ளை 'வேணாட்டு அரசர்களின் வரலாறு' என்ற நூலில் கொல்லமாண்டு பெருமாள் அரசர்களின் கடைசி அரசரின் மறைவுக்குக் காரணமாகவோ ஆதிசங்கரருடன் தொடர்புடையதாகவோ சப்தரிஷிகளின் சூரியன் கணிப்பு அடிப்படையிலோ உருவாகி இருக்கலாம் என்கின்றார்.

தென் கேரளத்தில் பொ.ஆ 824 ஆகஸ்டிலும் வட கேரளத்தில் செப்டம்பர் 21லும் கொல்லமாண்டு ஆரம்பித்திருக்க வேண்டும் என்கின்றார் சுந்தரனார். இந்தக் கருத்தைச் சிலர் ஒத்துக்கொள்கின்றனர் என்றாலும் கொல்லம் வருஷம் தோற்றம் என்பது இன்றைக்கும் புதிரான முடிவு பெறாத விஷயமாகவே உள்ளது.

●

கட்டுரையாளர், ஓய்வுபெற்ற பேராசிரியர், நாட்டார் வழக்காற்றியல் மற்றும் சமூகப் பண்பாட்டு ஆய்வாளர்.

மக்களுக்காகச் சிந்திப்போம்

# மக்கள் சிந்தனைப் பேரவை

வழங்கும்

பண்பாட்டுப் பயணத்தில் 18 ஆம் ஆண்டு

# ஈரோடு புத்தகத் திருவிழா - 2022

**ஆகஸ்ட் 05 முதல் 16 வரை - சிக்கய்ய நாயக்கர் கல்லூரி மைதானம், ஈரோடு**

இலங்கைத் தமிழறிஞர்

## சி.வை. தாமோதரம் பிள்ளை

## உலகத்தமிழர் படைப்பரங்கம்

**நூல்களைத் திரட்ட உதவிடுவீர்!**

அன்புடையீர்,

வணக்கம்.

இந்தியா நீங்கலாக உலகெங்குமுள்ள தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகளைத் தாய்த்தமிழகத்தில் உள்ளோருக்கு அறிமுகம் செய்யும் நோக்கிலும், அயலகத் தமிழர்களின் படைப்பாற்றல் மற்றும் பண்பாட்டு – கலாச்சார உணர்வுகளை இங்குள்ளோரும் புரிந்து அவர்களை நேசிக்கச் செய்யும் அடிப்படையிலும், தமிழ்கூறும் நல்லுலகில் உள்ள அனைத்துத் தமிழர்களுக்குமான ஓர் உறவுப்பாலமாக – மக்கள் சிந்தனைப் பேரவை தொடர்ந்து ஒவ்வோராண்டும் ஈரோடு புத்தகத் திருவிழாவில் ‘ உலகத் தமிழர் படைப்பரங்கம் ’ என்ற பெயரில் ஒரு சிறப்பு அரங்கத்தை சிரத்தையெடுத்து அமைத்து வருகிறது

ஆயிரக்கணக்கான தலைப்புகளில், பல்லாயிரக்கணக்கான அயலகத் தமிழ்நூல்கள் இந்தச் சிறப்பு அரங்கத்தில் ஆண்டுதோறும் இடம்பெறுகின்றன. வேறுபல நாடுகளில் தமிழ்மொழியின் வளர்ச்சிக்காகவும், தமிழர்களின் மேன்மைக்காகவும் உழைத்த பெருமக்களின் திருவுருவப்படங்கள் அவர்களைப் பற்றியான குறிப்புகளுடன் இவ்வரங்கத்தில் மக்களின் பார்வைக்கு வைக்கப்படுகின்றன. வெளிநாட்டுத் தமிழ் ஆளுமைகளை வரவழைத்து அவர்கள் இங்கு உரை நிகழ்த்த ஏற்பாடு செய்யப்படுகிறது. புத்தகத் திருவிழாவில் பொதுமக்களால் மிகவும் கவனத்திற்குரிய அரங்காக ஒவ்வோராண்டும் இது திகழ்ந்து வருகிறது

இந்த ஆண்டு ‘இலங்கைத் தமிழறிஞர் சி.வை. தாமோதரம் பிள்ளை – உலகத்தமிழர் படைப்பரங்கம் ’ என்ற பெயரில் இச்சிறப்பரங்கம் அமைக்கப்படவுள்ளது

மாநிலந்தழுவிய அளவில் தேசியத்தரத்துடன் நடைபெறும் ஈரோடு புத்தகத் திருவிழாவில் இடம் பெறும் இந்தச் சிறப்பு அரங்கிற்கு நூல்களைத் திரட்டும் முயற்சியில் புத்தகப் பதிப்பாளர்கள், தமிழ் அமைப்புகள், புத்தக ஆர்வலர்கள் என அனைவரும் மனமுவந்து பங்கேற்று உதவுமாறு மக்கள் சிந்தனைப் பேரவை ஓர் அன்பான வேண்டுகோளை முன் வைக்கிறது

- வெளிநாட்டில் வாழ்கிற தமிழர்களின் படைப்புகளை இவ்வரங்கத்தில் விற்பனைக்காக வைக்க அந்தந்த நாட்டிலுள்ள படைப்பாளிகள், செயல்பட்டு வருகிற தமிழ் அமைப்புகள் உதவிடலாம்

- காலமாகிவிட்ட படைப்பாளிகளாக இருப்பினும் அவர்களது படைப்புகள் சிறந்தவையாக இருக்குமெனில் அவர்களது குடும்பத்தினரோ, தமிழ் அமைப்புகளோ, அவர்களது நண்பர்களோ அப்படைப்புகளைப் பேரவையிடம் சேர்க்கலாம்

- வெளிநாட்டில் செயல்பட்டு வரும் பதிப்பகங்களும் இவ்வாறு தாங்கள் பதிப்பித்த வெளிநாடு வாழ் தமிழர்களின் சிறந்த படைப்புகளை அனுப்பலாம்

- வெளிநாட்டில் வாழ்கிற தமிழர்களின் படைப்புகள் தாய்மண்ணில் உள்ள அவர்களது இல்லங்களிலோ அல்லது உறவினர்களிடமோ இருக்குமெனில் அவர்களிடம் இவ்விபரம் தெரிவித்து பேரவையைத் தொடர்பு கொள்ள வைக்கலாம்

- வாழும் நாடு குறித்த விபரங்களடங்கிய ஆய்வு நூல்கள், அந்தந்த நாடுகளில் தமிழ்மொழி வளர்ச்சிக்காகவும் தமிழர்களின் உயர்வுக்காகவும் தொண்டாற்றியவர்களின் வாழ்க்கை வரலாற்று நூல்கள், அந்தந்த நாட்டின் இயல்பிற்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப உருவான படைப்புகளான கவிதை, கட்டுரை, சிறுகதை ஆகியவற்றின் தொகுப்புகள், நாவல்கள், காப்பியங்கள், இலக்கிய ஆய்வு நூல்கள், பயண அனுபவங்கள், அறிவியல் நூல்கள், திறனாய்வு நூல்கள், சிறப்பு மலர்கள், அங்கு செயல்பட்டு வருகிற தமிழ் அமைப்புகளின் வெளியீடுகள் போன்ற நூல்கள் வரவேற்கப்படுகின்றன

- வெளிநாட்டில் வாழ்கிற தமிழர்களின் படைப்புகளை தமிழகத்திலுள்ள பதிப்பகங்கள் வெளியிட்டிருப்பின் அவை பற்றிய விபரங்களைப் பேரவைக்கு உடனடியாகத் தெரிவித்தால் அப்பதிப்பகங்களைப் பேரவையே அணுகி புத்தகங்களைப் பெறலாம். அல்லவெனில் அப்பதிப்பகத்தார் மூலமாகப் பேரவையின் தலைமையை படைப்பாளிகளே அணுகலாம்

- ஒவ்வொரு படைப்பிலும் குறைந்தபட்சம் 10 பிரதிகள் அனுப்பினால் திருவிழா முடிந்தபிறகு விற்பனைத் தொகையில் கழிவுபோக மீதமுள்ள தொகையும், விற்பனையாகாத நூல் பிரதிகளும் உடனடியாகத் திருப்பிக் கொடுக்கப்படும்

- தொலைபேசியில் – மின்னஞ்சலில் இவ்விபரங்களை உடனடியாகத் தெரிவிக்கலாம்

**காலம் மிகக் குறைவாக இருப்பதால் உடனடியாகக் களமிறங்கி உதவி செய்வதன் மூலம் இத்திட்டத்தை மிகச் சிறப்பாக நிறைவேற்றிட உரியவர்கள் அனைவரும் மனமுவந்து ஒத்துழைப்பு நல்கிட பேரவையின் சார்பில் அன்புடன் வேண்டுகிறோம்**


தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

## T. STALIN GUNASEKARAN

President, Makkal Sinthanai Peravai

A-47, Sampath Nagar, Erode - 638 011. | Landline : 0424 2269186

Websites
www.makkalsinthanaiperavai.org
www.erodebookfestival.org
www.tstalingunasekaran.com

Gmail
info@makkalsinthanaiperavai.org
stalingunasekaran.t@gmail.com

Find us on facebook makkalsinthanaiperavaierode
YouTube makkalsinthanaiperavaierode

கட்டுரை

# மானுடவியல் ஆய்வுப் பதிவுகளில் இனங்காணலாகும் சில சொல்லாட்சிகளை மீளாய்வு செய்தல்

முனைவர் சி. மகேசுவரன்



இந்தியாவை ஆங்கிலேயர் ஆட்சி செய்யத் தொடங்கியபோது, இங்கு அறிமுகப்படுத்தப்பட்ட அறிவுத் துறைகளுள் ஒன்றே 'மானுடவியல்.' உடற்தோற்றத்தாலும் மொழியாலும் பண்பாட்டாலும் வேறுபடும் பல்வேறு இந்திய இனக்குழுக்களைச் சரிவரப் புரிந்து கொள்ள விரும்பிய ஆங்கிலேய ஆட்சியாளர்களுக்கு உற்றதொரு அறிவுசார் புலமாக இம்மானுடவியல் பெரிதும் உதவியது. இந்திய மண்ணில் தாங்கள் அறிந்து, புரிந்துகொண்ட பல் வேறுபட்ட இனக்குழுக்கள் பற்றிய தரவுகளை எல்லாம் முறையாக ஆவணப்படுத்துவதற்கான முன்னெடுப்புப் பணிகளை ஆங்கிலேய மானுடவியலாளர்கள் மேற்கொண்டனர். இதற்குச் சரியான சான்றாக, எட்கர் தர்ஸ்டன் (Edgar Thurston) படைத்து அளித்த 'Castes and Tribes of Southern India' ("தென்னிந்தியச் சாதிகளும் பழங்குடிகளும்") நூற் தொகுதிகளைக் குறிப்பிடலாம்; இவற்றைத் தொடர்ந்து தர்ஸ்டன் - ஆல் வெளியிடப்பட்ட 'Ethnographic Notes of Southern India' ("தென்னிந்திய இனக்குழுவரைவியல் குறிப்புகள்") மற்றுமொரு சிறந்த ஆவணமாக்கமாக அமைந்தது.

1908-09 கால கட்டங்களில் உருவாக்கப்பட்ட இவ்விரு ஆவணமாக்கப் பதிவுகளே தென்னிந்தியாவில் இன்றளவும் இனங்காணப்படும் பல் வேறு சாதிக் குழுக்களையும் பழங்குடிக் குழுக்களையும் முழுமையாக அறிந்துகொள்ள நல்ல அறிமுக ஆவண நூல்களாக ஆய்வுலகிற்கு அமைந்துள்ளன. பின்னாளில், 1980-கள் தொடங்கி இந்திய மானுடவியல் அளவீட்டாய்வுத் துறையினரால் (Anthropological Survey of India) ஆவணப்படுத்தப்பட்ட 'Peoples of India' ("இந்திய மக்கள் குழுக்கள்") நூற்தொகுதிகளுக்கும் தர்ஸ்டன் -இன்

மேற்குறிப்பிட்ட நூற் தொகுதிகளே அடிப்படை ஆவணங்களாக அமைந்தன என்பதை மறுப்பதற்கு இல்லை.

இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட மானுடவியல் ஆய்வுகளில் மேலை நாட்டு மானுடவியலாளர்கள் அளப்பரிய பங்களிப்புகளை வழங்கி இருந்தாலும் அங்கொன்றும் இங்கொன்றுமாக இந்தியாவின் இனக்குழுக்கள் குறித்த தவறான புரிதல்களும் அவர்களுடைய படைப்புகளில் இடம்பெற்றுவிட்டன என்பது கசப்பான உண்மை ஆகும்; அத்தகைய தவறான பதிவுகள் இன்றளவும் சரி செய்யப்படவில்லை என்பதைச் சுட்டிக் காட்டிடும் வகையில், மானுடவியல் ஆய்வுப் பதிவுகளில் இனங்காணப்படும் சில தவறான சொல்லாட்சிகளை மீளாய்வு செய்வதே இக்கட்டுரைக் களம்.

**பேய்க்கூத்தாக மாறிப் போன தெய்யம்**

'மனிதர் மீது மீயியல் ஆற்றல்' *(Supernatural Prowess)* இறங்குவதால், தெய்வ நிலைக்கு மனிதர் உயர்வதாகவும் அவ்வாறு தெய்வ நிலைக்கு உயர்ந்திட்ட மனிதர், தாம் சார்ந்துள்ள சமுதாய மக்களுக்கு நேரிடும் நோய், இழப்பு உள்ளிட்டவற்றிற்கான தீர்வுகளை அருள்வாக்காகக் *(Oracle)* கூறுவதாகவும் அமையும் 'சாமியாடுதல்' *(Divination)* 'தெய்யம்' எனும் வழிபாடு சார்ந்த நிகழ்த்துக் கலையாகத் திகழ்கிறது. எட்கர் தர்ஸ்டன் தமது *Caste and Tribes of Southern India* நூற் தொகுதிகளில் இம் மரபைப் பேய்க் கூத்து என்று பொருள் படும் வகையில் *'Devil Dancing* என்று பதிவிடப்பட்டுள்ளமை இன்றளவும் ஒரு நீங்காத வடுவாகவே அமைந்துவிட்டது.

**"சிறு மரபாகிப் போன மண்ணின் இயல் மரபு**

வட இந்தியாவின் நாட்டுப்புற வழிபாட்டு மரபை ஆய்வு செய்ய முற்பட்ட மில்டன் சிங்கர் *(Milton Singer)* எனும் மேலை நாட்டு மானுடவியலாளர் அவ்வழிபாட்டு மரபில் மண்ணிற்கு இயல்பான மரபுடன் மண்ணிற்கு அயலான மரபும் இரண்டறக் கலந்துள்ளமையை முதன் முதலில் வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தார்; இருப்பினும், மண்ணிற்கு இயல்பான வழிபாட்டு மரபைச் 'சிறு மரபு' எனப் பொருள்பட '*Little Tradition*' எனவும் மண்ணிற்கு அயலான வைதிக வழிபாட்டு மரபைப் பெரு மரபு எனப் பொருள்பட '*Great Tradition*' எனவும் குறிப்பிட்டு மிகப் பெரும் பிழையைச் செய்துவிட்டார்; வரலாற்றில் இதுவொரு நீங்காத வழுவாகவும் நிலைத்துவிட்டது. உண்மையில், சொந்த மண்ணிற்கு இயல்பான மரபை 'இயல் மரபு' என்று பொருள்படும் வகையில் '*Native Tradition*' எனவும் சொந்த மண்ணிற்கு அயலாக வெளியிலிருந்து வந்த மரபை 'அயல் மரபு' என்று பொருள் படும் வகையில் '*Alien Tradition*' எனவுமே பதிவு செய்திருக்க வேண்டும்.

**'குறுமர் தொகுதி' எனும் தவறான இனக்குழுவரைவியல் பதிவு**

ஒவ்வொரு இனக்குழுவிற்கும் 'புறப் பெயர்' *(Exonym)*, அகப் பெயர்' *(Endonym)* என்னும் இருமைப் பெயர்கள்' *(Binary Nomenclatures)* அடங்கியதாகவே அதன் இனக்குழுப் பெயர்' *(Ethnonym)* அமையும் என்பதே இனக்குழுப்பெயர்மையின் *(Ethnonymy)* இலக்கணம் ஆகும்; அதாவது, ஓர் இனக்குழுவை 'அயலவர்' *(Outsiders)* குறிப்பிடும் 'அழை பெயர்' *(Call Name)* புறப் பெயராகவும் தம்மைத் தாமே ஓர் இனக்குழு விரும்பிக் குறிப்பிட்டுக் கொள்ளும் சொந்தப் பெயரானது அகப் பெயராகவும் அமைகின்றன. சொந்தப் பெயரான அகப் பெயரானது ஒற்றைப் பெயராக அகப் பெயராகவும் அமைந்திட, அயலவரால் அழைக்கப்படும் பெயராக அமையும் புறப் பெயரானது ஒன்றுக்கு மேற்பட்டனவாகவே அமைகின்றன; இது மட்டும் அல்லாமல், புறப் பெயரான அழை பெயர்கள் சொந்த இனக்குழுவினரால் இழி பெயராகவே *(Derogatory Term)* கருதப்படும் போக்கே தூக்கலாக இனங்காணப்படுகிறது.

இத்தகைய குறைபாட்டை உடைய புறப் பெயரானது பெரும்பாலும் தவறாகவே அமைந்திடக் காண்கிறோம். சான்றாக, 'நீலகிரி உயிரிச்சூழல் காப்பிடத்தின் *(Nilgiri Biosphere Reserve)* பல்வேறு பகுதிகளில் தொன்று தொட்டு வாழ்ந்து வரும் ஆலு குறுமர், பெட்ட குறுமர், ஜேனு குறுமர், மற்றும் முள்ளு குறுமர் என்னும் நான்கு வேறுபட்ட பழங்குடிக் குழுக்களைக் 'குறும்பாஸ்' *(Kurumbas)* என்கிற ஒற்றைப் பெயரால் தமிழ்நாட்டின் மாநிலப் பழங்குடிப் பட்டியலில் குறித்திடும் நிலையில், மேலை நாட்டு மானுடவியலாளரான டேவிட் ஜி.மாண்டல்பாம் *(David G. Mandelbaum)* இன்னும் ஒரு படி மேலே சென்று, மேற்படி நால் வகைமைப் பழங்குடிக் குழுக்களை ஒரே தொகுதியாகக் கருதிக் 'குறுமர் தொகுதி' எனும் பொருள் படுமாறு *Kurumba Complex* என்று தவறாகப் பதிவு செய்துவிட்டார்; இவரது இத்தவறான பதிவை எவ்வித எதிர்க் கேள்வியும் கேட்காமல் - சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளைபோல - எல்லா மேலை நாட்டு மானுடவியலாளரும் அதைத் தொடர்ந்து இந்திய மானுடவியலாளர் அனைவருமே 'குறுமர் தொகுதி' என்கிற வகையில் *'Kurumba Complex'* என்றே தொடர்ந்து எழுதியும் பேசியும் வருகின்றனர்.

மாண்டல்பாம் குறிப்பிடும் இக் 'குறுமர் தொகுதி' என்பதனுள் அடக்கப்படும் ஒவ்வொரு பழங்குடிக் குழுவும் அதன் பேசு மொழியாலும் *(Native Speech)* தனித்துவமான பண்பாட்டாலும் *(Distinct Culture)* 'குறுமர்' என்னும் பெயருடன் குறிக்கப்படும் ஏனைய பழங்குடிக் குழுக்களுடன் முற்றிலும் மாறுபட்டதாகவே அமைகிறது என்பதை மொழியியல் தரவுகளும் மானுடவியல் தரவுகளும் தொடர்ந்து

மெய்ப்பித்து வந்தாலும் மாண்டல்பாம் பதிவிட்ட *'Kurumba Complex'* எனும் தவறான சொல்லாட்சியானது இன்றளவும் மானுடவியல் ஆய்வுப் பதிவில் களையப்படவில்லை என்பது வருத்தம் அளிக்கிறது.

**'பால் பண்ணைக் கோவில்' எனப் பதிவிடப்பட்டுள்ள தொதவர் கோவில்**

தமிழ்நாட்டின் 'பழங்குடி மாவட்டம்' எனக் குறிப்பிடப்படும் 'நீலகிரி', எல்லா மானுடவியலாளர்களாலும் ஒரு சேர முதன்மையான ஆய்வுப் பரப்பாகத் தொடர்ந்து கருதப்படலாகிறது; அதிலும் குறிப்பாக, நீலகிரியில் உள்ள தொதவப் பழங்குடியினர் வெளிநாட்டு அளவிலும் உள்நாட்டு அளவிலும் மிகுதியாக அறியப்பட்ட பழங்குடியாகப் பரந்துபட்ட நிலையில் ஆய்விற்கு உட்படுத்தப்பட்ட இனக்குழுவாகத் திகழ்கிறது என்றால் அது மிகை அல்ல; இருப்பினும், தொதவர் குறித்த மானுடவியல் ஆய்வுகளில் சில தவறான புரிதல்களும் காலங் காலமாகத் தொடரவே செய்கின்றன. எடுத்துக்காட்டாகத், தொதவப் பழங்குடியினரால் பொது வெளியில் *(Secular Space)* பராமரிக்கப்படும் சாதாரண எருமைகளிலிருந்து *(Secular Buffaloes)* பெறப்படும் பால்படு பொருள்கள் பொதுப் பயன்பாட்டில் உள்ள நிலையில், தொதவப் பழங்குடிப் பூசாரியால் பராமரிக்கப்படும் புனித எருமைகளிலிருந்து *(Sacred Buffaloes)* பெறப்படும் பால்படு பொருள்களுக்கான மூங்கில் பாண்டம், சுடுமண் கலயம், பிரம்பு மத்து உள்ளிட்ட புழங்கு பொருள்களை வைத்துப் பாதுகாத்திடும் புனித வெளியாக *(Sacred Space)* விளங்கும் தொதவரது கோவிலைப் 'பால் பண்ணைக் கோவில்' எனப் பொருள்பட *'Dairy Temple'* என்று மானுடவியலாளர் ஆர்.எச். ஆர். ரிவர்ஸ் - ஐத் தொடர்ந்து, ஏனைய மானுடவியலாளர்களும் குறிப்பிடுவது மிகப் பெரிய பிழை என்று அழுத்தந் திருத்தமாகக் கூறுகிறார் தொதவப் பழங்குடிச் செயல்பாட்டாளரான திருமதி. வாசமல்லி போத்திலி குட்டன்.

**'போலி எருமைக் கொம்பாகி'ப் போன குறியீட்டு நிலை எருமைத் தலை**

நீலகிரித் தொதவப் பழங்குடியினரது நம்பிக்கை அமைப்பொழுங்கில்' *(Belief System)* அவர்களுடைய தெய்வமானது தொதவ மக்களைப் படைப்பதற்கு முன்பாக எருமைகளையே படைத்தமையால், எருமைகளுக்கு மட்டுமே அவை வந்த வழியான மறுவுலகு *(Other World)* இருக்கும் இடம் தெரியும் என்கிற நம்பிக்கை உள்ளது. எனவே, தொதவ ஆணோ, பெண்ணோ இறக்க நேரிடும்போது, உடனடியாக மேற்கொள்ளும் பச்செ சாவு *(Green Funeral)* என்னும் ஈமச் சடங்கின் போது எருமைகளைப் பலி கொடுப்பதன் வாயிலாகப் பலியிடப்பட்ட எருமையுடைய (ஆவியின்) வாலைப் பிடித்துக்கொண்டு, அதனுடனேயே இறந்துபோன தொதவர் மறுவுலகை அடைய இயலும் என்று தொதவப் பழங்குடியினர் உறுதியாக நம்புகின்றனர். புலால் உணவை அறவே தவிர்க்கும் தொதவர், தங்களால் பலியிடப்பட்ட எருமையின் தலையைத் தமது வீட்டிற்குள் அனுமதிக்காமல், வீட்டிற்கு வெளியே, குடியிருப்புப் பகுதியின் முகப்பில் உள்ள ஏதேனும் ஒரு மரத்தின் மீது - அனைவரும் காணும் வகையில் - காட்சிப்படுத்தி வைப்பர்.

வீட்டிற்குள் அனுமதிக்க இயலாத பலியிடப்பட்ட எருமைத் தலைக்கு மாற்றாக, சில திணைசார் மரங்களிலிருந்து ஒடித்து எடுக்கப்படும் சிறு கிளையைக்கொண்டு, தாவர ஈடாகத் *(Vegetative Substitute)* தொதவர் தாங்கள் உருவாக்கிய எருமைத் தலையின் குறியீட்டுநிலை வடிவத்தை *(Symbolic Form)* நடு வீட்டின் உள்ளே மிகுந்த விழுமியத்துடன் வைத்து, அதன் முன்பாக நாள்தோறும் விளக்கு ஏற்றி வழிபாடும் மேற்கொள்கின்றனர். இத்தகைய குறியீட்டுநிலை எருமைத் தலையை *(Symbolic Buffaloe Head)* மேலை நாட்டு மானுடவியலாளர் தமது ஆய்வுப் பதிவுகளில் தவறுதலாகப் 'போலி எருமைக் கொம்பு' என்று பொருள்படும் வகையில், *'Imitation Buffalo Horn'* என்றே தொடர்ந்து பதிவிட்டு வருகின்றனர்; இந்திய மானுடவியலாளர்களும் எவ்விதக் கேள்வியும் கேட்காமல் இதை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இதற்கு மாறாக, இம்முகாமையான சடங்குசார் வழிபாட்டுப் பொருளை மிகச் சரியாகக் 'குறியீட்டுநிலை எருமைத் தலை' என்று குறிப்பிடுவதே பொருத்தமானதும் முறையானதுமான சொல்லாட்சியாக அமையும்.

**வில் - அம்புச் சடங்காக மாறிப்போயுள்ள கருப்ப இணைப்புச் சடங்கு**

பெண் பூப்பு அடைவதற்கு மேற்கொள்ளும் பூப்பு முன்நிலைத் திருமணச் சடங்கு வாயிலாக, *(Pre-Puberty Marriage Ceremony)* "இந்த ஆணுக்கு இந்தப் பெண்தான் வாழ்விணையர்" என்று நீலகிரித் தொதவப் பழங்குடியினர் முடிவு செய்துவிடுகின்றனர்; இவ்வாறு சிறார் நிலையிலேயே தொதவரது மண உறவானது உறுதி செய்யப்பட்டாலும் பெண்ணானவள் பூப்படைந்த பின்னரே தனது வாழ்விணையர் வீட்டிற்குச் சென்று இல்லற வாழ்வைத் தொடங்குகிறார். இத்தகைய இணைசேர் வாழ்வின் போது பெண் கருவுற, கருவுற்ற அத்தொதவப் பெண்ணின் ஏழாம் மாதம் அவளது வாழ்விணையரான தொதவ ஆடவன் அப்பெண்ணின் கருப்பையில் வளர்ந்து வரும் குழந்தைக்குத் தானே தகப்பன் என்று தனது உறவினர்க்கு உணர்த்திடும் வகையில் ஒரு வகை வாழ்க்கைச் சுழற்சிச் சடங்கானது கடைப்பிடிக்கப்படுகிறது; மேற்படி வாழ்க்கைச் சுழற்சிச் சடங்கை மேற்கொள்ளும் நாளன்று அக்கருவுற்ற பெண்ணின் வாழ்விணையரான பொதவ ஆடவன் தனது நண்பர் புடை சூழ அருகில் உள்ள சோலைக் காட்டிற்குச் *(Shola Forest)* சென்று, அங்குப் புவ் *(Sophorea Fuca)* எனும் திணைசார் குற்று மரத்தின் *(Endemic Shrub)* சிறு கிளையொன்றை வெட்டி எடுத்து,

அதை அரை வட்டதாக வளைத்து, அதன் நடுவே நர்க் *(Andropogan shoenanthes)* எனும் 'திணைசார் புல்'லின் *(Endemic Grass)* ஒரேயொரு நீண்ட தனி இலையை வைத்து, ஒரு வகையான சடங்குசார் பொருளை உருவாக்குகிறார். இவ்வாறு, தான் பெரிதும் முயன்று உருவாக்கிய சடங்குசார் பொருளைத் தனது கைகளில் ஏந்தியவாறு, அருகில் உள்ள புனித நாவல் மரத்தின் அருகே குழுமியுள்ள உறவுக் கூட்டத்தினர் இடையே அமர்ந்திருக்கும் தனது வாழ்விணையரது தந்தையைப் பார்த்து, "அச்சடங்குசார் பொருளைத் தன் கருப்பிணி மனைவிக்குக் கொடுக்கட்டுமா?" என்று கேட்டு, அவரது இசைவைப் பெற்று, அத்தொதவ ஆடவன் தனது இணையர்க்கு அதை அளிக்க முற்படுகிறார்;

அப்போது, அந்நிறை சூலியான தொதவப் பெண், "நீ எந்த குலத்தைச் சார்ந்தவன்?" என்றோ , "உன் குலத்தின் பெயர் என்ன?" என்றோ அவனிடம் வினவுகிறாள். இதற்குத் தக்க மறுமொழியாகக் கூடியுள்ள தனது தொதவ உறவுகளுக்கும் நட்புகளுக்கும் கேட்கும் வகையில், தனது தந்தைவழிக் குலத்தின் *(Patriclan)* பெயரை மும்முறை அத்தொதவ ஆடவன் உரக்கக் கூறுகிறார். இதைத் தொடர்ந்து, அத்தொதவ ஆடவன் அளிக்கும் அச்சடங்குசார் பொருளைப் பெற்றுக்கொண்ட அத்தொதவப் பெண்மணி, அதைத் தனது நெற்றியில் படுமாறு வைத்துக்கொண்டே, தங்களுடைய புனித நாவல் மரத்தின் கீழ்ப் பக்கத் தண்டில் புதிதாக வெட்டி உருவாக்கியுள்ள மாடம் *(Niche)* போன்ற அமைப்பில் வைக்கப்பட்டுள்ள எரியும் விளக்கைக் கண் இமைக்காமல் பார்க்கிறாள். இதையடுத்து, இணையர் இருவரும் அங்குக் குழுமியுள்ள உறவினர் அனைவரையும் வணங்கி வாழ்த்துக்கள் பெறுகின்றனர். அதைத் தொடர்ந்து, தொதவர் ஆடவர் குழு, பெண்டிர் குழு இரண்டும் தனித் தனியாகத் தமது மரபார்ந்த நிகழ்த்துக் கலையைப் பாடலுடன் ஆடி மகிழ்கின்றனர். பின்னர், விருந்து உணவுடன் இக்கருப்ப - இணைப்புச் சடங்கானது நிறைவு பெறுகிறது.

பெண்ணின் கருப்பையில் வளர்ந்து வரும் குழந்தைக்கு உரிய சமூகத்திற்கான தந்தையை *(Sociological Father)* அறிந்தேற்பு செய்து (குழந்தையையும் தந்தையையும்) இணைக்கும் வகையில் மேற்குறிப்பிட்ட வாழ்க்கைச் சுழற்றிச் சடங்கு அமைவதால், இதைக் 'கருப்ப இணைப்புச் சடங்கு' *(Pregancy - binding Ceremony)* எனத் தமது ஆய்வில் மிகச் சரியாகக் குறிப்பிட்டுள்ள மானுடவியலாளர்கள், இச்சடங்கு ஆற்றுகையின் போது *(Ceremonial observance)* தொதவ ஆடவன் அரை வட்ட வடிவ அமைப்பின் நடுவே நீட்சியாக அமையுமாறு தனது வாழ்விணையரான தொதவப் பெண்ணிற்குத் தானே உருவாக்கி அளித்திடும் சடங்கு சார் தொட்டுணர் பண்பாட்டுப் பொருளைக் *(Tangible Object of Culture),* குறியீட்டுநிலை வில் - அம்பு *(Symbolic Bow & Arrow)* என்று தவறாகக் கருதித், தொடர்புடைய வாழ்க்கைச் சுழற்சிச் சடங்கை வில் (அம்பு) அளித்திடும் சடங்கு *(Bow-giving Ceremony)* என்று தவறாகப் பதிவு செய்துள்ளமை வருத்தம் மேலிடச் செய்கிறது. தொடர்ந்து, அனைத்து (வெளிநாட்டு, உள்நாட்டு) மானுடவியலாளர்களும் இவ்வாறே தவறாகப் பதிவிட்டும் வருகின்றனர். இதில் உள்ள நகை முரண்' என்னவென்றால், தொதவப் பழங்குடியினரும் - மானுடவியலாளர்களைப் பின்பற்றி - இச்சடங்கை 'வில் - அம்பு சாஸ்த்ரம்' எனக் குறிப்பிடத் தொடங்கிவிட்டதோடு, தற்போது இதற்கான அழைப்பிதழ்களிலும்' வில்-அம்பு சாஸ்த்ர அழைப்பிதழ்' என்றே அச்சிடத் தொடங்கிவிட்டனர்; இதனால், அரை வட்ட அமைப்பானது தொதவரது அரை பீப்பாய் வடிவக் குடிலைக் குறியீடாகச் சுட்டி நின்று, அவர்தம் தந்தைவழிக் குலத்தைக் குறிக்கிறது - என்கிற உண்மையானது கால ஓட்டத்தில் கரைந்தே போய்விட்டது.

**நிறைவுரை**

குற்றப் பழங்குடிகள் *(Criminal Tribes)* என்னும் தனது தவறான சொல்லாடலை மானுடவியலானது நீக்கி விட்டு, 'சீர் மரபினர்' *(Denotified communities)* என்கிற சொல்லாட்சியை ஏற்றுக்கொண்டுள்ள இன்றைய கால கட்டத்திலும், மனிதராகப் பிறந்து, சமூகத்தில் 'குற்றவாளிகள்' என்று கருதப்பட்டு, அதனால் கொலை செய்யப்பட்டு, பின்னர் தெய்வ நிலைக்கு உயர்த்தப்பட்டுவிட்ட நிலையிலும் அத்தகைய நாட்டுப்புறத் தெய்வங்களைக் குறிக்கத் தொடக்க காலத்தில் பயன்படுத்தப்பட்ட *'Criminal Gods'* (அதாவது, 'குற்றவாளிக் கடவுளர்') என்பது இன்னும் அப்படியே மானுடவியல் பதிவுகளில் நீங்காத கறையாக நிலைத்துவிட்டமை ஓர் அவலமே.

"எழுதியவன் ஏட்டைக் கெடுத்தான்" என்கிற வகையில், மானுடவியல் ஆய்வுப் பதிவுகளுள் தற்செயலாக நேர்ந்துவிட்ட மேற்சுட்டியுள்ள வரலாற்றுப் பிழைகளை இன்றுவரை தொடர அனுமதிப்பதும் அறிவுடைமை ஆகாது.

"மானுடவியல் புலமானது மாந்தர் இனக்குழுக்களுக்கு இடையே உயர்வு, தாழ்வு கற்பிக்காது - வேறுபாடும் பார்க்காது" அதாவது, 'உயர் பண்பாட்டு மனப்பான்மை' *(Ethnocentrism),* 'தாழ் பண்பாட்டு மனப்பான்மை' *(Xenocentrism)* இரண்டுமே அறவே கூடாது" - என அறிவுறுத்தும். எனவே, 'மானுடவியல் புலத்தின் ஆய்வுப் பதிவுகளில் இத்தகைய தவறான சொல்லாட்சிகளுக்கு இனி இடம் இல்லை" என்று சொல்லும் வகையில், மானுடவியலாளர்களுடைய ஆய்வுப் பதிவுகள் இனி வருங்காலங்களில் அமைய வேண்டும்.

●

கட்டுரையாளர், மேனாள் இயக்குநர், பழங்குடியினர்
ஆய்வு நடுவம், தமிழ்நாடு அரசு.




# 101ஆம் வயதில் தோழர் ‘ஜனசக்தி’ வி.ராதாகிருஷ்ணன்

பொன்.தனசேகரன்

ஜனசக்தியின் தொடக்க காலம் முதல் அதில் பணியாற்றி வந்த வி.ராதாகிருஷ்ணன் என்னும் ‘ஜனசக்தி’ ராதா ஜூன் 13ஆம் தேதி 101வது வயதில் அடியெடுத்து வைத்துள்ளார்.

லண்டனில் படிக்கச் சென்று கம்யூனிஸ்ட்டாக மாறி 102 வயது வரை வாழ்ந்த சி.எஸ். சுப்பிரமணியம், 1942லிருந்து 1947வரை ஜனசக்தி வார இதழுக்கு பொறுப்பேற்று இருந்த போது அவருடன் நெருங்கிய தொடர்பு கொண்டு இருந்தவர் ராதாகிருஷ்ணன். அம்பத்தூர் நியூ செஞ்சுரி காலனியில் வசித்து வரும் அவர், பத்திரிகையாளர் மட்டுமல்ல, நல்ல மொழிபெயர்ப்பாளரும்கூட.

கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களில் ஒருவரான பாலதண்டாயுதம் பிறந்த பொள்ளாச்சியில் 1922 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 13ஆம் தேதி வி. ராதாகிருஷ்ணன் பிறந்தார். தந்தையின் பெயர் வாசுதேவன். தாயார் பெயர் செல்லம்மாள். பள்ளியில் படிக்கின்ற காலத்தில் தொடக்கத்தில் காங்கிரஸ் இயக்கத்தில் தீவிர ஈடுபாடு கொண்டிருந்தார். உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோதே பாலதண்டாயுதத்தின் முன்முயற்சியால் தொடங்கப்பட்ட பாலர் சங்கத்தில் அவரும் இணைந்து செயல்பட்டார்.

ஜீவானந்தத்தின் மேடைப் பேச்சுகளைக் கேட்டும் அவரது ஜனசக்தி கட்டுரைகளைப் பார்த்தும் ஈர்க்கப்பட்ட அவர்கள், பாலர் சங்கத்தின் பெயரை தீவிர வாலிபர் சங்கம் என்று பெயர் மாற்றி இருக்கிறார்கள். 1939ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற அன்றைய எஸ்எஸ்எல்சி பொதுத் தேர்வில் பள்ளியிலேயே அதிக மதிப்பெண்கள் பெற்று முதல் இடம் பெற்றார் ராதாகிருஷ்ணன். ஆனால், கல்லூரிப் படிப்பைப் படிக்க வசதியில்லாததால், அவரது மாமாவின் மளிகைக் கடையில் வேலைபார்த்து வந்தார்.

1942லிருந்து ஜனசக்தி இதழில் பணியாற்றிய ராதாகிருஷ்ணன், 1967இல் சோவியத் பலகணி வார இதழின் ஆசிரியர் குழுவில் சேர்ந்து அங்கு 23 ஆண்டுகள் பணியாற்றினார்

அரசியலில் தீவிர ஆர்வம் கொண்ட அவர், கம்யூனிஸ்ட் கட்சித் தடை செய்யப்பட்டதை அடுத்து, 19 வயதிலேயே வீட்டைவிட்டு வெளியேறி 1941ஆம் ஆண்டிலேயே தலைமறைவாக இருந்து கட்சிப் பணிகளைச் செய்து வந்தார். இரண்டாவது உலகப் போர் நடந்த போது ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்து பதினாறு வயதிலேயே களம் இறங்கியவர். 1942இல் கோவை கம்யூனிஸ்ட் சதி வழக்கில் கைது செய்யப்பட்டு பொள்ளாச்சி சப் ஜெயிலில் இரு மாதங்கள் சிறையில் இருந்தவர்.

1942இல் கம்யூனிஸ்ட் கட்சியின் அதிகாரப் பூர்வ இதழாக தொடங்கப்பட்டதும். தனது 20வது வயதில் ஜனசக்தியில் சேர்ந்து பணியாற்றத் தொடங்கினார். 1949இல் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டது. சென்னை அலுவலகத்தில் இருக்கும்போதே கைது செய்யப்பட்டு வேலூர் சிறையில் பாதுகாப்புக் கைதியாக இருந்தார்.

1942லிருந்து ‘ஜனசக்தி’ இதழில் பணியாற்றிய ராதாகிருஷ்ணன், 1967இல் ‘சோவியத் பலகணி’ வார இதழின் ஆசிரியர் குழுவில் சேர்ந்து அங்கு 23 ஆண்டுகள் பணியாற்றினார். ஜனசக்திக்காகக் கட்டுரைகளை மொழிபெயர்ப்பதிலும் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு தீர்மானங்களை மொழிபெயர்க்கும் வேலையையும் திறம்படச் செய்தவர் அவர்.

ரோசலிண்ட் மைல் எழுதிய *World History of Womens Movement* என்ற நூலை உலக வரலாற்றில் பெண்கள் என்ற தலைப்பில் தமிழாக்கம் செய்தவர். தனது அரசியல் அனுபவங்களை வாழ்க்கைத் திருப்பங்கள் என்ற புத்தகத்தில் எழுதியுள்ளார் ராதாகிருஷ்ணன்.

ஜீவானந்தம், பி. ராமமூர்த்தி, பி. சீனிவாசராவ், ஹனுமந்தராவ், சி.எஸ். சுப்பிரமணியம், மோகன் குமாரமங்கலம் போன்ற கம்யூனிஸ்ட் தலைவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்றவர் அவர். எஸ்.ஏ. டாங்கே, பி.சி.ஜோஷி, அஜய் கோஷ் போன்ற கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் மேடைப் பேச்சை ஆங்கிலத்திலிருந்து எளிய தமிழில் மொழிபெயர்ப்பதில் வல்லவர்.

“ராதாகிருஷ்ணன் அடக்கமானவர். ஆங்கிலத்திலும் தமிழிலும் சரளமாகப் பேசக்கூடியவர். பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் தலைவரும் ‘டெய்லி வொர்க்கர்’ என்ற ஆங்கில இதழின் ஆசிரியராக இருந்தவருமான ரஜினி பாமிதத் முதல் லண்டனில் படித்து கம்யூனிஸ்ட்டாக இந்தியா வந்த மோகன் குமாரமங்கலம் வரை அனைவருக்கும் தமிழ்நாட்டு மேடையில் மொழிபெயர்ப்பு செய்தவர். பொருள் பிசகாமலும் சொல் சுத்தமாகவும் சரளமாக மொழிபெயர்ப்பு செய்தவர்” என்கிறார் நல்லகண்ணு.

"மாணவப் பருவத்தில் முதல் மாணவராக இருந்தார். கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த மறைந்த தோழர் அஜய்கோஷ், ஆறு அடி உயரமுள்ளவர். எனவே, ஒலி பெருக்கி அமைப்பாளர் அவருக்காக ஒலிபெருக்கியை உயர்த்தி நிறுத்துவார். பக்கத்தில் உயர்நிலைப் பள்ளி மாணவன் உருவத்தில் ராதாகிருஷ்ணன் இருப்பார். மொழிபெயர்ப்பு சரியாகவும் அழகாகவும் இருக்கும்” என்பார் மறைந்த கம்யூனிஸ்ட் தலைவர் தா. பாண்டியன்.

“மனிதரின் மறக்காத ஆசைகளில் ஒன்று, நூறு ஆண்டுகள் வாழ வேண்டும் என்பது. எத்தனைதான் முயன்றாலும் விரல் விட்டு எண்ணத்தக்கவர்கள் மட்டுமே நூறு வயதை எட்டியிருக்கிறார்கள். பல்வேறு கொடிய அடக்குமுறைகள், சிறைச்சாலை, ஆயுள் தண்டனை என்று இளமைக் காலத்தில் துயரங்களை சந்தித்த கம்யூனிஸ்ட் தலைவர்கள் நூறு வயதைக் கடந்தும் வாழ்வது வியப்பை அளிக்கத்தான் செய்கிறது. இது குறித்து மனநல மருத்துவர் ஒருவரிடம் கேட்டேன்.

அதற்கு அவர் அளித்த பதில் எனக்கு திருப்தியை அளித்தது. "தனக்கென்று வாழாமல் பிறருக்கென்று வாழும் மனமும், தனி மனித ஒழுக்கமும் நீண்ட காலம் வாழ வகை செய்கிறது" என்று குறிப்பிடுகிறார் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் சி. மகேந்திரன்.

பாப்பா உமாநாத் மூலம் அறிமுகமான திருச்சி பொன்மலையில் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த அந்தோணிசாமியின் மகளான மோட்சம் மேரியை, அனந்த நம்பியார் தலைமையில் பதிவுத் திருமணம் செய்து கொண்டவர் ராதாகிருஷ்ணன். மோட்ச மேரி 2012இல் காலமானார்.

இவர்களது மகள்கள் கீதா, சாந்தி, பாரதி ஆகியோரின் திருமணங்களும் சாதி மறுப்புத் திருமணங்கள்தான் என்பது குறிப்பிடத்தக்கது. 1942 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 10ஆம் தேதி முதல் அக்டோபர் 10ஆம் தேதி வரை 2 மாத காலம் பொள்ளாச்சி துணைச் சிறையில் இருந்தது குறித்து 1982இல் தமிழக அரசிடம் விண்ணப்பித்து தியாகிக்கான பென்ஷன் வாங்க ராதாகிருஷ்ணன் பட்டபாடு தனிக்கதை.

நன்றி: இன்மதி.காம்

●

கட்டுரை



# கவி கா.மு. ஷெரீபின்
# கலைஞர் 63

பேராசிரியர் உ. அலிபாவா

கவிஞர், தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களைப் பற்றியொரு காவியம் எழுத வேண்டும் என்று ஆசைப்பட்டார். எழுத்துலகில் குறிப்பாகத் திரையுலகில் கலைஞர் அவர்களை முதன்முதலில் அறிமுகப்படுத்திய பெருமை கவிஞர் அவர்களையே சாரும். இருவரும் இருவேறு இயக்கங்களின் தளபதிகளாய் இருந்தனர். காலம் கலைஞருக்குக் கைகொடுத்தது. கவிஞருக்குக் காலம் மட்டுமல்ல உடனிருந்த தமிழரசுக் கழகத் தலைவர் சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானமே கைகொடுக்ககவில்லை. கலைஞரும் கவி கா.மு.ஷெரீபும் இருவேறு இயக்கங்களில் இருந்தாலும் உள்ளத்தால் ஒன்றுபட்டவர்களாகத்தான் இருந்திருக்கின்றனர். கலைஞரின் வளர்ச்சியைக் கவிஞர் எட்டியிருந்து பார்த்து நாளும் நாளும் மகிழ்ந்திருக்கிறார் என்பதற்கு அவருடைய வாழ்க்கை நெடுகிலும் பல சான்றுகள் இருக்கின்றன. அந்த மகிழ்வின் விளைவாகத் தான் கவிஞர் ‘கலைஞர் காவியம்’ எழுத ஆசைப்பட்டார். ஆனால் அது ‘கலைஞர் 63’ என்ற சிறுநூலாக 1986 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வெளிவந்துள்ளது.

இந்த நூல் பற்றி ஓவியப் பாவலர் மு. வலவன் தம் 'நெஞ்சத் திரையில் நினைவுக் கோடுகள்' எனும் நூலில், "செரீப் ஐயா அவர்கள் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றினைக் காப்பியமாக எழுத முனைந்து ஏறத்தாழ ஆறு விருத்தங்கள் அப்பொழுது எழுதி வைத்திருந்தார்கள். அவர்கள் கண் அறுவைச் சிகிச்சையின் பொருட்டு மயிலாப்பூர் குளம் எதிரில் அப்பொழுது அமைந்திருந்த தனியார் மருத்துவமனை ஒன்றில் தஞ்சம் புகுந்த பொழுது கலைஞருக்குத் தகவல் தெரிவிக்க விழைந்தார்கள். நான் அதனைப் படி எடுத்துக் கொண்டு நண்பர் நாகநாதன் மூலம் கலைஞர் அவர்களைச் சந்தித்து அதனைக் காண்பித்து விட்டு வந்தேன். இவ்வாறு செரீப் ஐயா அவர்களுக்குச் சேதுவுக்கு அணைகட்ட முனைந்த இராமனுக்குச் சிறுஅணில் உதவியது போல நான் உதவி செய்ததில் பெருமகிழ்ச்சி பெற்றேன்" என்று குறிப்பிடுவதுடன், "அப்பொழுது நான் நடத்தி வந்த 'வண்ணச்சிறகு' இலக்கியத் திங்களேட்டில் (தி.பி. 2009 கும்பம், மீனம் ஏப்பிரல் 19) அப்பாடல்களை வெளியிட்டு மகிழும் பேறு பெற்றேன். ஐயா அவர்களின் அறுவைப் பண்டுவம் நிகழ்வதற்குமுன் தொழுகை நடத்திய காட்சியும், அண்ணியார் கண்ணீர் விட்டு அழுத பொழுது அவர்களைக் 'கவிஞர் வானம்பாடி' தேற்றிய காட்சியும் நெஞ்சத் திரையில் நிழலாடுகின்றன. இச்சூழலால் "கலைஞர் காவியத்தை 'வண்ணச் சிறகில் தொடர்ந்து வெளியிட முடியவில்லை. அதைப் போலவே அவர்கள் எழுதித் தருவதாக வாக்களித்திருந்த 'வன்னியத் தேவன்' எனும் வரலாற்றுத் தொடர் புதினமும் வண்ணச்சிறகில் வெளியிட இயலாமற் போயிற்று. அதுபற்றி வெளியிட்ட விளம்பரம் மட்டும் நினைவுச் சின்னமாய்க் காட்சி அளிக்கிறது" என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

'கலைஞர் 63' எனும் நூலில் அறுசீர் தொடங்கிப் பதினாறு சீர் விருத்தங்கள் வரை மொத்தம் 63 பாக்கள் உள்ளன. கலைஞரின் 62 ஆவது ஆண்டு வாழ்வைப் போற்றும் வகையிலும் 63 ஆவது பிறந்த நாளுக்கு வாழ்த்துரைக்கும் வகையிலும் இந்நூல் கவிஞரால் படைத்து வெளியிடப்பட்டுள்ளது.

"அறிவின் குன்றே! அன்புருவே!
அழியாத் தமிழின் தலைமகனே!
நிறைந்த மனத்தோய்! நெடிபுகழோய்!
நிலைத்த தமிழர் தனித்தலைவா!
முறையாய் ஆட்சி நடத்துவதில்!
முன்னோர் வழியில் துலங்கியவா!
செறிவார் கருணா நிதிப்பெயரோய்!
தேயம் உய்ய வாழியநீ!" (1)

என அறுசீர் ஆசிரிய விருத்தத்தில் வாழ்த்துரைத்துக் கவிஞரின் 'கலைஞர் 63' எனும் இந்நூல் தொடங்குகிறது. நூல் நெடுகிலும் கலைஞரின் வாழ்வியல் வரலாறுகளும் கலைஞரின் குறிப்பிடத்தக்க தகுதிகளும் மாண்புகளும் எடுத்துரைக்கப்பட்டு வாழ்த்தப்படுகின்றன. ஆனால் "மலரும் நினைவுகள்" போல இலக்கியச் சுவைஞர்களாகிய உங்களுக்குக் "கலைஞர் காவியத்திலிருந்து" இப்பாடல்களை வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்" எனக் கூறி 'நெஞ்சத்திரையில் நினைவுக்கோடுகள்' எனும் நூலில் ஓவியப் பாவலர் மு. வலவன், குறிப்பிடும்,

"ஆலயத்தில் தமிழ் முழங்கும்
அதுவே முழங்கும் வீதியெலாம்
கோலக் கலைகள் முழக்கமிடும்
கூத்தும் பாட்டும் உண்டென்றும்
சேலை நிகர்த்த விழிப்பெண்கள்
சீர்த்திப் பாட்டில் பயிர் வளரும்
சாலச் சிறந்த சிற்றூராம்
தமிழர் உவக்கும் திருக்குவளை"

"இந்த ஊரில் நடுத்தரத்தார்
இல்லம் ஒன்றின் நற்றலைவர்
அந்தம் நிறைந்த ஐயாதுரை
அவர்நல் மகவாய் வந்துதித்தார்
இந்து நானும் வதனமுள
எழிலார் முத்து வேலரென்பார்
நந்தம் முத்து வேலர்பெற்ற
நல்லார் கருணாநிதிக் கலைஞர்"

எனும் பாடல்கள் இந்நூலில் இடம் பெறவில்லை. கவிஞர் கலைஞரைப் பற்றித் தனியொரு பெருங்காவியம் பாடியிருந்தால் கலைஞரின் கவினார்ந்த வாழ்க்கை, கவிஞரின் கைவண்ணத்தில் 'காவிய மாளிகையாய்' அலங்கரிக்கப்பட்டிருக்கும்.

கலைஞர் காவியம் பாட விழைந்த கவிஞரைப் பற்றியும் கலைஞரைப் பற்றியும் கூறும் மு. வலவன், "இவ்வாறு 'கலைஞர் காவியம்' பாடிய பாவிசைக்கோவுக்குக் 'கவிதைச் செல்வம்' என்ற விருதினை வழங்கிச் சிறப்பித்தார் கலைஞர் அவர்கள். அப்பொழுது அவர்கள் ஆற்றிய உரையை வண்ணச் சிறகு (பிப்ரவரி 79) ஏட்டில் வெளியிட்டிருந்தேன்" எனப் பதிவு செய்கிறார்.

முரசொலியில் 2.1.1979 அன்று வெளிவந்த, "நான் அண்ணன் என்று அழைத்துப் பழக்கப்பட்ட கவிஞர் கா.மு. செரீப் அவர்கள் 'கவிதைச் செல்வம்' என்ற விருதினைப் பெற்றிருக்கின்றார்கள். தஞ்சை மாவட்டத்தில் திருவாரூருக்கு அருகில் 'வேலுக்குடி' என்ற ஊரிலே பிறந்து (கவிஞர் அபிவிருத்தீஸ்வரத்தில் பிறந்தார்; அருகிலுள்ள வேலுக்குடியில் இளமைக்காலத்தில் வாழ்ந்தார்) தமிழ்க்குடி வேல்பிடித்த

குடி என்பதை உலகிற்கு அறிவிக்கின்ற வகையில் அவர்கள் தமிழ் வாழ - தமிழர்களின் நலன் காக்கப் பாட்டெழுதினார்; பணியாற்றினார்; தொடர்ந்து பணியாற்றிக் கொண்டு வருகிறார்" என்று கலைஞர் அவர்கள் கவிஞருக்கு விருது வழங்கிப் பாராட்டிப் பேசியுள்ளார்.

தமிழையும் தமிழ் நாட்டையும் கலைஞரையும் கவிஞருக்குத் தனித்தனியே பிரித்துப் பார்க்க மனம் வரவில்லை. அதனால் தான் 'கலைஞர் 63' இல் கலைஞரை வாழ்த்திப் பாடுகின்றபோது,

**தமிழைச் சூழ்ந்த கேடகலத் தமிழர் வாழ்வில் நலம் துலங்க**
**தமிழ்நாட் டரசு செம்மையுற தன்னிக ரில்லா ஆட்சிவர**
**கமழ்தேன் கலந்த சொல்லாலே கனிவார் கருத்துத் தருகின்ற**
**அமிழ்தாம் கருணா நிதிப்பெயரோய் அருந்தமிழ் வாழ வாழிய நீ!**

என்று கவிஞர் வாழ்த்திப் பாடுகின்றார்.

'அண்ணா போற்றும் கருணாநிதி எண்ணம்தனிலே தமிழினத்தை எண்ணி நாளும் உழைப்பவர்' எனக் குறிப்பிடும் கவிஞர், கலைஞரின் இயல்பை,

"யாரோ உழைத்த உழைப்பாலே ஏற்றம் காண்போன் நீயல்ல! போராட்டங்கள் நடக்கையிலே போயெங்கோ நீ ஒளியவில்லை! சீரார் கழகம் தனை வளர்க்கச் சிறையில் பலநாள் தவமிருந்த பேரார் கருணா நிதிச் செல்வ, பிணி மூப்பின்றி வாழிய நீ! இந்திப் போரில் சிறை புகுந்தாய்! எழுந்த கல்லக் குடிப்போரில் வெந்த மனத்தார் சிறைப்பிடித்தார்! வெகுண்டெழுந்த மும்முனைப்போர் தந்ததுனக்குச் சிறைவாசம்! சகித்தே அண்ணன் வழி நடந்த எந்தம் கருணா நிதிச் செல்வ, இருந்தமிழ் வாழ வாழிய நீ! டில்லி அஞ்ச ஆண்டவன் நீ! நின்தமிழ் சிறக்க ஆண்டவன் நீ! நல்ல இளைஞர் தமைப்படையாய்; நாளும் கொண்டு வாழ்பவன் நீ! இல்லை இன்றிங்கு உனைநிகர்த்தார் ஏற்றம் மிகுந்த ஆட்சிதர வல்ல கருணா நிதிப்பெயரோய், வாய்மை சிறக்க வாழிய நீ! பெரியார் பள்ளி மாணவனே! பேணி அண்ணா வழிநடப்போய்! வறியோர் வாழத் திட்டம் பல வகுத்தே ஆட்சி நடத்தியவா! வருமா இந்தி மொழிப்பேயை வாராதோட்ட வல்லவனே! திருவார் கருணா நிதிச் செல்வ தேசம் வாழ வாழிய நீ! பிள்ளைப் பருவம் முதலாகப் பேச்சுக் கலையில் வல்லவனே! தெள்ளத் தெளியக் குறட்பாவைத் தேயத் தோருக் குரைப்பவனே! எள்ளலின்றிக் கலையுலகில் இன்றும் என்றும் நிற்கின்ற உள்ளம் உயர்ந்த கருணாநிதி உயர்மா மணியே வாழிய நீ! உழைப்பால் உயர்ந்த உத்தமனே! ஓயா துழைக்கும் மாமணியே பிழைப்பில் லாத



வேளையிலே பிழைக்க எண்ணி அரசியலில் நுழைந்தே தேசம் தனைக்கெடுக்கும் நொய்யல் புத்தியில் லாதவனே! அழியாத் தமிழ்த்தாய் நன்மகனே அணிசேர் கலைஞ, வாழிய நீ! எனப் பலவாறு கவிஞர் கலைஞரை வாழ்த்தி மகிழ்கிறார்.

அந்த வாழ்த்து தலுக்குள்ளும் பல்வேறு உண்மை வரலாற்றுத் தகவல்கள் புதைந்து கிடக்கின்றன. அதனால் இந்நூல் எண்ணுந்தொறும் எண்ணுந்தொறும் எடுத்துப் பயிலும் ஏற்றமிகு நூலகத் திகழ்கிறது. 62 விருத்தப்பாக்களின் நிறைவாக 63 ஆவதாக,

**அகிலம் அறிந்த அண்ணலே வாழி!**
**ஆன்ற குணத்துச் சான்றோய் வாழி!**
**இல்லார்க் கிரங்கும் நல்லவா வாழி!**
**ஈடிலா உழைப்பின் ஏந்தலே வாழி!**
**உலகிடைத் தமிழை உயர்த்தியோய் வாழி!**
**ஊக்கமாய்த் தீமையை எதிர்ப்பவா வாழி!**
**எழிலார் தமிழினக் காவலா வாழி!**
**ஏலார் துயர்துடைத் திடுபவா வாழி!**
**ஐயமில் நல்லர(சு) அமைப்பவா வாழி!**
**ஒன்றே தமிழினம் என்பவா வாழி!**
**ஓவாக் கீர்த்திக் குரியநற் கலைஞ,**
**ஔவிய மறநூ றாண்டுநீ வாழ்கவே!**

எனும் உயிர் வருக்க அகவலோடு கவிஞர் நூலை நிறைவு செய்கிறார். இருந்தபோதும் நூலில் கவிஞர் நெஞ்சம் நிறைவடையவில்லை. ஆகவே அதன் பின்னும் கவிஞர் கலைஞரை, 'வாழ்க கலைஞர்!', வாழ்க தமிழினம்! வாழ்க தமிழ்!, வாழ்க தமிழ்நாடு!, வாழ்க பாரதம்!, வாழிய உலகெலாம்! என வாழ்த்தி நிறைவு செய்கிறார். கலைஞர் வாழ்ந்தால் தமிழினம் வாழும், தமிழினம் வாழ்ந்தால் தமிழ் வாழும், தமிழினமும் தமிழும் வாழ்ந்தால் தமிழ்நாடு வாழும், தமிழ்நாடு வாழ்ந்தால் பாரதம் வாழும்; இவை அனைத்தும் வாழ்ந்தால் உலகிற்கே வழி காட்டும் தமிழ் மூலம் உலகம் வாழும் எனும் கருத்துடையவர் கவிஞர் போலும்.

கட்டுரையாளர், தமிழியல்துறைத் தலைவர்,
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி


நூல் அறிமுகம்



# தமிழகத்தில்

## திராவிட கருத்தியலின் நீண்ட பயணம்

ஏ.தெ.சுப்பய்யா




உலக மயமாக்கல், தாராளமயமாக்கல் எனும் ஏகாதிபத்தியத்தின் மாய்மால மோசடிகளுக்குப் பிறகு பெரும்பாலான அறிஞர்கள் பன்னாட்டு நிறுவனங்களின் முகவர்களாக மாறிவிட்டார்கள். இத்தகைய பின்புலத்தில் சமுதாய அக்கறை, மானுடநேயம், விளிம்புநிலை மக்கள் மீது கரிசனம், இயல் பண்பு கொண்ட ஓர் அறிஞரின் நூலை நான் பயிலும் வாய்ப்பை தோழர் ப.கு.ராஜன் அவர்கள் வழங்கினார்கள்.

புகழ் வாய்ந்த பேராசிரியர், ஜெ.ஜெயரஞ்சன் அவர்களின் *A Dravidian Journy* (ஒரு திராவிடப்பயணம்) எனும் நூல் ஒரு நூற்றாண்டு காலத்தின் இலக்கியமாகவும் சமுதாயப் பொருளியல், அரசியல் பொருளியல் பற்றிய ஆவணக் களஞ்சியமாகவும் திகழ்கிறது. 1916 முதல் 2014 வரையிலான தமிழ்நாட்டின் சமுதாயவியல் வரலாறும் வளர்ச்சியும் மாற்றமும் நம் கண்முன்னே தொடர் காட்சிகளாக நிகழ்கின்றன. பேராசிரியர் ஜெயரஞ்சன் அவர்கள் இன்றைய திமுகழக ஆட்சியின் திட்டக்குழுவின் தலைமைப் பொறுப்பிலிருப்பது நம்பிக்கையளிக்கிறது. எதிர்பார்ப்புகளைக் கொண்டிருக்கிறது.

அய்ரோப்பிய நாடுகளில் நிலப்பிரபுத்துவத்தை ஒழித்துக் கட்டிய பெருமுதலாளித்துவம் மதநிறுவனத்தை பின்னுக்குத் தள்ளி நவீன அறிவியலை வளர்த்து வந்த பெருமுதலாளித்துவம், சீரழிந்த நிலையில், தேங்கி நின்று அதே நிலப்பிரபுத்துவத்தின் கிழட்டுக் கணிகைகளான மத அடிப்படைவாதத்தை பல்வேறு நாடுகளில் வெறியாட்டம் ஆடவைத்திருக்கிறது.

தமிழ் நாட்டின் நிலப்பிரபுத்துவத்தின் தாதிகளான சைவத்தை வெள்ளாளர்களும் வைணவத்தை பிராமணர்களும் பக்தி இயக்கம் எனும் பெயரால் வளர்த்தார்கள். அதன் நோக்கம் நிலப்பிரபுத்துவ சமுதாய பொருளாதார அரசியலை நிரந்தரமாக நிலைக்க வைப்பது தான்.

அந்த நிலப்பிரபுத்துவம் ஒழிக்கப்பட்டதில் தமிழர் அரசியல் சமுதாய இயக்கங்களின் குறிப்பாக பெரியார் இயக்கம், கம்யூனிஸ்ட் இயக்கம் ஆகியவற்றின் பங்களிப்பு பற்றியும் கலைஞரின் ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட சட்டவடிவங்களும் பற்றியும் அதன் விளைவுகள் பற்றியும் பேராசிரியர் ஜெயரஞ்சன் விரிவாக ஆய்வு செய்து எழுதியிருக்கிறார். வடபாதிமங்கலம் வி.எஸ்.தியாகராஜ முதலியார், குன்னியூர் சாம்பசிவ அய்யர், வலிவலம் தேசிகர், உக்கடை தேவர் போன்ற நிலப்பிரபுக்களில் ஒவ்வொருவரும் சில கிராமங்களுக்கு உரிமையாளர்கள். பல ஆயிரம் ஏக்கர் நிலத்திற்கு உடைமையாளர்கள். அவர்களது அதிகாரத்துக்கு எதிரான தொடர் போராட்டத்தில் வெற்றி பெற்றோர் காலம்காலமாய் ஒடுக்கப்பட்ட தலித்துகளும் இடைநிலை சாதி விவசாயிகளும் என்பது பெருமைக்குரிய வரலாறு அல்லவா?

காமராஜர் ஆட்சி நில உச்சவரம்புச் சட்டம் கொண்டு வந்தது. அந்தச் சட்டம் அமலுக்கு வரப்போவது மேல் ஜாதி அதிகாரிகளாலும் காங்கிரஸ் மந்திரிகளாலும் கசியவிடப்பட்டது. பதினாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பினாமி சொத்துக்களாக மாற்றப்பட்டு உச்சவரம்பு சட்டமல்ல, மிச்சம் வரம்புசட்டம் என்று கம்யூனிஸ்டுகளால் விமர்சிக்கப்பட்டது. மீண்டும் நிலச்சீர்திருத்தச் சட்டம் வாரக் குத்தகை விவசாயிகள் பாதுகாப்புச்சட்டம் போன்றவை கலைஞர் கருணாநிதி அவர்களின் ஆட்சியில் சரியாக அமல்படுத்தப்பட்டு பல்லாயிரம் ஏக்கர் நிலங்கள் நேரடியாக விவசாயம் செய்யும் எளியோர் கைகளுக்கு மாறியதை பேரா.ஜெயரஞ்சன் பட்டியலிட்டிருக்கிறார்.

காவிரிச் சமவெளி விஷ்ணாம்பேட்டை கிராமத்திலும் தாமிரபரணிச் சமவெளி கங்கை கொண்டான் கிராமத்திலும் பிராமணர்கள் மற்றும் வெள்ளாளர்களின் பலநூறு ஏக்கர் நிலவுடமை இடைநிலைச் சாதி மற்றும் தலித் விவசாயிகளுக்கு கைமாறியிருப்பதை அறிந்து கொள்ள முடிகிறது. பிராமணர்களும் வெள்ளாளர்களும் அதிகாரம் செலுத்தி வந்த கிராமங்கள் ஒடுக்கப்பட்ட சாதியினருக்கு உரியதாயிருப்பது சாதாரண விஷயமல்ல. 7 ஆம் நூற்றாண்டு முதல் உச்சகட்ட அதிகாரம் கொண்ட நிலப்பிரபுக்கள் 19 ஆம் நூற்றாண்டிலிருந்து பெருநகரங்களுக்கு, ஆங்கிலக் கல்வி வழியாக வந்தேறிகளின் ஆட்சியில் அதிகாரம் பெறுவதற்காக புலம்பெயர்ந்து சென்றிருக்கிறார்கள். அதே ஆதிக்க ஜாதிகளைச் சேர்ந்த ஒரு சிலர் நிலவுடைமைகளுக்கு குத்தகைதாரர்களாக நியமிக்கப்பட்டு அவர்கள் எளிய விவசாயிகளுக்கு உள்குத்தகை விட்டு, நிலப்பிரபுத்துவ அதிகாரம் நீடித்து நிலைக்க சேவை செய்திருக்கிறார்கள்.

நிலப்பிரபுக்களுக்கு வாரதாரர்கள் விளைச்சலில் 80 சதவீதத்துக்கு மேல் செலுத்த வேண்டியிருந்தது. அதைவிட வெங்கொடுமை மேலும் 10 வகையில் விவசாயி தெண்டம் அழவேண்டியிருந்தது, அவை, கிடைக்கூலி, வண்டிச் சத்தம், நீராணிக்கம், கோயில்பத்து, வைக்கோலடை, விரைப்பத்து, கடச்சப்பத்து, மரக்கால் துண்டு, கூத்தாடிப்பத்து, தரிசுக்கூலி, அப்படிக் கசக்கிப் பிழியப் படும் விவசாயிக்கு என்னதான் மிஞ்சும். பட்டுக்கோட்டையாரின் பாடல்தான் நினைவுக்கு வருகிறது.

**காடு வெளஞ்சென்ன மச்சான் - நமக்கு**
**கையும் காலும் தானே மிச்சம்...**

அதைவிட பரிதாபத்துக்குரியவர்கள் பண்ணையாள் என்போர். அவர்கள் கருவறையில் இருக்கும் போதே அடிமைகளாக்கப்படுகிறார்கள். ஏனென்றால் பண்ணையாளுக்கு பெண் பார்ப்பது தாலிக்கு பொட்டுத்தங்கம் மற்றும் கல்யாணச் செலவு நிலப்பிரபுவுடையதே. ஆகவே பண்ணையாளின் உடம்புகூட அவனுக்குச் சொந்தமானதல்ல. பல நேரங்களில் பண்ணையாள் மனைவி பாலியல் வன்கொடுமை செய்யப்படுவாள்.

பேரா.ஜெயரஞ்சன் சொல்லும் மேல்ஜாதி அநீதிகளுக்கு அடிப்படை என்ன? அவைகளை எதிர்த்துக் கேள்வி கேட்கவோ போராடவோ முடியாதா?!

“...ஒரு சூத்திரன் தன்னுடையதென்று சொத்து எதனையும் கொண்டிருக்கக் கூடாது...” (மனு, VIII-417) ”...ஒரு சூத்திரன் தன்னால் முடியுமென்றால் கூட சொத்து சேர்ப்பது கூடாது, சொத்து சேர்க்கும் சூத்திரன் பிராமனர்களுக்கு வலி ஏற்படுத்துகின்றான்...” (மனு X-129) “.. பிராமனர்கள் சூத்திரர்களுக்கு மீந்து போன உணவு, கிழிந்து போன ஆடைகள், உடைந்துபோன பாத்திரங்கள் ஆகியவற்றையேத் தர வேண்டும்...” (மனு, X - 125).. நிலப்பிரபுத்துவத்தின் அவக்கேடான

தத்துவ அறிஞர் காலடி சங்கராச்சாரி எழுதுகிறார் (9 ஆம் நூற்றாண்டு), "...சூத்திரன் அறிவு பெற உரிமையற்றவன்; ...சூத்திரன் எந்த உரிமையும் இல்லாதவன்...; "சூத்திரன் நடமாடும் சுடுகாட்டுக்கு சமமானவன்..." (ஆதி சங்கரரின் பிரம்ம சூத்திர பாஷ்யம், அத்தி.1, பகுதி III, சூத்திரம் 34, 37, 38.) அந்த சங்கராச்சாரியைத்தான் பகவத் பாதாள், ஷண்மதஸ்தாபகர் என்று பிராமணர்கள் இன்றும் கொண்டாடுகிறார்கள்.

பிராமணர்கள் உலகமெங்கும் அந்த பகவத் பாதாளின் புகழை இன்றும் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். சைவ தத்துவ, வைணவ தத்துவ அறிஞர்கள் காலடி சங்கராச்சாரியின் பல கொள்கைகளை ஏற்றுக் கொண்டவர்களே. உலகம் மாயை என்ற சங்கராச்சாரியின் கொள்கை மட்டுமே இவர்கள் ஏற்றுக் கொள்ளாதது. இவற்றை ஜெயரஞ்சன் எழுதவில்லை; ஆனால் இது தானே பின்புலம்?

தமிழ் நாட்டில் பிராமண ஜாதியின் ஆதிக்கம் நிலவிய சதுர்வேதி மங்கலங்களில் அவை அமல்படுத்தப்பட்டன. சர்வ முட்டாள் மன்னர்களின் ஆட்சிப் பகுதிகளில் அமல்படுத்தப்பட்டிருக்கலாம். பிராமணர்களும் வெள்ளாளர்களும் நில மான்யம் பெற்ற பகுதிகளில் குடிமக்கள் எவ்வளவு கொடுமைகளை அனுபவித்தார்கள் என்ற துயரங்களின் வரலாற்றை பேரா.ஜெயரஞ்சன் விவரித்திருக்கிறார். 1940 லிருந்து கம்யூனிஸ்டு விவசாயிகள் சங்கத்தின் தொடர் போராட்டம் பிராமண ஜாதி மேலாதிக்கத்தை கண்டித்து பெரியார் இயக்கம் நடத்திய போராட்டம், இறுதியாக கலைஞர் தமிழக முதல்வர் கருணாநிதி அவர்களின் புதிது புதிதான உரிமை மீட்பு சட்டங்கள் நிலப்பிரபுத்துவத்தை தமிழக மண்ணிலிருந்து ஒழித்துக்கட்டியதை பேராசிரியர் மிக விரிவாக பதிவு செய்திருக்கிறார்.

பேரா.ஜெயரஞ்சனின் ஆய்வுகள் சமூக அறிவியல் விதிகளின்படி மிகத் துல்லியமாக நடத்தப்பட்டவை. நூற்றுக்கணக்கான ஆய்வு நூல்கள், நூற்றுக்கணக்கான கள ஆய்வுகளின் சாரமாக இந்த நூல் எழுதப்பட்டிருக்கிறது. பல கள ஆய்வுகளில் பேரா.ஜெயரஞ்சன் நேரடியாக உழைத்திருக்கிறார். தமிழகத்தின் கிராமப்புற சமூக நிலை மற்றும் மாற்றங்கள் குறித்து தனக்கு முன் நடந்த ஆய்வுகள், ஆய்வு முறைபாடுகள், அவற்றின் நிறை, குறைகள் பற்றிய பேராசிரியரின் கருத்துகள் என்பதோடு நூல் தொடங்குகின்றது. ஃபிரான்சிஸ் புச்சானன் (1800), கில்பர்ட் ஸ்லேட்டர் (1916), கேத்லின் கோ (1950-1980), எஸ்.குகன் (1983), வெங்கடேஷ் ஆத்ரேயா (1984) போன்ற அவரது முன்னோடிகளின் ஆய்வுகள் குறித்த அறிமுகமும் நமக்குக் கிடைக்கின்றது.

தமிழகத்தின் கிராமப்புற சமூக மாற்றங்கள் குறித்த ஆய்வில் 'ஸ்லேட்டர் கிராமங்கள்' முக்கியமானவை. சென்னை (அப்போது மதராஸ்) பல்கலைக் கழகத்தின் பொருளாதாரத் துறையின் முதல் பேராசிரியரும் துறைத் தலைவருமான கில்பர்ட் ஸ்லேட்டர் அவர்களும் அவரது மாணக்கர்களும் சமூகவியல் கணக்கெடுப்பும் ஆய்வும் நடத்திய அன்றைய மதராஸ் ராஜதானியின் 17 கிராமங்கள்தாம் 'ஸ்லேட்டர் கிராமங்கள்'. அவர்கள் தம் கணக்கெடுப்பு, ஆய்வு முடிவுகளை 1918 ஆம் ஆண்டு பதிப்பித்தனர். அந்த 17 கிராமங்களில் 5 இன்றைய தமிழ் நாட்டில் உள்ளன. இவற்றில் ஸ்லேட்டர் காலத்திற்குப் பிறகு மீண்டும் மீண்டும் சமூகவியல் கணக்கெடுப்பும் ஆய்வுகளும் நடந்துள்ளன. நூலாசிரியரான பேராசிரியர் ஜெயரஞ்சனும் இருவேல்பட்டு, கங்கைகொண்டான், பாலக்குறிச்சி ஆகிய ஸ்லேட்டர் கிராமங்களில் தன் சகாக்களுடன் கள ஆய்வில் ஈடுபட்டுள்ளார். அதன் அடிப்படையில் கடந்த 90 ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள சமூக மாற்றங்களை வடித்தெடுத்துத் தந்துள்ளார். பலவேறு மாற்றங்கள், முன்னேற்றங்கள் நடைபெற்றிருந்தாலும் இன்னமும் மாற்றம் காணாத ஊரும் சேரியும் என்ற பிளவுகள், தலித் மக்களில் கணிசமானோர் நிலமற்ற விவசாயக் கூலிகளாகத் தொடரும் நிலை, இன்னமும் தொடரும் தீண்டாமை ஆகியவற்றை எடுத்துக்கூறி, நாட்டிலேயே நகர்மயம் அதிகம் ஆன மாநிலத்தில், மேம்பாடுகள் அதிகம் நடைபெற்றுள்ள மாநிலத்தில் தந்தைப் பெரியாரின் வழிவந்தோர் ஆட்சிகள் தொடர்ந்து நடக்கும்போது இப்படி இருப்பது வெட்கக்கேடானது என்பதை சுயவிமர்சனத்தோடு இடித்துரைக்க ஜெயரஞ்சன் தயங்கவில்லை. அவர் இதைச் செய்வதால்தான் அவரது பாராட்டுகளும் நமபகத்தன்மை பெறுகின்றன.

5 ஆம் நூற்றாண்டில் திருமூலர் வாழ்ந்த காலத்தில் தான் பெருவாரியான பிராமணர்கள் தமிழர் மண்ணில் கால் வைத்தார்கள். 14 ஆம் நூற்றாண்டு விஜயநகர ஆட்சிக்காலத்திலும் பெருவாரியான பிராமணர்கள் பதினாயிரக்கணக்கான ஏக்கர் நிலவுடமைகளை பெற்றார்கள். 7ஆம் நூற்றாண்டில் சிவனின் பெயராலும் விஷ்ணுவின் பெயராலும் தமிழ்நாட்டில் பக்தி இயக்க வெள்ளம் கரை புரண்டு ஓடியது.


குதிரைப் பயிற்சியாளர்கள், பஜனை பாடிகள் சோதிடர்கள், ஒற்றர்கள் போன்ற பணிகளில் வேந்தர்களால் நியமிக்கப்பட்ட பிராமணர்கள் 26 நூற்றாண்டுகளாக ஆட்சியாளர் எவரென்றாலும் பஜனைபாடி ஒட்டுண்ணிகளாக வாழ்ந்து வந்தவர்கள், அவர்கள் குடிமக்களின் வாழ்வியல் உரிமைகளில் அழிமானம் செய்வதற்கு நேர்விகிதத்தில் வெகுமானம் தரப்பப்பட்டது. வீணாதிவீனர்களான ஆட்சியாளன் ஒவ்வொருவனும் பிராமணர்களுக்கு அதீதமான நிலமான்யம் வழங்கினான். 18 ஆம் நூற்றாண்டின் 2 ஆவது பாதியில் மநுதர்மத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த வில்லியம் ஜோன்ஸ் ஆங்கிலேய அரசிக்கு பரவசத்துடன் கடிதம் எழுதினான்.

மநுதர்மத்தை இந்தியாவில் அமல்படுத்திவிட்டால் ஆண்டு முழுவதும் இங்கிலாந்தில் பொன்னாக பொழிந்து கொண்டேயிருக்கும் என்று எழுதினான். அவனுக்கு கல்கத்தாவில் 30 அடி உயரத்தில் பிராமணர்கள் நினைவுச் சின்னம் எழுப்பினார்கள். அவனைப் பின்பற்றி ஜெர்மானிய மாக்ஸ் முல்லர், சமஸ்கிருதம் இந்தோ-அய்ரோப்பிய மொழி என்றும் ஒரு நாய்த்தோலில் வடிகட்டிய பொய்யைச் சொன்னார். பிரிட்டிஷ் ஆங்கிலேயரும் பிராமணர்களும் கல்கத்தாவில் ஏசியாடிக் சொஸைடி என்ற ஆராய்ச்சி நிறுவனத்தில் கட்டித் தழுவி முத்தமிட்டுக் கொண்டார்கள்.

அய்ரோப்பியரும் பிராமணரும் பிரிந்துபோன சகோதரர்கள் என்று தங்களுக்குத் தாங்களே சொல்லிக் கொண்டனர். இந்தப் பின்புலத்தில் 19 ஆம் நூற்றாண்டில் ஆங்கிலக் கல்வி பயின்று அரசு அதிகாரத்தில் பங்கு பெறுவதற்காக தங்களது நிலவுடமைகளை வாரம் குத்தகைக்கு முறையில் வயதான ஜாதிக்காரர்களிடம் ஒப்படைத்து விட்டு பெருநகரங்களில் குடியேறினார்கள். கிராமங்களில் அந்தப் பண்ணைகளில் உழைத்த ஒடுக்கப்பட்ட குடிமக்கள் படிப்படியாக அதிகாரம் பெறத் தொடங்கினார்கள். எந்த வீணாதிவீணன் ஆட்சியாளனாக இருந்தாலும் அவனுக்கு ஊழியம் செய்வதும் குடிமக்களுக்கு அட்டூழியம் செய்வதும் பிராமணஜாதித் தொழில் தர்மம். அதிகாரத்தை நோக்கி பஜனை பாடுவதும் உழைப்பாளிகளை வசைபாடுவதும் அவர்களது தொழில்தர்மம்.. வெள்ளாளர் ஜாதி நிலப்பிரபுக்கள் அடக்குமுறையிலோ உபரி விளைச்சலை அபகரிப்பதிலோ குறைந்தவர்களல்ல, ஆனால் அவர்களுக்கு தானமளிக்கப்பட்ட நிலம் பிராமணர்களுக்கு அளிக்கப்பட்டதில் சுமார் 10 % தான். மேலும் மற்ற குடிகளை பிராமணர்கள் போல் இழிவு படுத்தும் தர்ம சாஸ்திரங்கள் ஏதும் புனையவில்லை என்பதைச் சொல்ல வேண்டும்.

க்ஷத்திரியன், வெள்ளாளன், ஆகிய இரண்டு பெயர்ச்சொற்களும் நிலவுடமையாளன் என்றே பொருள்படும்.சோழப் பேரரசு காலத்தில் பல போர்க்கலை பயின்ற பல்வேறு இடைநிலைச் சாதிகளிலிருந்து போரில் சாதனை புரிந்ததற்காக நிலமான்யம் பெற்றவர்களே வெள்ளாளர். அவர்களுடைய ஆச்சாரங்களைப் பார்த்து பெரியார், அவர்களை '1½ பார்ப்பான்' என்று கேலி செய்திருக்கிறார்.

சிறு விவசாயிகளாக இருக்கும் வெள்ளாளர் சில கிராமங்களில் ஆதிதிராவிட குடிகளுடன் 100 நாள் வேலைத்திட்டத்தில் கலந்து கொண்டதை பேராசிரியர் விவரித்திருக்கிறார். அவர்களுடன் சேர்ந்து வேலை செய்தால் வேலைச்சுமை தங்கள் மீது விழும் என்று தலித்துகள் ஆட்சேபித்ததையும்



அதனால் வெவ்வேறு நேரம் ஒதுக்கப்பட்டதும் நியாயமான பெரும்பாலான கிராமங்களில் இரண்டு மேல் ஜாதிகளின் நிலவுடமை தேவேந்திரகுல வேளாளர் உட்பட பல இடைநிலைச்சாதி விவசாயிகளிடம் கைமாறியிருப்பது சமுதாயப் புரட்சியே. கிருஸ்துவ மிஷனரிகளின் ஆங்கிலக் கல்வி தேவேந்திரகுல வேளாள குடியினரை பலமடங்கு முன்னேற்றியிருக்கிறது. தென் மாவட்டங்களில் இடைநிலைச் சாதிகளை விட வேவேந்திரகுல வேளாளர் உயர்ந்த பொருளாதார நிலையில் இருப்பதை பேராசிரியர் தெளிவுபடுத்துகிறார்.

நிலப்பிரபுக்கள் எந்த வாரக் குத்தகை விவசாயியையும் சில குறிப்பிட்ட காரணங்களைத் தவிர வெளியேற்ற முடியாதபடி கலைஞரின் சட்டம் அமலுக்கு வந்துவிட்டதால் இரண்டு மேல் ஜாதியினர் சந்தை மதிப்பைவிட குறைந்த விலைக்கு, நிலத்தை விற்றிருப்பதையும் சில பகுதிகளில் நிலப்பரப்பில் 3 இல் ஒரு பகுதியை கிரயமில்லாமல் இழப்பீடாகத் தந்து நிலத்தை வேற்று நபருக்கு விற்றுச் சென்றதையும் ஆய்வு நூல் விவரிக்கிறது. மேல் ஜாதியினர் தங்கள் நிலவுடமை கிராமங்களுக்கு வந்து போவது சொற்ப விலைக்கு விற்பதற்காக மட்டுமே.

மனித இனத்தில் புலம்பெயர் துயரம் (Nostalgia) என்றால் என்னவென்றே தெரியாத நாடோடி இனங்கள் யூதர்கள், பிராமணர்கள். அவர்களிடம் மற்றவர்கள் கற்றுக் கொள்ள வேண்டிய சில பாடங்களில் அதுவும் ஒன்று. சடங்காச்சாரத்தையே நன்னடத்தை என்றும் மூட சாஸ்திரங்களையே தர்மம் என்றும் ஆபாசப் புராணங்களையே வரலாறென்றும் குடிமக்களை நம்ப வைத்துக்கொண்டிருந்த இரண்டு மேல் ஜாதியினர் கிராமங்களிலிருந்து நிரந்தரமாக வெளியேறிய பிறகு நாட்டுப் புறங்களில் அறிவு வெளிச்சம் புலரத் தொடங்கியிருக்கிறது. ஆனால் தீவினையாளர்கள் புலம் பெயர்ந்த பின்னாலும் அவர்கள் விதைத்த நச்சு

பரவிக் கொண்டுதானிருக்கும். தலித்துகளும் மற்ற பிற்பட்ட சாதிகளும் அரசியல் தளத்தில் போராடப் புறப்பட்டிருக்கிறார்கள். அரசியலில் அதிகாரப் பகிர்வு போதுமானதாக இல்லை என்ற போதும் சில படிகள் முன்னேறியிருப்பது உண்மை.

மடாதிபதிகளின் லட்சக்கணக்கான ஏக்கர் சொத்துக்களில் நில உச்சவரம்பு கொண்டு வருவது இயலாமல் மத்திய ஆட்சியதிகாரம் தடுத்து வந்திருக்கிறது. மடத்துச் சொத்துக்கள் நீடிக்கும் வரை மத அடிப்படைவாதத்தின் வெறியாட்டத்தை தடுக்க முடியாது. அதற்கு திராவிட இயக்கங்களும் கம்யூனிஸ்டு விவசாயிகள் சங்கங்களும் இணைந்து மக்கள் இயக்கப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும். இல்லையென்றால் இன்று தமிழ்நாடு எய்தியிருக்கும் மாற்றம் ஒரு நூற்றாண்டு முந்திய நிலைக்குத் தாழ்ந்து விடும். பன்னாட்டு நிறுவனங்களும் புரோகித வர்க்கமும் எவ்வளவு ஆபத்தானவை என்பதை உலகமயமாக்கல் தாராளமயமாக்கல் மாய்மால மோசடிகள் நன்கு உணர்த்தியுள்ளன.

100 நாள் வேலைத்திட்டத்தைப் பற்றி சங்கிகளும் சீமானும் சங்கூதிக்கொண்டிருக்கும் நிலையில் ஆட்சியாளர்களே எதிர்பாராத விதத்தில் விவசாயத்தொழிலாளர்களுக்கு ஊதிய பேரம் செய்யும் ஆற்றலை வழங்கியிருப்பதை பேராசிரியர் விவரித்திருக்கிறார். குறிப்பாக குடும்பத்தில் பெண்களின் நிலையை உயர்த்தியிருக்கிறது.

மேல் ஜாதிகளின் சிவன் - விஷ்ணு கோயில்களைத் தவிர்த்துவிட்டு தலித்துகள் தங்கள் தாய்த் தெய்வங்களுக்கு விழாக் கொண்டாடும் சுயமரியாதை மீட்பு சாதாரணமானதல்ல. ஆனால் ஆதி திராவிட குடிகளின் நிலை இன்னமும் உயராமலிருப்பது கொடுமை அல்லவா. சங்க காலத்தில் தாய்த் தெய்வத்தின் பூசாரிகளாயிருந்தவர்கள். தொல்காப்பியரால் உயர்ந்த பழங்குடி மரபினராக மதிப்பீடு செய்யப்பட்ட இவர்கள் வள்ளுவச்சான்றோரையும் பேரறிஞர் அம்பேத்கரையும் இந்த நாட்டுக்கு வழங்கிய ஆதிக்குடிகள் இன்றும் நலிந்த நிலையில் கைவிடப்பட்ட விளிம்பு நிலையில் இருப்பது தமிழர்களுக்கு மிகப் பெரிய மானக்கேடு.

முதிய ஆதி திராவிடகுடி மக்களுக்கு உரிய நிலவுடமைகளும் அதிகாரப் பகிர்வும் தருவதற்கு திராவிட ஆட்சி முன்வர வேண்டும். இடைநிலைச்சாதிகளைச் சேர்ந்த அதிகார வர்க்கம் பிராமணியத்தால் கொம்பு சீவி விடப்படுவது தடுக்கப்பட வேண்டும். சங்கிகள் வருஷம் தவறாமல் இடைநிலைச் சாதிகளைத் தனித்தனியாக மாநாடு கூட்டி வெறியேற்றுவது நிறுத்தப்படவேண்டும். அப்படி இல்லையென்றால் அது திராவிடப் பெரியார் ஈவெராவுக்கு செய்யும் துரோகம்.

நான்கு மாவட்டங்களில் மூன்றில் இரண்டு பங்கு தொகை விவசாயக் குடிகள் வெவ்வேறு தொழில்களுக்கு மாறிச் சென்று உழைப்பதை இந்த நூல் சுட்டிக் காட்டுகிறது. இந்தியாவிலேயே 52 சதவீத மக்கள் நகரமயமாகி வெவ்வேறு தொழில்களில் முனைந்திருப்பது சமுதாய முன்னேற்றங்களின் பரிமாணங்களில் ஒன்று. கங்கைகொண்டான் போன்ற பல கிராமங்கள் தொழில் பேட்டைகளாகி பல்வேறு நவீன தொழில்களுக்கு மாறியிருப்பது வளர்ச்சியின் மற்றொரு பரிமாணம். தமிழகத்தின் நகர்மயம் பற்றிய நீண்ட கட்டுரை தமிழகம் எதை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது என்பதை காட்டக்கூடியதாகவும் தமிழக அரசு எந்தவிதமான வளங்களின் வளர்ச்சிகளுக்கு முயலவேண்டும் என்பதையும் எடுத்துக் காட்டுகிறது. சமூகவியலை மறக்காத பொருளாதாரப் பேராசியரின் இருப்பு மாநில திட்டக் கமிஷனின் தகுதியை உயர்த்துகிறது. இதனை மாநில நிதியமைச்சரும் உணர்ந்திருப்பதும் அதனை வெளிப்படையாக அங்கீகரிக்கும் சொற்களை முன்னுரையில் எழுதியிருப்பதும் நம்பிக்கையளிப்பதாகும்.


உயர்கல்வியில் தலித்துகள் இடம் பெற்றிருப்பதும் நாட்டில் அதிகபட்ச உயர்கல்வி பெற்றவர்களின் மாநிலங்களின் ஒன்றாக இருப்பதையும் பேராசிரியர் சொல்கிறார். எளிய மக்கள் அடிப்படைத் தேவைகளுக்காக மேல்ஜாதி ஆண்டைகளைக் கெஞ்ச வேண்டியதில்லை. இன்று அவர்கள் நேரடியாகவே ஆட்சியாளரை நோக்கி கேட்கத் தொடங்கிவிட்டார்கள். அதிகாரத்தின் வடிவமைப்பு மாற்றமடைந்திருக்கிறது.

ஒரு திராவிடப் பயணம் எனும் பேராசிரியரின் நூல் திராவிட இயக்கத்தின் பங்களிப்பையும் கம்யூனிஸ்டு விவசாயிகளின் போராட்டங்களையும் சரிசமமாகவே மதிப்பீடு செய்திருக்கிறது. எந்த அரசும் கொண்டு வரும் சட்டங்களும் திட்டங்களும் வெகுமக்களின் நேரடிப் பங்களிப்புடன் மட்டுமே நிறைவேற்றப்பட்ட முடியும் என்பதை தனது ஆய்வில் பேராசிரியர் ஜெயரஞ்சன் நிறுவியிருக்கிறார். அவர் மிகச் சிறந்த சமுதாய அறிவியல் அறிஞர் என்பதை தமிழகம் விரைவில் உணர்ந்து கொள்ளும் என்று நம்புகிறேன்.

பொதுவாக ஆய்வு நூல்கள் பயில்வதற்கு சிரமமானவையாக இருக்கும், பேராசிரியரின் பல்துறை அறிவு (Inter - disciplinary Knowledge) இந்த நூலை மிகவும் சுவாரசியமாகப் படிக்கும் வகையில் குறைந்தபட்ச ஆங்கில அறிவுடையவர்கள் புரிந்து கொள்ளும் எளிய நடையில் தெளிவாக எழுதப்பட்டுள்ளது. கடையனுக்கும் கடைத்தேற்றம் என்பதை, விளிம்புநிலையில் வாழ்வோரையும் உள்ளடக்கிய ஆரோக்கியமான வளர்ச்சியை (Inclusive growth) இலக்காகக் கொண்டு செயல்படக்கூடிய ஒரு தமிழர் பயன் மிகுந்த திட்டங்களை வரைந்தளித்து அவற்றின் நிறைவேற்றத்தில் பங்கேற்பார் என்று நம்பலாம்.

(கட்டுரையாளர், கவிஞர், தமிழ் இலக்கிய, சமூக வரலாற்று ஆய்வாளர்.)

மதிப்புரை



# மாற்றிலக்கண மொழியியலின் தந்தை நோம் சோம்ஸ்கி

ச. சுபாஷ் சந்திரபோஸ்

உள்ளங்கையில் உலகம் என்பது மிகைப்படுத்தப் பட்டதன்று; உண்மையே! தற்போது வந்து உலகையே ஆட்டிப்படைத்து அச்சுறுத்திய - அச்சுறுத்திக் கொண்டிருக்கும் கரோனாத் தொற்றே நல்ல சான்று. போக்குவரத்து வசதி, தகவல் தொழில் நுட்பம் போன்றவற்றால் உலகம் சுருங்கிவிட்டது.

உள்ளங்கையில் உலகம் நல்லவற்றுக்காக இருந்தால் பாராட்டலாம். ஆனால் தாராளமயம், தனியார்மயம், உலகமயம் என்னும் உள்ளங்கையில் உலகக் கொள்கைகள் பெரும் நிறுவனங்களின் சுரண்டலுக்கும் அவற்றுக்குத் துணைபோகும் ஏகாதிபத் தியத்திற்கும் மக்களிடம் பதற்றத்தை உருவாக்கி அறுவடை செய்வதற்குமே பயன்படுகின்றன.


மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சங்ககாலப் புலவர் கணியன் பூங்குன்றனார், எல்லாம் நம் ஊர்; அனைவரும் நம் உறவினர் (யாதும் ஊரே; யாவரும் கேளிர் (புறம்.192) என எவ்வளவு பரந்துபட்டுச் சிந்தித்துள்ளார்!

வயிற்றுக்குள் இருப்பதெல்லாம் கொழுப்பு என நினைக்கும் பிற்போக்குவாதிகள், வலதுசாரிகள் தான் மக்களை நிறத்தாலும் மதத்தாலும் இனத்தாலும் மொழியாலும் பிரித்துப் பார்ப்பார்கள். மக்கள் மட்டுமல்லாமல் பிற உயிரினங்களாயினும் பிறப்பால் ஒன்றுபட்டவையே என்பதை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உலகப் பொது மறையைத் தந்தருளிய திருவள்ளுவர் பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் (திருக்.972) என்று கூறிவிட்டார்.

யாதும் ஊரே; யாவரும் கேளிர்; பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்னும் கோட்பாடுகள் நடைமுறைக்குப் பயன்படுமா? என்று எண்ணலாம். இவ்வாறு எண்ணித்தானே உலகம் முழுவதையும் தங்கள் காலனி நாடுகளாக்கி மக்களையும் இயற்கை வளங்களையும் அந்நியர்கள் சுரண்டினார்கள்; சுரண்டிக் கொண்டிருக்கின்றார்கள். இந்தக் கோட்பாடுகள் எதிர்மறையான செயல்பாடுகளுக்கே பயன்படும் என்றால் ஆக்க முறைக்கா பயன்படாமல் போகும்?

மேற்குறிப்பிட்டவை போலத் தீதும் நன்றும் பிறர் தர வாரா (புறம்.192) உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே (புறம்.18) என்பவை எல்லாம் தமிழர்தம் பொதுமைச் சிந்தனைகள். இப்படிப்பட்ட சிந்தனைகள் உலகம் முழுவதிலும் பேசப்படும் மொழிகளிலும் காணப்படலாம். ஆனால் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்தம் சிந்தனை தற்போதும் உலக அளவில் பேசப்படுகிறது. தமிழுக்கு எதிரானவர் கூடப் பேசுகின்றார்கள்!

வாழும் வாழ்க்கை, பேசும் மொழி போன்றவற்றைப் பற்றிப் பொதுமையாகச் சிந்திப்பதற்கு நிறைய வாய்ப்புகள் உள்ளன. காரணம் இவை உலகம், மக்களோடு தொடர்புடையன. எனவேதான், மாமேதை கார்ல் மார்க்ஸ் பொருளாதாரம், உலக மக்களின் பொதுவுடைமை எனச் சிந்தித்து நிலை நாட்டினார். இவ்வாறே மொழி என்பதும் உலகப் பொதுவுடைமையே. இதனால்தான் உலக மொழிகளுக்கு எல்லாம் ஒரே இலக்கணக் கோட்பாட்டை மொழியியல் அறிஞர்களால் உருவாக்க முடிகின்றது.




பல ஆயிரம் ஆண்டு கால மானுட வளர்ச்சியில் அறிவியல் வளர்ந்து ஏற்பட்டுள்ள மாற்றம் பல வகையில் வெளிப்படுகின்றது. தொழிற் புரட்சியால் இயற்கை வளங்கள் கொள்ளையடிக்கப்படுகின்றன; சுற்றுச் சூழல் ஓசோன் படலத்தை ஓட்டைபோடும் அளவிற்குக் கெட்டுள்ளது.

ஓசோன் படல ஓட்டையை அடைக்கத் தொழிற்சாலை, போக்குவரத்துச் சாதன நச்சு வாயு வெளியேற்றத்தைக் குறைக்க வேண்டும். ஓட்டையைக் கண்டுபிடிக்கின்றார்கள். அடைக்க ஆகவேண்டியதைச் செய்யாமல் இருக்கப் போட்டி போடுகின்றார்கள். உலக நாடுகள் எப்போது யானைக்குக் கோமணம் கட்டப் போகின்றனவோ தெரியவில்லை.

டார்வினின் உயிரினத் தோற்றம் வளர்ச்சி பற்றிய சிந்தனை, உலகைப் புரிந்து கொள்ள ஆகச் சிறந்த ஒரு கோட்பாடாகும். காலங்காலமாகப் பகுத்தறிவுக்கு ஒவ்வாமல் கூறப்பட்டு வந்த மதக் கோட்பாடுகளுக்கு மரண அடி கொடுத்தது. ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் கண்டுபிடித்த அணு ஆற்றல் கோட்பாடு பிள்ளையார் பிடிக்கப் போய்க் குரங்கான கதைதான். தம் கண்டுபிடிப்புக்காக வருந்தியவர் அந்த மாமேதை. இரண்டாம் உலகப் போரில் அணுகுண்டு வீச்சால் ஜப்பானின் நாகசாகி, ஹிரோஷீமா என்னும் இரண்டு நகரங்கள் அழிந்து நரகமாகிவிட்டன. அணுக் கதிர்வீச்சால் தற்போதும் அங்குள்ள மக்கள் பாதிக்கப்படுகின்றார்களாம்.

அணு ஆயுத உற்பத்தி தற்போதும் உலகை அச்சுறுத்திக் கொண்டுதான் இருக்கின்றது. பெரியநாடு, சிறிய நாடு என்னும் வேறுபாடு இல்லாமல் அணுகுண்டுகளை உற்பத்தி செய்து அடுக்கி வைத்திருக்கின்றன. எப்போது வேண்டுமானாலும் ஏதாவது ஒரு குரங்கு அணுகுண்டுக் கொள்ளியை எடுத்து உலகப் பூப்பந்தைச் சொறிந்து பார்க்கும்.

கண்டுபிடிப்பு, கோட்பாடுகள் ஆக்கத்திற்குப் பயன்படுபவையாக இருக்க வேண்டும். மானுடத்தின் வளர்ச்சிக்காக எத்தனையோ பேர் சிந்தித்திருந்தாலும் உலகம் முழுவதும் போற்றக் கூடியவராக மாமேதை கார்ல் மார்க்ஸ் திகழ்கின்றார்.

பொதுவுடைமைக் கோட்பாடு வளர்ந்ததைப் போன்று மொழியியல் கோட்பாட்டின் வளர்ச்சியும் மானுடத்தின் பரவலை - வளர்ச்சியைப் புரிந்து கொள்ளப் பெரிதும் உதவுகின்றது. குறிப்பாக 18,19ஆம் நூற்றாண்டுகளில் மொழிகள் பற்றிய ஆய்வு ஒரு புதிய பாதையில் நகர்கின்றது. அதாவது தனி மொழிக்கு இலக்கணம் எழுதும் நிலை மாறி உலக மொழிகளுக்கு எல்லாம் சேர்த்துப் பொதுவான இலக்கணம் எழுதும் முறை வளர்ச்சி அடைகின்றது. மறைந்து கிடந்த உண்மைகள் எல்லாம் வெளிப்படத் தொடங்கின. ஓர் இனம் எங்கிருந்து இடம் பெயர்ந்து வந்தது என்பதைத் துல்லியமாக அறிய ஒப்பியன் மொழியியல் (comparative Linguistics) பெரிதும் துணைபுரிகின்றது.

பிற அறிவியல் துறைகளைப் போன்று அறிவியல் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட மொழியியலும் இரண்டு, மூன்று நூற்றாண்டு வரலாற்றை உடையது. வரலாற்று மொழியியல், ஒப்பியன் மொழியியல் என்னும் தொடக்கக் கால மொழியியல் மேலும் கோட்பாட்டு அடிப்படையில் விளக்க மொழியியல் *(Descriptive Linguistics)* அமைப்பு மொழியியல் *(Structural Linguistis)* சமுதாய மொழியியல் *(Socio - Linguistics)* எனப் பல்வேறு கிளைகளாகவும் பிரிந்து வளர்ந்துள்ளது.

இவ்வாறு வளர்ந்துள்ளமை போன்று இலண்டன் மொழியியல் கோட்பாடு, அமெரிக்க மொழியியல் கோட்பாடு என நாடு சார்ந்தும் மொழியியல் கோட்பாடுகள் அறியப்பட்டன. எந்த வகை மொழியியல் கோட்பாடாக இருந்தாலும் அது உலக மொழிகள் எல்லாவற்றுக்கும் பொதுவாகவே அமைந்தது.

ஒப்பியன் மொழியியல் ஆய்வில் வில்லியம் ஜோன்ஸ் *(1788)* ஆய்வின் வழி வெளிப்பட்டவையே இந்தோ - ஐரோப்பிய மொழிக் குடும்பம், இந்தோ - ஆரிய மொழிக் குடும்பம். இவைபோன்றே திராவிட மொழியியலின் தந்தை இராபர்ட் கால்டுவெல் *(1856)* ஆய்வும் இந்திய, உலக அளவில் புகழ்பெற்ற ஆய்வாகும்.

கார்ல் மார்க்சின் பொதுவுடைமைச் சித்தாந்தம் போன்று மொழியியல் ஆய்வில் ஒரு புரட்சியைச்

செய்தது. நோம் சோம்ஸ்கி (Noam Chomsky) என்னும் மொழியியல் அறிஞர் உருவாக்கிய மாற்றிலக்கணம் (Tranformational Grammar) உலகம் சில ஆயிரம் ஆண்டுகளாக வகுத்திருந்த இலக்கணப் பார்வையையே அப்படியே புரட்டிப் போட்டுவிட்டது.

F.W. எல்லிஸ் திராவிட மொழிக் குடும்பக் கோட்பாட்டைக் கால்டுவெல் வளர்த்தெடுத்து ஒரு புரிதலை ஏற்படுத்தியதைப் போன்று தம் பேராசிரியர் ஹாரிஸின் (Zellig S.Harris) கோட்பாட்டை மேலும் ஆழமாக ஆராய்ந்து மாற்றிலக்கணக் கோட்பாடு என்று நோம் சோம்ஸ்கி மொழியியல் புரட்சி செய்துள்ளார்.

சோம்ஸ்கியின் Syntactic Structures (1957), Aspects of the Theory of Syntax (1965) என்னும் ஆய்வு நூல்களும் பல கட்டுரைகளும் உலகம் முழுவதிலும் மொழியியல் ஆய்வில் ஒரு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளன. மாற்றிலக்கணக் கோட்பாட்டு அடிப்படையில் உலக மொழிகளில் வெளி வந்துள்ள ஆய்வு நூல்களும் கட்டுரைகளும் கணக்கில் அடங்கா!

தமிழகத்தில் 1960களில் மொழியியல் ஆய்வு வளர்ந்தபோது தமிழ் மொழியியலின் தந்தை தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் மற்றும் பேராசிரியர்கள் ச.அகத்தியலிங்கம், முத்துச்சண்முகன், செ.வை.சண்முகம் போன்றோர் மாற்றிலக்கணக் கோட்பாட்டைத் தமிழுக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள். அடுத்த தலைமுறையைச் சார்ந்த பொற்கோ, ஆர்.கோதண்டராமன், கி.அரங்கன், சு.இராசாராம் போன்றோர் முறையாகப் பயின்று மாற்றிலக்கணத்தைத் தமிழில் வளர்த்தெடுத்தார்கள்.

இக்கட்டுரை பேராசிரியர் கி.அரங்கன் எழுதி வெளிவந்துள்ள நோம் சோம்ஸ்கி நவீன மொழியியலுக்கு ஓர் அறிமுகம் (2021) என்னும் நூலை மதிப்பீடு செய்வதாக அமைகின்றது. அடையாளம் பதிப்பகம் இந்நூலை வெளியிட்டுள்ளது.


**பேரா.கி.அரங்கன்**

ஆயிரம் பிறை காணும் பேராசிரியர் கி.அரங்கன் (1942) தற்போது வரை தமிழ் மொழியியல் தமிழியல் களம் தொடர்பாக ஆய்வு மேற்கொண்டு வருகின்றார். 1980களில் நான் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தற்காலிகப் பணியில் இருந்த போது மொழியியல் பேராசிரியராகப் பணியில் இருந்தார். பேராசிரியர் இராம சுந்தரம் அவர்களின் நெருங்கிய நண்பர். 'என்ன போஸ் எப்படி இருக்கீங்க?' இந்த நான்கு சொற்களும் மெல்லப் புன்னகையுடன் மேல் முன்பல் தெரிய வெளிப்படும். மற்றபடி அதிகத் தொடர்பு இல்லை. ஆனால் பேராசிரியரின் நூல்கள், கட்டுரைகள் தொடர்பில் இருக்கும் தொடரியல்: மாற்றிலக்கண அணுகுமுறை (1985) குறிப்பிடத்தக்க நூலாகும். மொழி முகங்கள் (2003) பேராசிரியரின் மணிவிழா மலர், அவர்களைப் பற்றிக் காலங்கள் உள்ளவரை பேசிக் கொண்டிருக்கும். தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தை மொழியியல் விதிகளைப் பயன்படுத்தி ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். *Toward Formulating Formal Phonological Rules of Tol Ka:ppiyam Eluttatika:ram (2012)*. இந்நூல் தமிழ்மொழியில் தொல்காப்பியரின் எழுத்திலக்கணக் கோட்பாட்டைப் படித்து அறிய முடியாதோருக்குப் பெரிதும் பயன்படும். மொழியியல் விளக்கும் மொழிப் பொதுமையை மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தொல்காப்பியர் விளக்கியுள்ளமை புரியும்.

இவை எல்லாவற்றையும் விட இருபதாம் நூற்றாண்டின் ஆகச் சிறந்த சிந்தனையாளர் மொழியியல் பேராசிரியர் நோம் சோம்ஸ்கியிடம் கி.அரங்கன் பயின்றவர் என்பதே குறிப்பிடத்தக்க செய்தியாகும். மேலும் மோரிஸ் ஹாலே, பால் கிப்பார்ஸ்கி, ஜான் ராபர்ட் ராஸ், பேர்ல் மட்டர் (ப.XII) போன்ற பல மொழியியல் அறிஞர்களிடம் கற்கும் வாய்ப்பையும் பெற்றிருந்தார்.

கவிஞர் வாலியிடம் இவ்வாறு புனைபெயர் வைத்துக் கொண்டமைக்கான காரணத்தைக் கேட்டபோது 'எதிரில் இருப்பவரின் அறிவும் தனக்குக் கிடைக்க வேண்டும் என்பதற்காக' என்றாராம். 'அவ்வாறு பெரிய அறிவாளியாகத் தெரியவில்லையே?' வினாத் தொடுத்தவருக்கு உடனே. 'உங்களைப் போன்றவர்கள்தானே எதிரில் வருகின்றார்கள்' என்றாராம் கவிஞர் வாலி. எப்போதோ படித்தது தற்போது நினைவுக்கு வருகின்றது.

நாம் எழுதக் கூடிய நுவல்பொருள் முக்கியமானதாக இருந்தாலும் அதற்கான



கோட்பாட்டு அணுகுமுறை அதனைவிட முக்கியமானதாகும். எழுபதுகளில் முதுகலை பயிலும்போது பேராசிரியர்கள் க.கைலாசபதி, கா.சிவத்தம்பி போன்றோரின் இலக்கிய ஆய்வுகள் கவனத்தை ஈர்க்கும் இவர்களின் நெறியாளர்கள் மேலைநாட்டு ஆய்வாளர்கள். ஆய்வு அணுகு முறைதான் காரணம். இவ்வகையான இலக்கிய ஆய்வுகள் தமிழகத்திலும் பிறகு வரத் தொடங்கி விட்டன. பேராசிரியர் கி.அரங்கன் அவர்களின் பரந்துபட்ட ஆழமான மொழியியல் சிந்தனைக்குக் காரணம் நோம் சோம்ஸ்கியிடம் பயின்றமையே.

திராவிட மொழியியல் ஆய்விலும் இதனை அறியலாம். டி.பர்ரோ, எம்.பி.எமனோ போன்ற மேலை நாட்டு அறிஞர்களிடம் பயிற்சி பெற்ற பேராசிரியர்கள் பி.எச்.கிருட்டினமூர்த்தி, பி.எஸ்.சுப்பிரமணியம் போன்றோரின் திராவிட மொழியியல் ஆய்வுகள் தமிழ் மொழியியல் ஆய்வுக்கும் பெரிதும் பயன்படுகின்றன. ஆய்வுத் தரவுகளைவிட ஆய்வு நெறிமுறை ஆய்வை மேம்படுத்த உதவும்.

பேராசிரியர் கி.அரங்கன் அவர்களைப் போன்று பேராசிரியர் சு.இராசாராம் (1942) எழுதியுள்ள நோம் சோம்ஸ்கி (2019) என்னும் நூலும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். காலச்சுவடு பதிப்பகம்வழி வெளிவந்துள்ளது. இவர் டேவிட் வில்கின்ஸ் என்னும் மாற்றிலக்கண மொழியியல் பேராசிரியரிடம் பயிற்சி பெற்றவர்.

பேராசிரியர் நோம் சோம்ஸ்கியின் மாற்றிலக்கணக் கோட்பாட்டைப் பற்றி நிறைய நூல்களும் கட்டுரைகளும் வந்து கொண்டிருக்கின்றன. அவரைப் பற்றி பேராசிரியர்கள் கி.அரங்கன், சு.இராசாராம், செ.சண்முகம் (சாம்ஸ்கியின் புது மாற்றிலக்கணம், 1998) போன்றோர் எழுதியுள்ள நூல்கள் குறிப்பிடத்தக்கவை ஆகும்.

நோம் சோம்ஸ்கி நவீன மொழியலுக்கு ஓர் அறிமுகம் என்னும் பேராசிரியர் கி. அரங்கன் அவர்களின் நூல் பொது மொழியியல், மாற்றிலக்கணக் கோட்பாட்டின் வரலாற்றைத் தெளிவாகவும் எளிதாக விளங்கிக் கொள்ளும் வகையிலும் எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

**மொழியியல் வளர்ச்சி**

காலங்காலமாக அவரவர் மொழிக்கு அவரவர் இலக்கணம் எழுதிய முறை மாறி, உலக மொழிகள் அனைத்திற்கு ஒரே இலக்கணத்தை வரையறை செய்வது வரலாற்றில் நிகழ்ந்த மாபெரும் புரட்சிகளில் ஒன்றாகும். மொழியியல் வளர்ச்சிக்கு வடமொழி இலக்கணங்களின் பங்கை மொழியியல் அறிஞர்கள் நன்றியுடன் குறிப்பிடுகின்றனர் (புளூம் பீல்டு, ஜான் லைன்ஸ், நோம் சோம்ஸ்கி).

காலங்காலமாகவே குறிப்பாக வடமொழிகளைப் பேசுவோர் சமக்கிருதமே உலக மொழிகளுக்கு எல்லாம் தாய்மொழி என்றார்கள். மக்களின் பேச்சு மொழியாக இல்லாமையாலேயே கிரேக்கம், இலத்தின், ஹீப்ரு போன்ற மொழிகள் வழக்கிழந்தன. சமக்கிருதமும் இந்தச் செவ்வியல் மொழிகளும் மக்களைப் பாட மறந்து இறைவனையும் மன்னர்களையும் புராண இதிகாசங்களையும் பாடின. வழக்கொழிய இவையே காரணம். செத்தவனை எழுப்ப வைக்கோலைப் போட்டுக் கொளுத்துவது போல வடமொழியை வளர்க்க ஒன்றிய அரசு பல நூறு கோடிகளைச் செலவு செய்கின்றது. ஆன்மீகத்தை வளர்க்கச் சிலைகளை வைப்பது, கோயிலைப் புதுப்பிப்பது போன்றவையும் இவ்வகையைச் சார்ந்த செலவினங்களே. நாட்டின் வளர்ச்சிக்குச் செலவு செய்யலாம். நிலம் கொடுத்து, கோயில் கட்டிக் கொடுத்து மக்களைப் பண்ணை அடிமையாக முடியாட்சிக் காலத்தில் மாற்றி இருந்தார்கள். அந்தக் காலத்தோடு முடியாமல் ஆன்மீக நடைமுறைகள் தொடர்கின்றன. மக்கள்தான் பாவம். பட்டுச் சேலையைக் கொடுத்துவிட்டுத் தடுக்கைத் தூக்கிக் கொண்டு அலைகின்றார்கள். மறுபிறவியிலாவது சொர்க்கம், கைலாசம் கிடைக்கும் என்னும் நம்பிக்கையுடன்!. மொழியை வைத்து வெறுப்பு அரசியல் செய்வது காலங்காலமாகவே நிகழ்கின்றது.

அரசியலாக மொழியை வைத்துப் பேசுவோருக்கு வேண்டுமானால் மொழி சோறு போடலாம். உழைக்கும் மக்கள் உழைத்தால்தான் சோறு கிடைக்கும். இந்தி படித்தால் இந்தியா முழுவதும் வேலைக்குப் போகலாம் என்கிறார்கள். தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு போன்ற திராவிட மொழிகளைப் பேசாமலேயே வடமாநில மக்கள் தென்னாட்டில் கடுமையாக உழைத்துப் பிழைக்கின்றார்கள்.

இந்தி படித்தால் வேலை கிடைக்கும் என்கின்றார்கள். ஒரு வகையில் உண்மைதான். இந்தி மொழியைத் தாய் மொழியாகக் கொண்டோருக்குத் தென்னாட்டுப் பகுதியில் நிறைய வேலை கிடைக்கின்றது. பானிபூரி விற்பது, உணவகம் - வணிக வளாகங்களில் வேலை செய்வது, கட்டடங்கள் கட்டுவது, சுமை தூக்குவது, சாலை அமைப்பது - சுத்தம் செய்வது, காவலாளியாக இருப்பது என அனைத்து வேலைகளையும் இந்தி படித்தவர்கள்தான் செய்கின்றார்கள் என்று ஊடகவியலாளர்கள் கிண்டல் செய்கின்றார்கள். தொழில் செய்வது குற்றமன்று. அந்த அளவு மக்களுக்குப் பகுத்தறிவை வளர விடாமல் மதக்குப்பையை உடம்பு முழுவதும் பூசிவிட்டு வயிற்றுக்காக அலைய விடுகின்றார்கள். இந்தியை விடச் சைகை மொழியே கைக்கொடுக்கின்றது.

தமிழ் நாட்டில் வாழும் சிலரும் இந்தி கட்டாயம் படிக்க வேண்டும் என்கிறார்கள். அவர்களுக்கு இந்தி தெரியுமா என்றால் முழிப்பார்கள். மூலக் கோளாறா அல்லது மூளைக் கோளாறா தெரியவில்லை. அவர்களுக்குத் தமிழ்தான் கைக் கொடுகின்றது. ஆங்கிலம் பணி கொடுகின்றது.

இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டவர்களுக்கே அது சோறு போடவில்லை. பிறருக்குச் சோறு போட்டு விடுமா? பிறந்த நாடே சோறு போடவில்லை. தெற்கு வடக்கு என்னும் வேறுபாடு இல்லாமல் உலகம் முழுவதும் வாழ்வாதாரம் தேடி இந்தியர் கலைந்து கிடக்கிறார்கள். இந்தியர்களுக்கு ஆங்கிலம் தான் சோறு போடுகின்றது. குறிப்பாகத் தகவல் தொழில் நுட்பத்துறைகளில் உலகம் முழுவதும் பணியாற்றுகின்றார்கள். இந்தி, சமக்கிருதம் அல்லது வேறு எந்த இந்திய மொழிகளைப் படித்தாலும் வாய்ப்புக் கிடைக்குமா? எனவே, முதலில் வடக்கே உள்ளவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்; உணவு கொடுப்பது மொழியன்று. உழைப்பு. ஆளும் வர்க்கம் அதற்கு வழிவகை செய்ய வேண்டும்.

இந்தியாவில் வடமொழி இலக்கண மரபு, திராவிடமொழி இலக்கண மரபு என இரண்டு வகைகள் உள்ளன. இரண்டும் தனித்தனிக் குடும்ப மொழிகளாக இருப்பதால் இவ்வாறே இருக்க முடியும். பேராசிரியர் கி.அரங்கன் இவ்விரு மரபிலக்கண மரபைப் பின்வருமாறு தெளிவாகக் குறிப்பிடுகின்றார். வேதங்களின் தூய்மை காக்கப்பட்ட வேண்டும் என்பதில் பாணினியின் இலக்கணம் கவனம் செலுத்தியது; ஆனால் தொல்காப்பியம் தமிழ் மொழியில் உள்ள இலக்கியங்களின் தூய்மை காக்கப்பட வேண்டும் என்பதில் கவனம் செலுத்தியது. ஒன்றிற்கு மதத்தூய்மையும் இன்னொன்றிற்கு இலக்கியத் தூய்மையும் குறிக்கோளாக அமைந்திருந்தன. *(ப.14)*

*பாணினியின் அஷ்டாத்தியாயி போன்ற வடமொழி* இலக்கண நூல்கள் வேதத்தின் ஒலிப்பு மாறக் கூடாது என்பதில் கவனமாக இருந்தன. காலவோட்டத்தில் மக்களும் கலப்பில்லாமல் ஒரே இனமாக இருக்க வேண்டும் என்று அரசியல் செய்கின்றார்கள். ஆடு, மாடு போன்ற விலங்கினங்களில் கலப்பினத்தை இறக்குமதி செய்கின்றார்கள். காலங்காலமாகப் பலமொழிகளைப் பேசும் மக்கள் இருக்கக் கூடிய நாட்டை இந்தி மொழியைப் பேசுவோராக இந்தியா மாறவேண்டும் என்பது எந்தச் சித்தாந்தமோ தெரியவில்லை? வேற்றுமையில் ஒற்றுமையே இந்தியாவின் பெருமிதமாக இருக்கும்.

திராவிட மாடல் இந்தியாவில் அந்நியரால் புகுத்தப்பட்டது என்பார்கள். இந்து, இந்தியா, இந்துத்வா என்பவை கட்டமைக்கப்படவும் அந்நியரே மூலகாரணம் என்பதை மறந்து விடவேண்டாம்.

அந்நியர்களின் ஆதிக்கத்தால் காலனி நாடுகள் சுரண்டப்பட்டன என்பது உண்மையாக இருந்தாலும் முடியாட்சிக் காலத்தில் மக்களைச் சுரண்டி மதம் வளர்த்ததும் உண்மைதான். இப்போது மதக் கலவரங்களைத் தூண்டி வாக்கு அறுவடை செய்வதும் உண்மைதான். பல குழப்பங்களுக்கு அந்நியர்தான் தெளிவைக் கொடுத்தார்கள். தொடக்கத்தில் வடமொழியை அறிந்த அளவிற்கு அந்நியர்கள் தமிழ் போன்ற திராவிட மொழிகளை அறிந்திருக்க வாய்ப்பில்லாமல் போய்விட்டது. அவர்களோடு இணக்கமாக இருந்தவர்கள் பார்ப்பனர்களே!

தொல்காப்பிய இலக்கண மரபு திராவிட மொழிகள் அனைத்திற்குமானதாகும். தொல்காப்பியத்தில் இடைச் செருகல் நிறைய இருப்பதாக அறிஞர்கள் குறிப்பிடுகின்றார்கள். தெய்வம் பற்றிய கருத்தை வைத்துக்கொண்டு பார்த்தால் தொல்காப்பியம் மட்டுமல்லாமல் சங்க இலக்கியங்களிலும் அது திணிக்கப்பட்டுள்ளமையை அறிய முடிகின்றது. பிற்கால ஆரிய மயத்தின் தொடக்கத்தைப் பழந்தமிழில் அறியலாம். பழந்தமிழரின் வழிபாட்டு முறையில் குறிப்பிடத்தக்கது நடுகல் வழிபாடாகும். சங்க இலக்கியங்களில் குறிக்கப்படும் நடுகல் வழிபாட்டு முறைக்கு அகழாய்வில் சான்றுகள் கிடைக்கின்றன. ஆனால் பெருந்தெய்வம் தொடர்பான உருவ வழிபாட்டிற்கு அகழாய்வில் இன்றுவரை ஒரு துரும்புகூடச் சான்றாகக் கிடைக்கவில்லை.

மொழியியல் வளர்ச்சிக்கு வடமொழியின் பங்கு குறிப்பிடத்தக்கது. அதே வேளையில் தொல்காப்பியத்தில் விளக்கப்பட்டுள்ள எழுத்து, சொல் அமைப்பிலேயே தொடக்க கால மொழியியலும் எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். பெரும்பாலான உலகச் செவ்வியல் இலக்கண நூல்கள் சொல்லுக்குப் பொருள் கூறுவதையே இலக்கணமாகக் கொண்டிருந்தன. இக்கால விளக்க மொழியியல் *(Descriprive Linguistics)* அமைப்பு மொழியியல் *(Struectural Linguistis)* மொழியியல் விளக்கும் முறையிலேயே மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தொல்காப்பியம் விளக்கி உள்ளது.

நோம் சோம்ஸ்கியின் மாற்றிலக்கணக் கோட்பாட்டிற்கு முன்னர் நிகழ்ந்த மொழியியல் ஆய்வுகளைப் பேராசிரியர் கி.அரங்கன் மூன்று பெரும் பிரிவில் இனம் காண்கின்றார்.

*அ.மொழியியலில் ஏற்பட்ட மாற்றங்களை விவரிப்பது; ஆ.மொழிகளுக்கு இடையிலான உறவை விவரிப்பது; இ.மொழிகளை அவற்றின் அமைப்பு முறைகளை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்துவது (ப.2).*

நோம் சோம்ஸ்கியின் மொழியியல் பார்வை, சூழலுக்கு ஏற்ப மொழியைப் பயன்படுத்தும் மானுட

உளவியலையும் கணக்கற்ற வாக்கியங்களை உருவாக்க இடங்கொடுக்கும் மொழியையும் அடிப்படையாகக் கொண்டது. தொடக்ககால மொழியியல் விளக்கிய புதை நிலை அமைப்பு (Deep Structure), புறநிலை அமைப்பு (Surface Structure) என்னும் மொழிப் பயன்பாட்டு நிலைகள் நோம் சோம்ஸ்கியால் மொழித்திறன் (Competence) செயல்திறன் (Performance) எனப் பார்க்கப்பட்டன.

நோம் சோம்ஸ்கியின் ஆக்க முறை இலக்கணத்தைப் பேராசிரியர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் ஒரு சான்றுடன் விளக்குகின்றார். ஒன்று முதல் ஒன்பது வரை பெருக்கல் வாய்பாட்டை உணர்ந்தபின் கோடிகோடி போன்ற பெரிய எண்களையும் பெருக்கி விடுகிறார்கள் அல்லவா? இந்த வகையில் மொழி இலக்கணமும் எல்லையற்ற வாக்கியங்களைப் பிறப்பிப்பதற்கு உதவுகிறது. இந்தக் கருத்தில் தான் இலக்கணத்தையே வாக்கியங்களை பிறப்பிக்கும் இலக்கணம் (Generative Grammar) என்று கூறுகின்றனர் (மாற்றிலக்கணம், ப.44)

சில விதிகளை வைத்துக்கொண்டு வரம்பற்ற வாக்கியங்களின் அமைப்பை விளக்குகின்ற ஒன்றே ஆக்க முறை இலக்கணம் எனப்படும். அதாவது சில விதிகளை வைத்துக் கொண்டு எண்ணிறந்த வாக்கியங்களை ஓர் இலக்கணம் உருவாக்க முடியும் என்றால் அது ஆக்கமுறை இலக்கணம் ஆகும். (இக்கால மொழியியல். ப.163) எனப் பேராசிரியர் கு.பரமசிவம் கூறுவதும் நினைக்கத்தக்கது.

இவ்வகையான ஆளுமை மொழிக்கும் அம்மொழியைப் பேசுவோருக்கும் இடையே இருப்பதால் தான் மக்களால் எந்த மொழியையும் கற்றுக்கொள்ள முடிகின்றது. ஒரு மொழியில் எழுதப்பட்ட அறிவியல், வரலாறு, மொழியியல் போன்றவற்றைப் புரிந்து கொண்டு ஒருவரால் தம் மொழியில் எழுத முடிகின்றது. ஒரு நிலப்பகுதியில் வாழ்பவரால் இன்னொரு நிலப்பகுதியைக் களமாகக் கொண்டு இலக்கியம் படைக்க முடிகின்றது.

மொழியின் உண்மைத் தன்மையை அறிந்து கொள்ள மாற்றிலக்கண முறை ஒரு புரட்சிகரமான பார்வையாக இருக்கிறது. அவருக்கு முன்னர் இருந்த பார்வை மொழியையும் பேசும் மக்கள் இனக் குழுவையும் புரிந்து கொள்ள உதவியது.

இரண்டாவதாகப் பேராசிரியர் கி. அரங்கன் மொழிகளுக்கிடையே உள்ள உறவை விளக்குகின்றார். வரலாற்று மொழியியல் (Historical Linguistics) ஒரு மொழியில் காலந்தோறும் ஏற்படும் மாற்றத்தை விளக்கும். ஒரு மொழி தேவை கருதிச் சொற்களை இன்னொரு மொழியில் கடன் பெறுவது இயல்பு. சங்க இலக்கியங்களில் வடசொற்கள் காணப்படுவதைப் போன்று ஆரியரின் வேதத்திலும் திராவிடச் சொற்கள் காணப்படுகின்றன.

பேச்சு வழக்கற்ற வடமொழிச் சொற்கள் தமிழ் மற்றுமுள்ள திராவிட மொழிகளில் தாமாகப் பரவுவதற்கு வாய்ப்பில்லை. பார்ப்பனர்களே அவற்றைத் திராவிட மொழிகளில் புகுத்தினார்கள்; புகுத்தி விட்டு இலக்கணக் கொத்து என்னும் சொல்லிக்கண நூலை 17ஆம் நூற்றாண்டில் எழுதிய சாமிநாத தேசிகர், இப்படி ஒரு வினா எழுப்புகின்றார். அன்றியும் தமிழ்நூற்கு அளவிலை; அவற்றுள் ஒன்றே யாயினும் தனித்தமிழ் உண்டோ? (இல.கொத்.7:25-26).

வழக்கிழந்த மொழிகளைத் தவிர, வாழும் தமிழ் போன்ற மொழிகளில் கடன் பெற்ற சொல் புழக்கத்தில் இருக்கும். மொழியில் காணப்படும் ஆக்கம், மாற்றம், இழப்பு போன்றவற்றை எல்லாம் வரலாற்று மொழியியல் விளக்கும். தமிழ் மொழி வரலாற்றில் இவற்றை எல்லாம் அறியலாம்.

ஒப்பியன் மொழியியல் (Comparative Linguistics) என்பதும் தொடக்க கால மொழியியல் ஆய்வில் குறிப்பிடத் தக்கதாகும். இதுவும் உலகில் ஒரு புரட்சியைச் செய்துள்ளது. சிலர் ஒப்பியன் மொழியியல் ஆய்வு குழப்பத்தை விளைவித்ததாகக் குற்றம் சாட்டுகின்றார்கள்.

காலங்காலமாகப் பரப்பிய பொய்யும் புனைந்துரையும் உண்மையின் ஒளிபடும் போது மறையும். எந்த விதமான அறிவியல் பார்வையும் இல்லாத வெளிநாட்டு, உள்நாட்டுக் கும்பல் சமக்கிருதமே திராவிட மொழிகளுக்கும் இந்தோ - ஐரோப்பிய மொழிகளுக்கும் தாய்மொழி என்றது. இந்தியாவில் திராவிட மொழிகள் தனிக் குடும்பம் (F.W.Ellis, 1816, Robert Caldwell, 1856) சமக்கிருதம் மற்றுமுள்ள இந்தோ-ஆரிய மொழிகள் இந்தோ - ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்தவை (1788) என்று கூறியபோது ஆதாரத்துடன் மறுக்காமல் ஆவேசத்துடன் மறுக்கிறார்கள். திராவிட மொழிக் குடும்பம், ஆரியமொழிக் குடும்பம் பிரிவினையை ஏற்படுத்தும் என்கிறார்கள். அந்தந்தச் சாதிக்கான உரிமையைக் கொடு என்பது பிரிவினைவாதமா? ஒரு குளத்தில் ஒரு வரால் மீனாக எல்லாவற்றையும் எடுத்துப் போட்டு முழுங்கியவர்களுக்கு இட ஒதுக்கீடு, சமூக நீதி என்பவை எல்லாம் இனிக்கவா செய்யும்?

இவற்றுக்காக மட்டும் அந்நிய நாட்டினரை வெறுப்பவர்கள் வெறுக்கவில்லை; கல்வியைக் கொடுத்தார்கள்; மருத்துவத்தைக் கொடுத்தார்கள்; வேலை வாய்ப்பைக் கொடுத்தார்கள். மூடநம்பிக்கையை அழித்து, விழிப்புணர்வை

ஏற்படுத்தினார்கள். அவர்கள் மட்டும் பெற்றுக் கொண்டிருந்தார்கள். பிரமனின் பாதத்தில் பிறந்தவர்களும் வாய்ப்பு வசதிகளைப் பெறும்போது அவர்களுக்கு அந்நியர் மீதும் முற்போக்குச் சிந்தனையாளர்கள் மீதும் வெறுப்பு வருவது இயல்புதானே.

அந்நியர் அறிமுகப் படுத்திய மெக்காலே கல்வியை முழுவதுமாகக் கைப்பற்றிக் கொண்டார்கள்; உடைகளைக் களைந்து விட்டு அவர்கள் பாணியில் அணியத் தொடங்கினார்கள்; குடிக்கும் காபி கூட அந்நியர் அறிமுகப்படுத்தியதே. சனாதனம் அந்நியரால் கெட்டுவிட்டது என்பது தான் அவர்கள் அவர்களை வெறுப்பதற்கு அடிப்படைக் காரணம்.

அலோபதி மருத்துவமுறை என்னும் மேலை நாட்டு மருத்துவ முறையைப் படித்துக் கொண்டும் மருத்துவம் செய்து கொண்டும் இருக்கும் நிலையில் மருத்துவ மாணவர்கள் 'சரகாசபதம்' என்னும் காலத்துக்கு ஒவ்வா பிற்போக்குத்தனம் நிறைந்த உறுதி மொழியை ஏற்கக் கட்டாயப்படுத்தப்படுகின்றார்கள். மதம் ஆட்சி செய்தால் மடமைக்குத்தான் முதன்மை கொடுக்கப்படும்.

ஒன்றிய ஆளும் வர்க்கம் திராவிட மொழிக் குடும்ப வரலாற்றை மறைக்க முட்டுக்கட்டை போட்டுக் கொண்டே மறைக்கப் பார்க்கிறது. திருடன் கையில் பெட்டிச் சாவியைக் கொடுப்பதைப்போலப் பதவிகள்; குறிப்பாகத் தொல்லியல் துறைப் பதவிகள் சிலரிடம் மாட்டிக் கொள்ளும் போது வரலாறு வழி பிதுங்கிப் போகிறது.

மூன்றாவதாகப் பேராசிரியர் கி.அரங்கன் குறிப்பிடும் வகைப்பாட்டியல் பகுப்பு *(Typological Classification)* வழியாக வேறுபட்ட குடும்ப மொழிகளையும் ஆராயலாம். வேர்ச்சொல்லுடன் ஒட்டுகள் *(Affixes)* சேரும் முறை, வாக்கிய அமைப்புப் போன்றவற்றில் வேறுபட்டாலும் ஒற்றுமை இருக்கும். நோம் சோம்ஸ்கியின் மாற்றிலக்கணம் ஒருமொழியில் காணப்படும் தொடர்கள் எப்படி எல்லாம் புதை நிலையில் இருந்து புறநிலைக்கு மாறும் என்பதை விளக்கும். தொடக்க கால மொழியியல் கோட்பாடுகள் முறையாக இவற்றை விளக்கவில்லை. இருப்பினும் சோம்ஸ்கிக்கு முன்னிருந்த கோட்பாடுகளே மொழிகளைப் புரிந்து கொள்ளப் பெரிதும் உதவின என்பதைப் பேராசிரியர் கி. அரங்கன் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

அமைப்பு மொழியியல் கோட்பாடு மொழிகளை விவரிப்பதில் பெரும்பங்கு ஆற்றியது. மொழிகளின் ஒலியனியல் அமைப்பையும் உருபனியல் அமைப்பையும் விவரிப்பதில் அமைப்பு மொழியியல் பெருமளவு வெற்றிபெற்றது. தொடரியல் அமைப்பை *(syntactic structure)* விவரிக்கும்போது தான் பிரச்சினைகள் தோன்ற ஆரம்பித்தன (ப.22). தொடரியல் தொடர்பாக முழுமை பெறாத கோட்பாட்டை சோம்ஸ்கி நிறைவு செய்து ஒரு மாபெரும் மொழிப் புரட்சியைச் செய்கின்றார். அதாவது அமைப்பு மொழியியல் விளக்கும் தொடரியல் பற்றிய அண்மை உறுப்புப் பகுப்பு நிலை *(IC.Analysis)* முழுமையாக வாக்கியத்தை விளக்கப் பயன்படவில்லை என்று நிறுவினார். ஒலி *(Phone)*, ஒலியன் *(Phoneme)*, மாற்றொலி *(Allophone)* என்பவை எழுத்தியல் *(Phonology)* பகுதியின் அடிப்படைக் கூறுகள். மேலும் வேற்றுநிலை வழக்கு *(Contrasitive Distribution)* துணைநிலை வழக்கு *(Complementary Distribution)* என்னும் ஒலியனியல் கோட்பாடுகள் ஒலியனையும் மாற்றொலிகளையும் அறிய-புரிந்து கொள்ள உதவும். மரபிலக்கணங்களில் குறிப்பு உள்ளதே தவிர, தெளிவாக விளக்கப்படவில்லை.

உருவு *(Morph)*, உருபன் *(Morpheme)*, மாற்றுருபு *(Allo - Morph)* என்பவை சொல்லியல் *(Morphology)* பகுதியின் அடிப்படைக் கூறுகள். இவற்றைப் புரிந்துகொள்ள விளக்க, அமைப்பு மொழியியல் கோட்பாடுகள் பெருந்துணை புரியும்.

தொல்காப்பியம் போன்ற மரபிலக்கணங்கள் சொல்லியலையும் தொடரியலையும் சொல்லதிகாரத்திலேயே விளக்கும். மொழியியலில் வாக்கியங்களில் காணப்படும் சொற்களுக்கு இடையே உள்ள தொடர்பை அண்மை உறுப்புப் பகுப்பு நிலை *(Immediate Constituent Analysis)* என்னும் கோட்பாட்டு வழி விளக்கும்.

எட்வேர்டு சபீர் *(Edward sapir)* லெனார்டு புளூம்பீல்டு *(Leaonard Bloomfield)* சார்லஸ் எப்.ஹாக்கெட் *(C.F.Hockett, 1958)* கிளீசன் *(Gleason, 1955)* எனப் பல மொழியியல் அறிஞர்கள் மொழியியல் வழி மொழியைப் புரிந்து கொள்ளப் பெரும் பங்காற்றி உள்ளார்கள்.

விளக்க, அமைப்பு மொழியியல் விளக்கும் பல கோட்பாடுகள் மரபிலக்கணங்களிலும் விளக்கப்பட்டுள்ளன. மாற்றிலக்கணக் கூறுகளும் ஆங்காங்கே மரபிலக்கணங்களில் தலைகாட்டும். முறையாக தொடர்ச்சியாக விளக்கப்படவில்லை. இனி, நோம் சோம்ஸ்கி மொழி விளக்கத்தில் செய்துள்ள புரட்சியைப் பேராசிரியர் கி.அரங்கன் 'நோம் சோம்ஸ்கி: நவீன மொழியியலுக்கு ஓர் அறிமுகம்' என்னும் நூலில் விளக்குவதை அறியலாம்.

*(தொடரும்)*

கட்டுரையாளர், ஓய்வு பெற்ற தமிழ்ப் பேராசிரியர்,
இலக்கணவியல் ஆய்வாளர், எழுத்தாளர்.

## வாழ்த்துகள்





*2021ஆம் ஆண்டுக்கான தமிழக அரசின் 'இலக்கிய மாமணி' விருதுக்குத் தேர்வான எழுத்தாளர் கோணங்கி, மறைந்த எழுத்தாளர் கு.சின்னப்பபாரதி ஆகியோருக்கு 'நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்' வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறது.*



07.07.2022 அன்று தூத்துக்குடி வ.உ.சி. கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற நெய்தல் கலை விழாவில் நியூ செஞ்சுரி புத்தக நிறுவன அரங்கில், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

கட்டுரை



# கண்டிப்பு, அக்கறையோடு குழந்தை வளர்க்கும் பெற்றோர்கள்

மருத்துவர். ப. வைத்திலிங்கம்

பெற்றோர்கள், குழந்தைகளுக்கு சிறுவயதில் இருந்தே தங்கள் கலாச்சாரம் சார்ந்த நல் பழக்கங்களையும் பண்புகளையும் சொல்லிக் கொடுத்துத் தங்களின் உலகத்தை குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்துவதுதான் குழந்தை வளர்ப்பின் முக்கிய குறிக்கோள் என்று சொல்லலாம்.

குழந்தைகள் ஈரமான சிமெண்ட்டைப் போன்றவர்கள். அவர்கள் மீது எது விழுந்தாலும் தன் உருவத்தைப் பதித்துவிடும் என்கிறார் *HAIM GINOTT* என்னும் குழந்தைகள் மனவியலாளர். காரணம் குழந்தைப் பருவம்தானே பசுமரத்தாணி போல எல்லாப் பண்புகளும் பழக்கங்களும் மனதில் பதியும் காலம். நம் மகாத்மா காந்தி "உலகில் அமைதி எப்போதும் தவழ வேண்டும் என்றால் நாம் குழந்தைகளிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும்" என்று சொல்கிறார்.

ஆக பெற்றோர்கள் சிறுவயதிலிருந்தே குழந்தைகளை ஒருவித அர்ப்பணிப்பு உணர்வோடு அக்கறையும் கண்டிப்பும் கலந்து நல்லவைகளை சொல்லிக் கொடுத்து வளர்த்தால் நிச்சயம் அவை அனைத்தும் அவர்கள் மனதில் பதியும். அதனால் பின்னாளில் அவர்களின் வாழ்க்கை பிரகாசித்து சார்ந்துள்ள சமூகமும் வளம்படும். ஐந்தில் வளைக்க முடியாமல் ஐம்பதிலா வளைக்கப் போகிறோம்?

குழந்தைகள் வளர்ப்பு முறை பற்றி ஆராய்ந்த டையானா பாமரிண்ட் மற்றும் அவருக்குப் பின் வந்தவர்களும் கீழே கொடுத்துள்ள இரண்டே இரண்டு கேள்விகளுக்கான பதில்களை வைத்துதான் நான்கு வகைகளாகக் குழந்தை வளர்ப்பு முறைகளைப் பிரித்தனர். 1. குழந்தைகளிடம் பெற்றோர்கள் என்ன எதிர்பார்க்கிறார்கள்? 2. எதிர்பார்ப்பை வெளிக் கொணரும்படி குழந்தைகளை வளர்க்க பெற்றவர்களின் பங்களிப்பு என்ன?

இந்தக் கட்டுரையில் நாம் பார்க்கப் போவது *AUTHORITATIVE PARENTING* என்று சொல்லப்படும் கண்டிப்பும் அக்கறையும் சேர்ந்து குழந்தை வளர்க்கும் முறையைப் பற்றிதான். குழந்தைகளுக்கான உணர்வுகளை மதித்து அவர்களுக்குத் தைரியம் கொடுத்து, மனதில் இருப்பதை ஒளிவின்றி பேசும்படி ஊக்குவித்து வளர்க்கும் இந்த முறை சிறந்தது என அனைவரும் நம்புகிறார்கள்

இந்த வகையில் குழந்தைகளை வளர்க்கும் பெற்றோர்களுக்கும் மற்றவர்களுக்கும் உள்ள வித்தியாசம் தெரிய வேண்டுமானால் கீழே உள்ள உதாரணக் காட்சியைப் பாருங்கள்.

சாப்பாட்டு நேரத்தில் குழந்தையைச் சாப்பிட வருமாறு கூப்பிடும் போது "எனக்கு சாப்பாடு வேண்டாம்" என்று ஒரு குழந்தை சொன்னால், ஒவ்வொரு வகையான பெற்றோரும் எவ்வாறு பதில் சொல்வார்கள் என்று பார்ப்போமா?

*1. தாராள அனுமதி கொடுத்து குழந்தை வளர்க்கும் பெற்றோர்கள்.*

"ஓகே. உன் விருப்பம். எப்ப வேண்டுமானாலும் சாப்பிட்டுக்கோ'

*2. ஹெலிகாப்டர் பெற்றோர்கள்.*

"இன்று உனக்குப் பிடித்த உணவு தயார். நானே ஊட்டி விடுகிறேன். நிறைய சாப்பிடனும்"

*3. புறக்கணிப்பு பெற்றோர்கள்*

"நீ சாப்பிட்டால் என்னா? சாப்பிடாமல் இருந்தால் என்ன? எது வேண்டுமானாலும் செஞ்சுக்கோ. எக்கேடாவது கெட்டுப் போ"

*4. சர்வாதிகாரப் பெர்றோர்கள்*

"நீ இப்போது சாப்பிட வரலன்னா, அடி பின்னிடுவேன்"

*5. கண்டிப்பும் அக்கறையும் உள்ள பெற்றோர்கள்*

'உனக்கு பசிக்கலையா? ஏன் இப்படி சொல்கிறாய்? உடம்புக்கு ஒன்றும் இல்லையே? இப்போது பசிக்காமல் இருக்கலாம். எல்லோரும் சேர்ந்து சாப்பிட்டோமானால், நாம் அடுத்த வேலையைப் பார்க்கலாமே!'

இதிலிருந்து கண்டிப்பும் அக்கறையும் கலந்து வளர்ப்பது சற்று சிரமமானதாக இருந்தாலும் குழந்தைகள் அதைத்தான் விரும்புவார்கள் என்றும் நீங்களே தெரிந்து கொள்ளலாம்.

**இவ்வகைப் பெற்றோர்கள் எப்படி இருப்பார்கள்?**

இவ்வகையான பெற்றோர்களின் வீட்டில் எப்போதும் அக்கறையும் பாசமும் கண்டிப்பும் கலந்த உணர்வு பூர்வமான சூழல் இருக்கும். குழந்தைகளின் எதிர்காலத்தை மனதில் இருத்தி, அதை அடைய அவர்களை இளம் வயதில் இருந்து எப்படி எல்லாம் வளர்க்க வேண்டும் என்று திட்டமிடுவார்கள். பெற்றோர்கள் தங்களின் விருப்பத்தை குழந்தைகளின் மீது திணித்து அவர்களின் மூலம் தங்கள் வாழ்க்கையை வாழ்வதில்லை. மாறாக குழந்தைகளுக்கு முழுதாக தனித்துவமும் தன்னம்பிக்கையும் வருமாறு வளர்க்கிறார்கள். சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்றால் குழந்தைக்காகத் தனியாக ரோடு போடுவதை விடுத்து குழந்தையை எல்லா ரோடுகளிலும் பயணிக்கும் படி தயார்படுத்துகிறார்கள்.

அடுத்து முக்கியமான விஷயம். குழந்தைகள் என்ன சொல்ல வருகிறார்கள் என்று காது கொடுத்துக் கேட்கும் பெற்றோர்கள் இவர்கள்.

குழந்தைகளுக்காகத் தங்களின் நேரத்தையும் கவனத்தையும் செலவிடுகிறார்கள். அவர்கள் தேவைகளில் நியாயம் இருப்பின் நிறைவேற்றத் தவறுவதில்லை. நியாயம் இல்லை என்றால் கிடையாது என்று உறுதியாகச் சொல்லி விடுகிறார்கள்.

குழந்தைகளுக்கான எல்லைக் கோடுகளையும் வரைமுறைகளையும் நிர்ணயிக்கத் தெரிந்தவர்கள் இவர்கள். இந்த வகையில் குழந்தைகளை வளர்க்கும் பெற்றோர்களுக்கு தங்கள் குழந்தைகளிடம் எதை எதிர்பார்க்கலாம் எதை எதிர்பார்க்கக் கூடாது என்று தெளிவாகத் தெரியும். அதனால் குழந்தைகளுக்கான கட்டளைகளை எளிதில் புரியும்படியாக உருவாக்குகிறார்கள். குழந்தை வளர்ப்பைப் பொறுத்த மட்டில் வீட்டில் உள்ளவர்கள் அனைவரும் ஒரே அளவுகோலை உபயோகிப்பதை உறுதிப்படுத்திக் கொள்கிறார்கள். உதாரணத்திற்கு குழந்தையின் செய்கையில் தவறு இருந்தால் வீட்டில் உள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் அது தவறுதான். பெற்றோர்களுக்கு தவறு என்று தெரியும் செயல் தாத்தா பாட்டிக்கும் தவறு என்றுதான் தெரிய வேண்டும். பாச மிகுதியால் எவரும் குழந்தைகளின் தவறுகளை அங்கீகரிப்பதில்லை. மாறாகத் தண்டித்துத் துன்புறுத்துவதும் இல்லை.

குழந்தைக்கான இலக்கை நிர்ணயிக்கும் போது தங்கள் குழந்தையின் திறமையையும் விருப்பத்தையும் மனதில் கொள்கிறார்கள். அந்த இலக்கைப் பற்றித் தெளிவாகக் குழந்தைக்கு சொல்லி, அவர்களுக்குத் தேவைப்பட்ட உதவிகளையும் செய்கிறார்கள். அனைத்து உதவிகளையும் செய்தாலும் குழந்தைதான் இலக்கை நோக்கிப் பயணிக்க வேண்டுமே தவிர இவர்கள் கூடவே பயணிப்பதில்லை. குழந்தைதான் முயற்சி செய்து உயர வேண்டுமே தவிர, இவர்கள் குழந்தையின் வேலையை செய்ய மாட்டார்கள். குழந்தைத் தோல்வி அடைந்தாலும் கூட குழந்தையின் முயற்சியை மனதாரப் பாராட்டுகிறார்கள்; அவர்களை அவமானப்படுத்தி விமரிசிப்பதில்லை. முக்கியமாக இவர்கள் குழந்தைகளிடம் இருந்து அதிகமாக எதிர்பார்த்தாலும், சூழ்நிலைக்குத் தகுந்தவாறு

தங்களின் எதிர்பார்ப்பைக் கூட்டியோ, குறைத்தோ கொள்ளத் தெரிந்தவர்கள்.

தங்கள் குழந்தைதான் எதிலும் எப்போதும் முதலில் இருக்க வேண்டும் என்று ஆசைப்படுவதில்லை. குழந்தைகளிடம் இவர்கள் அனைத்திலும் ஒரு பர்பெக்ஷனை, முழுமையை எதிர்பார்ப்பதில்லை. ஆனாலும் குழந்தையின் அதற்கான முயற்சியைப் பாரட்டுகிறார்கள். இந்த முழுமையற்ற உலகில் எப்படி வாழ்வது என்று சொல்லிக் கொடுத்து விடுகிறார்கள். ஸ்டீபன் ஹாக்கிங் சொல்வது போல இந்த உலகம் பர்பெக்ஷனை அனுமதிக்காது என்பதை உணர்ந்தவர்கள்.

இம்மாதிரிப் பெற்றோர்கள் தங்களின் அதிகாரத்தைப் பிரயோகித்து குழந்தைகளைக் கட்டுப்படுத்த விரும்புவதில்லை. தண்டிப்பதை விடவும் அவர்களிடம் புரிய வைத்து அவர்களின் ஒத்துழைப்போடு வழி நடத்துவது எளிது என்று தெரிந்தவர்கள்.

குழந்தைகளைக் கண்டிப்பதா அல்லது தண்டிப்பதா என்ற கேள்விக்கான பதிலை நிறைய பெற்றோர்களால் உடனடியாகச் சொல்ல முடியாது. குழந்தைகள் விரும்பாதவற்றை செய்யும்போது அதை பெற்றோர்கள் எப்படி கண்டு கொள்ளாமல் இருக்க முடியும்? திருத்தி நல்ல பண்பை சொல்லிக் கொடுக்க வேண்டியது பெற்றோர்களின் கடமை. திருவள்ளுவர் நாட்டு மன்னன் எப்படி ஆள வேண்டும் என்று சொல்லும் போது கடிதோச்சி மெல்ல எறிக என்கிறார். இது குழந்தை வளர்ப்புக்கும் பொருந்தும் என்று நினைக்கிறேன்.

குழந்தைகள் தவறு செய்யும் போது தண்டிக்க நினைக்கும் பெற்றோர்கள் பெரிதாகத் தண்டிப்பது போல் ஆரம்பித்து லேசாகக் கண்டித்து விட்டு விட வேண்டும். அதாவது குழந்தைகளைப் பலமாகக் கண்டிக்கலாம், ஆனால் லேசாக, அவர்கள் அவமானப்படாமல், மனதில் காயம் படாமல் தண்டிக்கலாம். இங்கே தண்டனைக் குற்றவாளிகளை அழிக்க அல்ல, அவர்களைத் திருத்த என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

குழந்தையைக் கண்டிக்கும்போது எதற்காகக் கண்டிக்கிறோம் என்று சொல்லி, இம்மாதிரி தவறை மீண்டும் செய்யக் கூடாது என்று எச்சரித்து விட்டு விடவேண்டும். அடுத்து மிக முக்கியமாகக் கவனிக்க வேண்டியது. சிறு வயதிலேயே, குழந்தைகளைத் திருத்தி நல்வழிப்படுத்த நினைக்கும் பெற்றோர்கள் குழந்தைகள் தவறு செய்த உடனேயே திருத்த வேண்டுமே ஒழிய, இன்று செய்த தவறுக்கு ஒரு வாரம் கழித்து திருத்தவோ, கண்டிக்கவோ கூடாது.

அடுத்து இந்த வகைப் பெற்றோர்களுக்கு தங்கள் குழந்தைகளை எப்போது பாராட்டுவது, பரிசு கொடுப்பது என்பது தெளிவாகத் தெரியும். வாழ்வில் எவருக்கும் பாராட்டும் பரிசும் சாதிக்காமல் கிடைப்பதில்லை என்பதை நன்கு அறிந்தவர்கள். குழந்தைகள் ஒவ்வொரு முறையும் சாதிக்கும் போதெல்லாம் இவர்கள் பாராட்டத் தவறுவதில்லை . பரிசுகள் கொடுப்பதெல்லாம் அவரவர்களின் குடும்ப பொருளாதாரத்தையும் சூழலையும் பொறுத்தது; அவைகள் முக்கியமும் இல்லை. அதுபோல் இவர்கள் சாதிக்காதபோது குழந்தைக்கு ஆறுதல் சொல்லி தேற்றுவதற்கும் தவறுதில்லை.

இம்மாதிரியான பெற்றோர்களை குழந்தைகளும் விரும்பி மரியாதையுடன் நடத்துகிறார்கள். கவனிக்கவும். பெற்றோர்கள் மரியாதையை மிரட்டி வாங்குவதில்லை.

**இதனால் குழந்தைகளுக்கு என்ன லாபம்?**

இந்த வகையில் குழந்தை வளர்க்கும் பெற்றோர்கள் குழந்தைகளுக்கு ஒரு முன்னுதாரணமாகத் திகழ்வதால் குழந்தைகளும் தங்கள் பெற்றோர்களின் குணங்களை உள்வாங்கி வளர்கிறார்கள். பெற்றோர்களிடம் இருந்து உணர்ச்சிகளை எப்படிக் கட்டுப்படுத்துவது, கையாள்வது என்று எளிதில் கற்றுக் கொள்கிறார்கள். (மீண்டும் நினைத்துப் பார்க்கவும். குழந்தைகள் நீங்கள் சொல்வதைக் கேட்டு வளர்வதில்லை. உங்களைப் பார்த்துதான் கற்றுக் கொள்கிறார்கள்')

குழந்தைகளை சுதந்திரத்தோடு ஊக்குவித்து வளர்ப்பதால், அவர்களும் சிறுசிறு விஷயங்களில் ஆரம்பித்து தன்னிச்சையாக முடிவு எடுக்க கற்றுக் கொள்கிறார்கள். முடிவு எடுப்பது பற்றி பெற்றோர்களிடம் விவாதிப்பதால் அதில் வெற்றி அடையும்போது தன்னம்பிக்கையும் சுய கவுரவமும் சேர்ந்து குழந்தைகள் வாழ்க்கை ஏணியில் எளிதாக ஏற முடிகிறது.

இம்மாதிரி வளர்க்கும் குழந்தைகள் மன மகிழ்ச்சியுடனும் மன நிறைவுடனும் வளர்கிறார்கள். அவர்களின் பெற்றோர்களும் சமூகமும் எதிர்பார்க்கும் நல்ல பழக்கங்களையும் பண்புகளையும் எளிதில் கற்றுக்கொள்கிறார்கள்.

மற்ற குழந்தைகளுடன் இணக்கமாகப் பழகுவதால் வீண்வம்புகளும் சண்டைகளும் அவர்களின் வாழ்வில் குறைந்து விடுகிறது. பள்ளி, கல்லூரிப் படிப்பில் சிறந்து விளங்குகிறார்கள். மன அழுத்தம், போதை போன்றவைகள் கிட்டே நெருங்குவதில்லை.

**இந்த முறையில் குழந்தைகள் வளருவது ஏன் சிறந்தது?**

தாராள அனுமதி கொடுக்கும் பெற்றோர்களின் குழந்தைகளுக்கும் இவர்களுக்கும் ஒரே ஒற்றுமை. இருவருமே தன்னிச்சையாக முடிவு எடுக்க கற்றுக் கொள்வார்கள். இருப்பினும் இவர்கள் அதற்கான சாதக பாதகங்களை பெற்றோர்களிடம் விவாதித்த பிறகு முடிவு எடுக்கிறார்கள்.

தாராள அனுமதி கொடுக்கும் பெற்றோர்களும் குழந்தை வளர்ப்பில் அதிகம் பங்களிக்கிறார்கள். ஆனால் அவர்களிடம் கண்டிப்பும் எல்லைக்கோடும் கிடையாததால் குழந்தைகள் தங்கள் விருப்பப்படி வளர்கிறார்கள். அதற்கு மாறாகக் கண்டிப்பும் அக்கறையும் கலந்து வளர்க்கும் இந்த முறையில் வளரும் குழந்தைகள் பின்னாளில் மிகவும் நம்பத் தகுந்தவர்களாகவும் பொறுப்புள்ளவர்களாகவும் பரிணமிக்கிறார்கள்.

மிலிட்டரி ரூல் போடும் சர்வாதிகாரப் பெற்றோர்கள் போல், இவர்கள் தங்களின் ஆதிக்கத்தைக் குழந்தைகள் மீது பிரயோகிப்பதில்லை. குழந்தைகளைத் தண்டித்து வளர்ப்பதில்லை; அவர்களைக் கிட்டே விடாமல் தனிமைப்படுத்துவதும் கிடையாது. மாறாக அவர்களின் வரைமுறைகளுக்கான காரணத்தைச் சொல்லிக் கொடுத்து, புரிய வைத்து, அவர்களின் ஒத்துழைப்புடன் வளர்க்க முயலுகிறார்கள்.

விடலைப் பருவத்து பழக்கங்கள், படிப்பில் முன்னேற்றம் போன்றவைகளுக்கும் அவர்களின் ஆரம்ப கால குழந்தை வளர்ப்புக்கும் தொடர்பு இருப்பதாக ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. சிறுவயதிலிருந்தே மாறுபட்ட பழக்க வழக்கங்களைக் கொண்டுள்ள குழந்தைகள், பின்னாளில் கெட்டுப்போவதைத் தவிர்க்க இந்த முறை உதவுவதாக மனவியல் நிபுணர்கள் கூறுகிறார்கள். மேலும் இம்மாதிரி வளர்ப்பில் வந்த குழந்தைகள் மன அழுத்தம் போன்ற பிரச்சினைகளால் பாதிக்கப்படுவதும் அரிது.

இந்த வகையில் குழந்தை வளர்ப்பதற்கு பெற்றோர்களுக்கு நிறைய பொறுமையும் காலமும், வீட்டில் இருப்பவர்கள் அனைவரின் ஒத்துழைப்பும் தேவைப்படும். முந்தைய கூட்டுக்குடும்ப சூழல் எல்லாம் மாறிப்போனதால் இவ்வாறு குழந்தை வளர்ப்பது சற்று சிரமமாகத் தெரிந்தாலும் குழந்தைகளின் எதிர்காலத்தை எண்ணிப் பார்க்கும் போது இதுவே சிறந்த முறை என்று தோன்றுகிறது.

●

கட்டுரையாளர், குழந்தைகள் நல மருத்துவர்.

**உங்கள் நூலகம் சந்தாதாரர்களுக்கு**
**ஒரு வேண்டுகோள்!**



**உங்கள் நூலகம் சந்தாவினைப் புதுப்பிக்காதவர்கள் தொடர்ந்து உங்கள் நூலகம் இதழினைப் பெற புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்**

**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**

**ஜூலை மாதத்துடன் முடிவடையும் சந்தாதாரர்களின் ரசீது எண்கள்**

| | | | | |
|---|---|---|---|---|
| 2783 | 2354 | 2378 | 2372 | 2381 |
| 2784 | 2373 | 2379 | 2374 | 4051 |
| 7600 | 2376 | 2356 | 2365 | 2382 |
| 4875 | 2377 | 2365 | 2361 | 4874 |

தனி இதழ் ₹ 45.00
ஆண்டு சந்தா ₹ 540.00
மாணவர்களுக்கு ₹ 500.00.
ஆயுள் சந்தா ₹ 5400.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 4050.00

*சந்தாத் தொகையை*
**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch, Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*

கட்டுரை



# இடைக்காலத் தமிழில் சில பிராகிருதச் சொற்கள்

ஆ.கார்த்திகேயன்

பல்லவர், சோழர், நாயக்கர் காலத்தில் வழக்கில் இருந்த தமிழ் மொழியை இடைக்காலத் தமிழ் என்பர். இக்காலப்பகுதியில் பேசப்பட்ட மொழி ஒரு கலவையாக உள்ளது. இது பழந்தமிழுக்கும் தற்காலத் தமிழுக்கும் ஒரு பாலமாக விளங்குகிறது. ‘கில்’ என்னும் இடைச்சொல் புதிதாகத் தோன்றுகிறது. (எகா-ஒல்லகில்லேன் பொறுக்ககில்லேன், உரப்பகில்லேன்) வினைச்சொற்களில் நிகழ்காலம் தோன்றியது. சங்ககாலத்தில் இறப்பு இறப்பல்லா காலம்தான் உண்டு கிறு கின்று ஆநின்று என நிகழ்காலம் காட்டும் உருபுகள் நிலைபெறுகின்றன. தற்கால மலையாள மொழிக்கூறுகள் சிலவற்றைக் காண முடிகின்றது. மிண்டுகின்றேனை, கொய்யாமோ கொட்டாமோ, மிண்டர் போன்றவை மலையாள மொழிக்கூறுகள். மேலும் இக்காலப்பகுதியை சமஸ்கிருத காலப்பகுதி என்பார் தெ.பொ.மீ. (காண்க மொழி வரலாறு). பழந்தமிழில் ஆளப்பட்ட திரிதரு. இழிதரு. உழிதரு. எளிவந்து போன்ற கூட்டு வினைகள் இடைக்காலத்தில் தொடர்கின்றன. தற்காலத் தமிழில் காணப்படும் பண்ணுதல், ஏசுதல், தித்திப்பு, ஒற்றிவை (ஒத்திவை), சவலை கண்டுகொள் போன்ற சொற்கள் இடைக்காலத்தில் புழக்கத்தில் வந்துவிடுகின்றன சமஸ்கிருத மொழிக்கு கிரந்த எழுத்துக்கள் கண்டுபிடிக்கப்பட்டன. தமிழகத்தில் வாழ்ந்த சமணர் பாகத மொழியைப் பேசியதாகச் சம்பந்தர் கூறுகிறார் பாகதச் (பிராகிருத) சொற்களும் தொடர்ந்து பயன்பட்டன. இதனால்தான் இடைக்காலத் தமிழை ஓர் கலவை மொழி என்றோம்.

இடைக்காலத்தில் வழக்கிலிருந்து ஆனால் தற்போது வழக்கொழிந்து போன சில பிராகிருத சொற்கள் குறித்து இக்கட்டுரையில் காண்போம்

**போனகம்:**

இடைக்காலத் தமிழில் கல்வெட்டுகளிலும் பக்திப் பனுவல்களிலும் போனகம் என்றொரு சொல் புழக்கத்தில் வந்துள்ளது. "தயிர் போனகம் அமுது செய்தருள இட்ட வெள்ளி கச்சுகோரம்" (சென்னைப் பல்கலைக் கழகப் பேரகராதி) என்று கல்வெட்டில் காணப்படுகிறது. கச்சுகோரம் என்பது பாத்திரத்தைக் குறித்தது. போனகம் என்பது உணவைக் குறித்து. வந்த சொல்லாகும். திருச்சி மாவட்டம் முசிறி அருகேயுள்ள சிலையாத்தி கிராமத்தில் காணப்படும் கல்வெட்டுகளில் திருப்போனகம், போனம் போன்ற சொற்கள் பயின்று வருகின்றன. (காண்க கலைக்கோவன் கட்டுரை, தினமணி, 25 திசம்பர் 2011) இச்சொல் திருவாசகத்திலும் எடுத்து ஆளப்பெற்றுள்ளது. "போனகமாக நஞ்சுண்டல் பாடி பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே" திருப்பொற்சுண்ணம் என்ற பதிகத்தில் இவ்வரிகள் வருகின்றன. சிவபெருமான் நஞ்சினை உணவாக உண்ட புராணச் செய்தி இங்குச் சுட்டப்படுகிறது. இங்கும் போனகம் என்பது உணவு என்று பொருள்படும். திருப்பூவல்லி என்ற பதிகத்தில் கூட போனகம் பயன்படுத்தப்பட்டுள்ளது. "பெருங்கடல் ஆலாலம் அமுது செய்யப் போனகம் ஆனவா பூவல்லி கொய்யாமோ" கடலில் உண்டான ஆலகால விடமானது உண்ணுதற்குரிய உணவாக ஆயிற்று என்று பொருள்படும்படிப் போனகம் வந்துள்ளது.

மணிமேகலையில் "நால்வகை போனக மேந்தி" என்று வந்துள்ளதும் அறியமுடிகிறது கொன்றை வேந்தனில் போனகம் என்பது தான் உழந்து உண்டல் என்று வருகிறது போனகச்சட்டி என்பது சமையல் செய்கிற பாத்திரத்தைச் சுட்டும் போனகத்தி, போனகக்காரி போன்ற சொற்கள் சமையல்காரியைக் குறிக்கின்றன. போனகம் என்பதற்கு மாற்றாக போனம், போணம் போன்ற வடிவங்கள் அதே பொருளில் அகராதிகளில் காணப்படுகின்றன. போனகம், போனம், போணம் இவையாவும் ஒரு சொல்லின் வடிவங்களே. இச்சொல்லுக்குச் சோறு, பாலன்னம், உணவு, அப்பவருக்கம், உண்கை என்று சில பொருள்கள். இச்சொல் கன்னடம், தெலுங்கு போன்ற மொழிகளிலும் காணப்படுகின்றது இது போஜன (bho-jana) என்ற சொல்லில் இருந்து வந்திருக்கலாம் (probably from bhojana) என்று அகராதியில் உள்ளது போஜன என்ற சொல் சமஸ்கிருதச் சொல்

இச்சொல் சமஸ்கிருதத்தில் இருந்து நேரடியாக வந்த சொல் அன்று பிராகிருத மொழியிலிருந்து வந்தது. அம்மொழியில் இச்சொல் (bhoo-ana) என்றுதான் வரும். இந்த வடிவம்தான் தமிழுக்கு மூலம். தமிழில் போஅண என்று எழுதிக் காட்டலாம். போஜன என்ற சொல்லில் இரு உயிர்களுக்கு இடையில் வரும் ஜ மெய் கெடும் னகரம் ணகரமாக மாறும் இது பிராகிருத இலக்கண விதி போ அண என்பது - அம் விகுதி சேர்த்து போ அணம் உருவாயிற்று உயிர் மயக்கம் கெட்டு மேலும் போணம், போனம் உண்டாகி போனகம் வந்திருக்கலாம். கல்வெட்டுகளில் திருப்போனகம், போனம் என வருகின்ற வடிவங்களும் இடைக்கால இலக்கியங்களில் இருந்து வந்த போனகம் என்பதும் பிராகிருத மொழியிலிருந்து வந்தவை என்று முடிவாகக் கூறலாம். இச்சொல் தற்கால தமிழில் இல்லை

இடைக்காலத் தமிழில் வாழ்ந்து மறைந்து போன இன்னொரு சொல்லை இனி காண்போம்.

**சோத்தம் சோத்து**

சோத்தம் என்பது ஒரு புதிய சொல் போல தோன்றுகிறது அல்லவா? இதுவும் இடைக்காலத் தமிழில் பயின்ற சொல்தான் நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் இச்சொல் பயன்படுத்தப்பட்டது "சோத்தம் பிரான் இங்கே வாராய்" (நா.தி.பி பாடல் 142) என்று ஓரிடத்திலும் "சோத்தம் பிரான் இவை செய்யப்பெறாய் என்று இரப்பன், உரப்ப கில்லேன்" (நாதி.பி -1915) என்று மற்றோரிடத்திலும் வருகிறது. தற்காலத் தமிழில் கும்பிடுகிறேன் என்பது போல சோத்தம் வந்துள்ளது.

திருவாசகத்திலும் சோத்தம் வந்துள்ளது. திருத்தோணோக்கம் என்ற பதிகத்தில் "சோத்து எம்பிரான் என்று சொல்லிச் சொல்லி" (பாடல் -7) என்று வருகிறது. இங்குச் சோத்து என்பதற்கு இழிந்தோர் செய்யும் அஞ்சலி என்று பொருள் காணப்படுகிறது ஆசைப்பத்து என்ற பதிகத்தில் "துயருறுகின்றேன் சோத்தம் எம் பெருமானே" (பாடல் -3) என்றும் நீத்தல் விண்ணப்பத்தில், "தொழும்பரில் கூட்டிடு சோத்து எம்பிரான்" (பாடல் 44) என்றும் வருகிறது. இவ்விடத்திலும் சோத்து இழிந்தோர் உயர்ந்தோர்க்குச் செய்யும் அஞ்சலி என்று பொருள் கொள்ளப்படுகிறது. தேவாரங்களிலும் சோத்தம் எடுத்தாளப்பட்டது.

"சோத்திட்டு விண்ணோர் பலரும் தொழ" (சுந்தரர் தேவாரம்) "சோத்தம் எம்பெருமான் என்று தொழுது தோத்திரங்கள் சொல்ல (சம்பந்தர் தேவாரம்).

மேற்கண்ட சம்பந்தர் தேவாரத்தில் சோத்தம் வேறு, தோத்திரம் வேறு என்று வேறுபடுத்தப்படுகிறது. தோத்திரம் என்னும் சொல் துதிப் பாடல்களைக் குறிக்கும். திருவாசகத்திலும் "இருக்கொடு தோத்திரம் இயல்பினர் ஒருபால்" என்று வந்தது இங்கும் தோத்திரம் துதிப் பாடல்களைக் குறித்தது.

சோத்து சோத்தம், தோத்திரம் ஆகிய சொற்களுக்கு ஸ்தோத்ர (stotra) என்பதே மூலம். ஆனால் சோத்து, சோத்தம் பிராகிருத வடிவங்கள் தோத்திரம் தமிழ்ப் படுத்தப்பட்ட சமஸ்கிருத வடிவம் சோத்தம் மறைந்துவிட்டது. தோத்திரம் ஓரளவு பயன்பாட்டில் உள்ளது குறிப்பாக கிருத்துவ மதத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இன்னொரு முக்கியமான கருத்து ஒலிமாற்றம் *stootra* என்ற வடிவத்தில் - ஊரீஎன்ற மொழி முதல் மெய் மயக்கம் ஒரு சொல்லில் சோ - வாகவும் இன்னோரு சொல்லில் தோ-வாகவும் மாறுகிறது. நடுவில் வரும் -- என்ற மெய் மயக்கம் - த்த் வாகவும் ,-த்தி - யாகவும் ஓரினமாகிறது. இத்தகைய மாற்றத்தால் முறையே சோத்த(ம்) தோத்திரம் உருவாகின்றன.

**தேவு, தேவர்**

இடைக்காலத் தமிழில் தேவர் என்ற சொல் பரவலாக சில பொருளில் பயன்பட்டது. தேவு என்ற சொல்லும் பயன்பாட்டில் வந்துள்ளது. திருக்குறளில் தேவர் என்ற சொல் வந்துவிடுகிறது "தேவர் அனையர் கயவர்" என்ற குறளில் இதனை அறியலாம். சிலம்பில் "நால்வகைத் தேவரும் மூவறு கணங்களும்" என்ற வரியில் தேவர் இடம்பெற்றது தேவன் சினவரன்" என்ற அருகக் கடவுளின் ஒரு பெயராகத் தேவன் வந்துள்ளது தமிழில் நமக்கு தேவர் என்ற சொல் சமண இலக்கியங்கள் வழியாகத்தான் அறிமுகம் ஆகிறது போல பக்திப் பாடல்களில் தேவர் அதிகமாக எடுத்தாளப் படுகிறது. திருவாசகப் பாடல் ஒன்றை இங்கே சுட்டுவது பொருத்தமாக இருக்கும்

"அத்தேவர் தேவர் அவர்தேவர் என்று இங்ஙன் பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே பத்தேதும் இல்லாதென் பற்றறநான் பற்றி நின்ற மெய்த்தேவர் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பி" *(பாடல் -5)*. உண்மையான கடவுளர்க்கும் பொய்யான கடவுளர்க்கும் வேறுபாட்டை உணர்த்த பொய்த்தேவு என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார் மணிவாசகர் ஆட்டுத் தேவர், நாட்டுத் தேவர், சேட்டைத்தேவர், அவமாய தேவர், வித்தகத் தேவர் போன்ற புதுப்புது தொடர்களையும் படைக்கிறார். சமண தீர்த்தங்கரர்களைப் பொய்யான கடவுளர் என்கிறாரா?

நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் மதுரகவி ஆழ்வார் பாசுரத்தில் " தேவு மற்றறியேன் குருகூர் நம்பி பாவின் இன்னிசை பாடித் திரிவனே" என்று வருகிறது. இங்கு தேவு, தெய்வம் என்ற பொருளில் வந்தாலும் குருகூர் நம்பி பாவினை சற்று உயர்த்த தேவு என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது.

தேவு என்ற சொல் வந்த வரலாற்றைப் பார்க்கலாம் தேவ *(deva)* என்ற சொல் சமஸ்கிருத மொழி அகரத்தை ஈறாக உடைய சொல் சோம், பால ராம என்பவற்றைப் போல இவை பிற்காலப் பிராகிருத மொழியில் எழுவாய் வேற்றுமையில் தேவு, சோமு, ராமு என்று திரிபு அடையும் இந்த வடிவங்கள் பேச்சுத் தமிழில் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும். தேவு என்ற சொல் பொய்யான தெய்வங்களைச் சுட்ட பயன்பட்டிருக்கலாம். மெய்த்தேவர் என்பதற்கு எதிராகப் பொய்த்தேவு வந்திருக்கிறது.

**தேயு, தேசு**

தேசு என்ற சொல் இடைக்காலத்தில் பிரபலம் தேசு என்பதற்கு 'ஒளி பொருந்திய, அக்னி, நெருப்பு ஆகிய பொருள்கள் தரப்பட்டுள்ளன.

**"தேசனே தேனார் அமுதே" (திருவா- சிவபு -63)**

**"தேசா நேசர் சூழ்ந்திருக்கும்" (திருவா - கோயில் மூத்த திருப்பதிகம் -5)**

**"தேசனே ஓர் தேவர் உண்மை சிந்தியாது என் சிந்தையே " (திருவா சதகம் -77)**

இங்கெல்லாம் தேசன் என்ற சொல்லுக்கு 'ஒளி பொருந்தியவனே, என்றுதான் பொருள். தேசன் என்பது தேஜஸ் என்ற சமஸ்கிருத சொல்லில் இருந்து பெறப்பட்டது. தேச்சு என்ற வடிவமும் கிடைக்கிறது

தேசு இருக்கவே தேயு என்ற வடிவமும் கிடைக்கிறது. தேயு என்பதும் ஒளி பொருந்திய என்பது தான் "தேயுற்ற செல்வற்கே சென்றூதாய் கோத்தும்பீ" இங்கு தேயு என்பது பேரொளி பொருந்திய என்று பொருள் படும் இதனைத் தேய் + உற்ற என்றும் சிலர் பிரிப்பர் தேயு என்பதே சரி. பிராகிருத மொழியில் தே -உ *(teeu)* என்று வரும் தேஜஸ் *(teejas)* என்ற சொல்லில் இறுதி மெய் கெடுகிறது. இடையில் வரும் ஜ் மெய்யும் கெட்டு தேஅ > தேஉ என்றாகிறது. யகர உடம்படு மெய் சேர்க்கப்பட்டு தமிழில் தேயு ஆயிற்று.

**அத்தன், அப்பன்**

திருமுறைகளில் அடிக்கடி ஆளப்படும் சொற்கள் அத்தனும் அப்பனும் இரு சொற்களுக்கும் தந்தை என்றுதான் பொருள். தந்தையில் நகர மெய் கெட ஆதி நீண்டு தாதை என்ற வடிவம் கிடைக்கிறது. அத்தன் அப்பன் ஆகியவற்றுக்குத் திருவாசகத்தில் சில எடுத்துக்காட்டுகள் காண்போம்

**"அத்தா மிக்காய் நின்ற" (சிவபு-)**

**"அத்தா, சால ஆசைப்பட்டேன்" (ஆசைப்பத்து)**

**அத்தன் ஐயாறன் அம்மானைப் பாடி (திருப்பொற்)**

**"அத்தன் ஆனந்தன் அமுதன்" (திருவெம்பாவை)**

அத்தனுக்குப் பதிலாக அப்பன் என்ற சொல்லும் அடிக்கடி வந்துள்ளது. "அடியேனுடைய அப்பனே" (கோயிற்) அம்மையே அப்பா ஒப்பிலா மணியே (சிக்கென) ஒண்மலர் திருப்பாதத்து அப்பன் (அதிசயப்பத்து). அத்தனும் அப்பனும் ஆகிய சொற்கள் பிராகிருத மொழியிலும் தந்தை என்ற பொருளில் வருகின்றன. ஆத்மன் (ஆத்மா) என்ற சமஸ்கிருத சொல் அப்ப, அத்த என்று இரு வகையில் மாற்றம் அடைந்து வழங்கும் இரண்டுக்கும் தந்தை என்பதுதான் பொருள்.

**அயிராவணம், ஐராவதம்**

அயிராவணமும் ஐராவதமும் ஒரு பொருள் தான் வெள்ளை யானையைக் குறிக்கும். அயிராவணம்

பாகதச் சொல். ஐராவதம் சமஸ்கிருதச் சொல். அப்பர், அயிராவணம் என்னும் சொல்லை ஓரிடத்தில் ஆள்கிறார். அயிராவணம் ஏறாது ஆனேறு ஏறி ஆரூர் ஆண்ட அயிராவணமே" சமணராகவிருந்த அப்பருக்கு அயிராவணம் தெரியாமல் இருக்குமா?

**பெம்மான், பெருமான்**

பக்தி இலக்கியங்களில் மேற்கண்ட இரு சொற்களும் திரும்பத் திரும்ப வருகின்றன. ப்ரேம் *(prema)* எனும் சமஸ்கிருத சொல்லில் மொழி முதல் மெய் மயக்கம் கெட்டு பெம்ம உருவாகிறது இது பெம்மான் என மாறுகிறது இன்னொரு முறையில் ப்ரேம் பெரும் என மாறிப் பெருமான் வந்தது இவற்றுள் பெம்மான் (பெம், பெம்ம) என்பது பிராகிருத வடிவம் "பீடுடைய பிரமாபுரம் ஏறிய பெம்மான் இவனன்றே" என்று ஞானசம்பந்தர் பயன்படுத்திய பெம்மான் என்ற சொல் பிராகிருதச் சொல்லே.

**முடிவுரை:**

இடைக்காலத் தமிழ் மேலும் ஆராயப்பட வேண்டும். சமணம் போகவும் சைவ வைணவம் தோன்றவும் வலுப்பெறவும் மொழியின் பங்களிப்பு முக்கியமாக இருந்திருக்கலாம் ஆரியத்தொடு செந்தமிழின் பயன் அறிகிலாதவர் சமணர்கள் என்று சம்பந்தர் கூறுகிறார்.

ஆரியத்தையும் செந்தமிழையும் முன்னிறுத்துகிறார். சமணத்தை இடித்துரைத்தும் அவர்கள் பேசிய பாகதமொழியைக் குறைத்து மதிப்பிட்டும் கருத்து மொழிகிறார். சமணர்க்கு வேத நெறி தெரியாதாம், அவர் உரைக்கும் மொழிகளை ஏற்றுக்கொள்ள வேண்டாம் என்று கூறும் சம்பந்தர் முதல் பதிகப் பாடல்களிலேயே பெம்மான் என்ற பாகதச் சொல்லைப் பலமுறை பயிலவிடுவது முரணாக உள்ளது. ஆழ்வார்களும் நாயன்மார்களும் பாகதச் சொற்களைத் தாராளமாகவே பயன்படுத்தினர். இருப்பினும் இன்றைய நிலையில் போனகம், சோத்தம், தேவு, அயிராவணம், பெம்மான் போன்ற பாகதச் சொற்கள் வழக்கொழிய போஜனம், தோத்திரம், தேவர், ஐராவதம் பெருமான் போன்றவை தெரிந்த சொற்களாக உள்ளன. இவை நிலைபெற்று அவை மறையக் காரணம்தான் என்ன?

**துணை நூல்கள் :**


1. முத்துச்சண்முகன் (2014) திருவாசகத் தமிழ், இக்காலத் தமிழ், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை - 50
2. மீனாட்சிசுந்தரன் தெ.பொ (2009) தமிழ் மொழி வரலாறு, பூம்புகார் பதிப்பகம் சென்னை -108.
3. தேவாரத் திருப்பதிகங்கள் (2011) பதிப்பு: டாக்டர் நா. மகாலிங்கம் இராமானந்த அடிகளார் அறக்கட்டளை கோயம்புத்தூர் -49
4. திருவாசகம், கா.சு.பிள்ளை உரை கழக வெளியீடு


கட்டுரையாளர், ஓய்வுபெற்ற பேராசிரியர்.




06-07-2022 அன்று வேடசந்தூரில் 36வது தேசிய புத்தகக் கண்காட்சியை பேரூராட்சி தலைவர் கா.மேகலா கார்த்திகேயன் திறந்துவைத்தார். இதில் மாவட்ட நூலக அலுவலர் இரா.சரவணக்குமார், ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் சௌடீஸ்வரி கோவிந்தன், என்சிபிஎச் மதுரை மண்டல மேலாளர் அ.கிருஷ்ணமூர்த்தி, என்சிபிஎச் திண்டுக்கல் கிளை மேலாளர் பண்டரிநாதன், கிளை நூலகர் சந்திரசேகர், முத்துச்சாமி, முருகானந்தம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மக்களுக்காகச் சிந்திப்போம்

# ஈரோடு புத்தகத் திருவிழாவில்

18 ஆம் ஆண்டு

# பன்னாட்டுத் தமிழ் அரங்கம்

## பத்து நாடுகளின்
## தமிழ் ஆளுமைகள் பங்கேற்பு

மக்கள் சிந்தனைப் பேரவை கடந்த பல ஆண்டுகளாக பன்னாட்டுத் தமிழ் ஆர்வலர்களையும் ஆளுமைகளையும் தாய்த் தமிழ்நாட்டின் சமூக, பண்பாட்டு மைய நீரோட்டத்தோடு இணைக்கும் பாலமாகத் திகழ்ந்து வருகிறது

2008 முதல் ஈரோடு புத்தகத் திருவிழாவில் ' **உலகத் தமிழர் படைப்பரங்கம்** ' என்ற பன்னாட்டுத் தமிழ்ப் படைப்பாளிகளுக்கான சிறப்பரங்கம் உயிரோட்டமாகச் செயல்பட்டு வருகிறது

இத்தகைய முயற்சிகளின் தொடர்ச்சியாக இந்த ஆண்டின் (2022) புத்தகத் திருவிழாவில் 09.08.2022 ஆம் தேதிய மாலை நேர சிந்தனை அரங்க நிகழ்வை பன்னாட்டுத் தமிழரங்கமாக பேரவை அறிவித்துள்ளது

சுமார் 10 நாடுகளின் முக்கியத் தமிழ் ஆளுமைகள் இந்நிகழ்வில் பங்கேற்க அழைக்கப்பட்டுள்ளனர். அந்நாளை **பன்னாட்டுத் தமிழர் நாளாகக்** கடைபிடிக்க மக்கள் சிந்தனைப் பேரவை தீர்மானித்துள்ளது

வாய்ப்புள்ள அயலகத் தமிழ் உணர்வாளர்கள் அனைவரும் இந்நிகழ்வில் பங்கேற்க அன்புடன் அழைக்கிறோம். அன்றைய நாளில் ஈரோட்டிற்கு வருகைபுரியும் அயலகத் தமிழ் அன்பர்கள் அனைவரும் கூடிப் பேச தனி அமர்வொன்றும் ஏற்பாடு செய்யப்படவுள்ளது

தமிழ்கூறும் நல்லுலகின் அறிவுக்களமாக ஈரோடு புத்தகத் திருவிழா திகழ வேண்டுமென்ற எண்ணத்திலும் – உலகத் தமிழர்கள் உலா வருகிற, அலவளாவுகிற, சந்தித்து மகிழ்கிற நிகழ்வாக இது விளங்க வேண்டுமென்ற சிந்தனையிலும் இந்நிகழ்வு வடிவமைக்கப்பட்டுள்ளது

' **பன்னாட்டுத் தமிழ் அரங்க** ' நிகழ்வுக்கு ஆர்வமுள்ள அயலகத் தமிழர்கள் அதிக எண்ணிக்கையில் வருகைபுரிந்து சிறப்பிக்க அன்புடன் வேண்டுகிறோம்

**த. ஸ்டாலின் குணசேகரன்**
தலைவர், மக்கள் சிந்தனைப் பேரவை
Gmail info@makkalsinthanaiperavai.org



கட்டுரை

# செவ்வியல் நூல் தொகையாக்கமும் பட்டியலாக்கமும் மறுவரையறை / மறுகட்டமைப்பாக்கத் தேவையும்

பேரா. தெ.வெற்றிச்செல்வன்

தமிழ்ச்செவ்வியல் அழகியல், திணைக் கோட்பாட்டுப் பின்புலத்தை அடிப்படையாகக் கொண்டு அமையப்பெற்றது. அகத்திணையாகவும் புறத்திணையாகவும் காதலை, வீரத்தை, இயற்கையை, கொடையை, தறுகண்மையைப் பொருண்மைகளாகக் கொண்டது. அவைதீகத்தையும் இனக்குழுச் சமூகம் கரைந்து அரசுருவாக்க வடிவெடுக்கும் காலகட்டத்தில் புலப்படுத்தப்படும் சமயம் சாரா வாழ்வையும் சங்கச் செவ்வியல் படைப்புகளில் காண இயலும். தொல்காப்பியம் முதற்கொண்டு முத்தொள்ளாயிரம் உட்பட 41 நூல்களை செவ்வியல் தமிழ் என பட்டியலாக்கம் செய்யப்பட்டிருக்கிறது.

ஆனால், செவ்வியல் நூல்தொகை ஆக்கங்களின் காலகட்டங்களுக்கு இடையேயான இடைவெளி பாரதூரமாகவும் வரையறுக்கச் சிக்கலாகவும் உணரப்படுகிறது. தர்க்கப்பூர்வமான விவாதங்களுக்கு வெளிச்சமூட்டும் தேவை மேலதிகமாக உணரப்படுவதாகவும் விரிவுபெறுகிறது.

செவ்வியல் நூற்றொகைப் பட்டியலில் இடம்பெற்றுள்ள பிற்கால ஆக்கங்களில், அவைதீகமும் சமயச்சார்பற்ற நிலையும் மங்கியும், மொழிதல் சார்ந்தும், இனக்குழுப் பண்புகள் குலைந்து அதீதத் தனிமனித வழிபாட்டு உணர்வு மேலோங்கியும் இப்படிப் பல்வேறு நிலைகளில் ஊடாடியதன் பாற்பட்டு, சங்கத்தமிழ்ச் செவ்வியலின் தனித்துவம் நீர்த்திருப்பதைக் காணமுடியும்.

வையாபுரிப்பிள்ளை பத்துப்பாட்டில் இடம்பெறும் திருமுருகாற்றுப்படை, காலத்தால் பிற்பட்டது என்பதைச் சொன்னபோது, ''அவர் வக்கீல் அப்படித்தான் பொய் பேசுவார்'' என்று, போகிறபோக்கில் மட்டையடியாக மறுத்த மிக மூத்த தமிழறிஞரை (நாகரிகம் கருதி பெயர் தவிர்க்கப் படுகிறது) என்னவென்பது? விமர்சனத்துக்காக, வையாபுரியாரைத் தமிழ்த்துரோகி என்று இழித்தும் பழித்தும் பேசுவதைச் சிலர் ஏற்றிப் போற்றி வந்ததென்பது, வருந்தத்தக்கது. அண்மையில் மறைந்த அறிவியல் தமிழ் ஆளுமை, பேராசிரியர் இராமசுந்தரம், ''நானும் ஒரு தமிழ்த்துரோகிதான்'' (தமிழ்த்துரோகி என மட்டம் தட்டப்பட்ட வையாபுரிப் பிள்ளை பற்றி ஆய்வு செய்ததால்) என்று சுய எள்ளல் செய்து கொண்டதைப் பலரும் நினைவு கூர்வர்.

எனவே, காய்தல் உவத்தல் இன்றி தொடர்ந்து கால ஆராய்ச்சியை முன்னெடுக்க வேண்டியதன் தேவை மேலெழுந்திருக்கிறது. விமர்சனத்துக்கும் தர்க்கத்துக்கும் நெகிழ்ந்து கொடுக்காத, கெட்டிதட்டிய இறுகல் நிலையும், அறிவியல் மனப்பான்மையின் கூர்மை இன்மையும் ஒரு சமூகத்தின் பின்னடைவுக்குப் பெருங்காரணம் ஆகிவிடும். கூர்ந்தாய்வுக்கு உட்படுத்தாமல் சிவனே என்று இருந்து விடுதல் முற்போக்குப் பாய்ச்சலை முடக்கிவிடும். சிவபெருமானும் முருகப்பெருமானும் தமிழ்வளர்த்த பௌராணிகச் சமயச்சார்பை விட்டுவிட்டு, அறிவியல் மனப்பான்மையை ஏந்திக்கொள்ளப் பிற்போக்குத் தமிழ் மனம் தயங்கி நிற்கிறது. இறையனார் களவியல், இந்த வரிசையில் வைத்து எண்ணத்தக்கது.

மொழியாடல்களைக் கருத்தில்கொண்டு, காலகட்டங்களை வரையறுக்கும் ஆய்வில் வரலாற்று மொழியியலும் (Historical Linguistics) நல்ல பங்களிப்பைச் செய்ய இயலும் என்கிற நம்பிக்கை இருக்கிறது. வரையறைகளைத் துலக்கப்படுத்தி, மறு கட்டமைப்பாக்கம் செய்ய, ஆய்வுலகத்தின் முன், மிகப்பெரிய கடப்பாடு காத்திருக்கிறது. இனிவரும் தலைமுறை, அந்நிலை நோக்கி நகர்வது, காலத்தின் தேவை என்று உணர்வோமாக. இந்தத் தடத்தில் ஆசாரக்கோவை பதினெண் கீழ்க்கணக்கிலும், திருமுருகாற்றுப்படை பதினெண் மேற்கணக்கிலும் சேர்க்கப் பட்டிருப்பது குறித்தும் முத்தொள்ளாயிரம், இறையனார் களவியல்

ஆகிய நூல்கள் செவ்வியல் நூற்பட்டியலில் *(41)* சேர்க்கப்பட்டது குறித்தும் விவாதங்களையும் கேள்விகளையும் முன்வைத்து சில தர்க்க நியாயங்களை இக்கட்டுரை எழுப்புகிறது.

**செவ்வியல் நூல் தொகையாக்கமும் ஆசாரக்கோவையும்**

கயத்தூர் பெருவாயில் முள்ளியார் எழுதிய ஆசாரக்கோவை என்பதில் ஆசாரம் என்பது பின்பற்றவேண்டிய நெறிமுறைகள் என்றவாறு பொருள் சுட்டி நிற்கிறது. கோவை என்பது தொகுப்பு என்ற பொருளைக் குறித்து நிற்கிறது. ஆக, பின்பற்றவேண்டிய நெறிமுறைகளின் தொகுப்பு நூலாக அடையாளப்படுகிறது.

ஆனால், எத்தகைய அடையாளத்தை அது காட்டுகிறது? இன்ன காரியங்களைச் செய்ய வேண்டும். இன்ன காரியங்களைச் செய்யக்கூடாது என்று கட்டளையிடும் நூல்களுக்கு வட மொழியில் ஸ்மிருதிகள் என்று பெயர் கூறுவர். இத்தகைய வடமொழி நூல்களில் வருண அடிப்படை நீதி, அதாவது சாதிக்கொரு நீதி வலியுறுத்தப்படும். தமிழில் இத்தகைய மரபு கிடையாது என்பார், சாமி. சிதம்பரனார். ஆசாரம் என்பதே, தமிழ்ச்சொல் அல்ல எனும் அபச்சாரம் புரியாத வடவாரியத்துக்கு முதுகுசொரியும் தமிழ் அக்ராசனர்களை என்னென்பது?

தவிர, சில தூய்மைவாதிகள் கொரானா தீ நச்சுக்காலத்தில் இதுதான் சாக்கு என்று தனிநபர் தூய்மை பேணுவதைச் சங்க இலக்கியமே வலியுறுத்துகிறது என மறுபடியும் விதந்தோதத் தொடங்கினர் . தனிநபர் தூய்மைக்கு நாமும் எதிரான கருத்துடையோரல்லர். ஆனால் படி நிலையில் இன்னாரைத் தீண்டலாம் இன்னாரைத் தீண்டலாகாது எனும் படி நிலையாக்க மரபு கேள்விக்கும் கண்டனத்துக்கும் உரியது.

**நன்றியறிதல் பொறையுடைமை இன்சொல்லோடு**
**இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை கல்வியோடு**
**ஒப்புர வாற்ற வறிதல் அறிவுடைமை**
**நல்லினத்தாரோடு நட்டல் இவையெட்டும்**
**சொல்லிய ஆசார வித்து.**

என்று எட்டு விதமான ஆசாரங்களை முதன்மைப் படுத்துகிறது ஆசாரக்கோவை. மிக நயம்பட ஒழுகலாறுகளைப் பாடலில் பந்தி வைத்திருப்பதைப் போலத் தென்பட்டாலும், உட்கிடக்கையாக, வடஆரியச் சார்பைக் கொண்டிருப்பதோடு, தீவிர மடி ஆச்சாரங்களைத் தமிழ் மரபிற்குப் பொருந்தாத மூடப்பழமைகளை, நடைமுறைக்கும், காலத்திற்கும் ஒவ்வாத, பல அழுகுணி வேதாந்தங்களை அடுக்கிக்கொண்டே போகிறது, ஆசாரக்கோவை.

தமிழ் மரபிற்குப் பொருத்தமற்ற இந்நூல், பதினெண் கீழ்க்கணக்கு நூற் பட்டியலிலிருந்து கழித்துக் கட்டப்படாமல், தமிழ்ப் பண்டிதமணிகள், மகாவித்துவான்கள், மகா மகோபாத்தியாயர்கள், சொல்லின் செல்வர்கள், நாவலர்கள், சிலம்பின் செல்வர்கள், உரைவேந்தர்கள், தனித்தமிழ் வித்தகர்கள் உள்ளிட்ட பெருமக்கள் பார்வையில் படாமல், இவ்வளவு காலமும் எப்படித் தப்பிப் பிழைத்தது? இது குறித்து எவ்வித அக்கறையும் கொள்ளாது, தமிழ் நூற்றொகையாகிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் தமிழ்ப் பொருண்மையியல், மற்றும் தமிழ் அழகியல் தன்மைகளோடு மிகப்பெரிதும் முரணும் ஆசாரக்கோவை இடம்பெற்றதைக் கண்டும் காணாது வாளாவிருந்திருப்பது வியப்பூட்டுகிறது. நமக்குத் தேவை பதினெட்டு போன்ற எண்ணிக்கை அல்ல. பதினெட்டு என்ற கணக்கில் ஒன்று குறைந்து பதினேழாக இருந்தால் குடிமுழுகிவிடப் போகிறதா என்ன?

**எச்சிலார் தீண்டார் பசுப்பார்ப்பார் தீத்தேவர்**
**உச்சந் தலையோ டிவையென்ப யாவரும்**
**திட்பத்தால் தீண்டாப் பொருள்**

என்கிற பாடலின் வழி, வருணப்பகுப்பு படம் பிடிக்கப்படுகிறது. இது தொல் தமிழ்ச் சமூகத்தில் நடைமுறையில் இல்லாத ஒன்று. யாரைத் தீண்டலாம்? யாரைத் தீண்டக் கூடாது? என்று இழிவான இலக்கணம் வகுக்கும் போக்குகளால் யாது பயன்? பிறமொழிகளுக்கு மொழிபெயர்ப்பில் சென்றால், காறித்துப்ப மாட்டார்களா? இவர்கள் கொட்டி முழக்கும் தமிழ் மரபில் நீதி இலக்கியமாயினும், அதற்கென்று ஒரு அழகியல் இருக்கத்தான் செய்கிறது என்பதையாவது, இவர்கள் கணக்கில் கொண்டதாகத் தெரியவில்லை. உருவகமாக, உவமையாக, உள்ளுறையாக, இறைச்சியாக, தொன்மமாக நீதி எடுத்துரைப்பியலை நிகழ்த்துகின்றன, சங்க இலக்கியமும் நீதி இலக்கியமும். ஆனால் மருந்துக்குக்கூட புனைவிய அழகோ, எடுத்துரைப்பு வினைமையோ *(Narrative Aesthetics))* நூலின் எங்கேனும் ஒரு சந்து பொந்தில் கூடக் காணமுடியாத ஆசாரக் கோவை, தமிழ்மரபிற்கு மொத்த அபச்சாரமாக விளங்குகிறது.

'படிறும் பயனிலவும் பட்டியுரையும் / வசையும் புறனும் உரையாரே/அசையாத உள்ளத் தவர் என்றும், உண்டது கேளார் குரவரை மிக்காரை / கண்டால் மனந்திரியார் புல்லரையும் உண்டது கேளார் விடல்' என்றும் எவ்வித இலக்கிய அணி நலமும் வாய்க்கப்பெறாத வெற்று அறிவுரைச் செய்தியாகவுள்ள இப்பனுவல் தமிழ்ச்செவ்வியல் நூற்றொகையில் புகுந்தது எவ்விதம்?

காணிக்கை தருதல், (தட்சணை) எச்சிலுடன் காண, தீண்டக்கூடாதவை நான்கு வகை எச்சில்கள், வேதம் ஓத ஆகாத நாட்கள், மன்னனிடம் நடந்துகொள்ளும் முறை, அந்தணர் வாய்ச் சொல் கேட்டல் என்று நீளும் புத்திமதிகளின் அழகியலற்ற வரட்டுப் பிரச்சாரத்தைத் தான் தமிழ் மரபிற்குப் புறம்பாகக் கருதவேண்டியிருக்கிறது. வெளிக்குப் போவதற்கும் கால் கழுவுவதற்கும் சொல்லிக்கொடுக்க வேண்டிய அளவுக்குத் தரம்தாழ்ந்த நிலையிலா தமிழினம் இருந்திருக்கிறது?

தலைப்பிலேயே வடமொழியைக் கொண்டுள்ள இந்நூலுள் தக்கிணை, உவாத்தியாயர் போன்ற வடசொற்கள் காணப்படுவதையும் வடவாரியப் பண்பாடு பேணப்படுவதையும் நூல் நெடுகக் காண முடிகிறது. ஆரிடம் என வருவதையிட்டு சிறப்புப் பாயிரத்திற்கு உரை எழுதிய திருமணம் செல்வக்கேசவராயர் இந்நூல், சுக்ரஸ்மிருதி எனும் வடநூலிலிருந்து பெறப்பட்டதாக வடநூலார் சொல்வதாகத் தெரிவித்திருப்பதையும் இங்கு கணக்கில் கொள்ளவேண்டும். முப் புறங்களையும் அழித்த சிவபெருமானின் திருவடிகளை வணங்கி, ஆரியரிடம் தான் அறிந்த ஆசாரங்களை யாவரும் அறிய ஆசாரக்கோவை என்ற இந்நூலை திருவாயில் எனப் போற்றப்படும் கயத்தூர் அருகில் பெருவாயின் என்ற ஊரில் வாழும் முள்ளியார் தொகுத்துக் கொடுத்தான் என விரித்துக்கூறுகிறார்.

இன்றைய water theme park ஏதோ நவீனமென்று நினைக்கின்றோம். ஆனால் சங்க மரபிலேயே நீர் விளையாட்டு, புனலாடுதல் நமக்கு உண்டு. அந்த மரபுக்கு முரணாக நீரைக் குடைந்து விளையாடக் கூடாது (ஆசாரக்கோவை பாடல் : 14) என்பதெல்லாம், தமிழ் மரபுக்கு எதிரானவை என்று பார்க்கவேண்டும்.

ஐம்பூதம், பார்ப்பார், பசு, திங்கள், ஞாயிறு,/ தம்பூதம் எண்ணாது இகழ்வானேல், தம்மெய்க்கண் / ஐம்பூதம் அன்றேகெடும். (ஆசாரக்கோவை பாடல்:15) நிலம் முதலிய ஐம்பூதங்களையும், பார்ப்பாரையும், பசுவையும், சந்திரனையும், சூரியனையும் போற்றாதவர், உடம்பில் உள்ள ஐம்பூதத்தையுடைய தெய்வங்கள் அகன்று போய்விடும். இருதேவர், பார்ப்பார், இடைபோகார்; (ஆசாரக்கோவை பாடல்:31) இரண்டு தெய்வங்களுக்கு இடையிலும், பார்ப்பார் பலர் நடுவும் போகக்கூடாது. போன்ற பாடல்களில் பார்ப்பனர்களை உயர்த்திப்பிடிக்கும் இடங்களிலிருந்து வந்தவழி கண்டுகொள்க.

பார்ப்பார் இலங்கு நூல் ஓதாத நாள். (47 ) பார்ப்பார், பிறப்பினுள் போற்றி எனப்படுவார் . (64 ) இல்லம் சிறியாரைக் கொண்டு புகாஅர்; (68) கசிவு இன்று, காக்கை வெள்ளென்னும் எனின். (69) என்றவாறு பார்ப்பார் ஓதத் தகுதியற்ற நாள்கள்; பிறப்பினுள் போற்றத்தக்கவர் பார்ப்பார்; கீழோரை வீட்டுக்குள் அழைத்துச் செல்லக்கூடாது; அரசன் செய்பவற்றை வெறுக்கக்கூடாது. அவனோடு சண்டையிடக்கூடாது. அரசன் தனிமையாய் இருக்குமிடத்தில் தனது குறையைச் சொல்லக்கூடாது. நாம் அறிவோம் என்று தானே முன்வந்து கூறக்கூடாது. காக்கை வெள்ளை என்றாலும் அன்பின்றி வெகுளுமாறு மறுத்து உரைக்கக் கூடாது. (இடிப்பாரை இல்லா ஏமரா மன்னன் எனும் திருக்குறள் மரபுக்கு எதிரான கருத்தியல் இது என்பது காண்க) என வழிமொழியும் இவற்றையெல்லாம் கண்ணுறும்போது, அரசனுக்கும் பார்ப்பனருக்கும் சமரசமாகி அடங்கி நடக்கச் சொல்லும் மிகவும் பிற்போக்குக் கருத்தியல் மலிந்த நூலாக வரையறைக்கு உள்ளாகிறது.

எனவே, அறிவியலடிப்படையில் தமிழாய்வுகள் வளர்த்தெடுக்கப்பட வேண்டுமே அல்லாது, வீண் கதையாடல்கள் வளர்ச்சிக்கு ஒருபோதும் வழிவகுக்காது என்பதையும் நூல்தொகை எண்ணிக்கையை நம்பக அடிப்படையிலும்; சேர்க்கை நீக்கம் தவிர்த்தும்; ஆய்வுக்கு உட்படுத்தியும் மறுவரையரை செய்யவேண்டிய தேவையையும் உணரவேண்டும்.

அந்தவகையில் பார்த்தால், ஆசாரக்கோவை தமிழ்ச்செவ்வியல் மரபுக்கு முரணானதும் பொருத்தப்பாடற்றதும் எனும் புரிதல்நோக்கிப் பயணிக்க வேண்டியதிருக்கிறது. பதினேழ்கீழ்க் கணக்கு எனப் பெயர் மாறுமே எனும் கவலை தேவையற்றது. ஏனெனில் எண்ணிக்கையில் இல்லை சிறப்பு.

**செவ்வியல் பட்டியலாக்கமும் முத்தொள்ளாயிரமும்**

செவ்வியல் நூல்பட்டியலில் முத்தொள்ளாயிரம் சேர்க்கப்பட்டது குறித்து அடுத்து ஆய்வு செய்யலாம்.

முத்தொள்ளாயிரம் பாடல்கள் மொத்தம் 2700 என்று பொதுவாகவும், அவற்றுள் இப்போது கிடைத்துள்ளவை 99 என்று சிலரும், 108 என்று சிலரும், 130 என்று சிலரும், எண்ணிக்கை தருவதில் வேறுபாடுகள் உள்ளன. முத்தொள்ளாயிரச் செய்யுள்களில் 25 ல் 1 பங்கு மட்டுமே கிடைத்துள்ளன என்று கூறப்படுவது இங்கு நோக்கத்தக்கது.

**ஊரோடு தோற்றம் உரித்தெனமொழிப**
**ஆனை ஆயிரம் அமரிடைவென்ற**
**மாணவனுக்கு வகுப்பது பரணி**

போன்ற நூற்பாக்கள் வரையறுக்கும் உலா, பரணி மற்றும் தூது போன்ற, சிற்றிலக்கியங்களின் விளைச்சலுக்கும் முத்தொள்ளாயிரம் வித்தாக இருந்துள்ளதைப் பார்க்கிறோம்.

சில பாடல்கள் கலிங்கத்துப்பரணியின் கடைத் திறப்பையும் இன்னபிற பகுதிகளையும் நினைவுறுத்துவதுபோல,பின்னாளில் அவை உருவாக முன்னோடியாகவும், சில பாடல்கள் உலா இலக்கிய முன்னோடியாகவும், சில பாடல்கள் தூது இலக்கிய முன்னோடியாகவும் கொள்ளமுடியும்.

'முட்டுவேன் கொல் தாக்குவேன் கொல்' எனும் ஔவையின் பாடல் 'ஆடுகோ ஆடுகோ ஐதாக் கலந்து கொண்டு ஏடுகோடாக எழுதுகோ' என முத்தொள்ளாயிரத்திலும், 'முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்' எனும் சங்கப்பாட்டின் உட்கிடக்கை, குங்கும ஈர்ஞ்சாந்தின் சேறு இருக்கி' என முத்தொள்ளாயிரத்திலும் ஒத்திருக்கிறது எனலாம்.

**சங்கச்செவ்வியல் அழகியலும் மரபுமீறலும்**

தன்னுறு வேட்கை கிழவன் முற்கிளத்தல் / எண்ணுங் காலைக் கிழத்திக்கு இல்லை (தொல்.பொரு.116) என தொல்காப்பியப் பொருளதிகார நூற்பாவின்படி, தன் காதலுணர்வை, பெண் நேரடியாக வெளிப்படுத்த உரிமையில்லை. ஒரு வேளை அப்படி வெளிப்படுத்த நேர்ந்தாலும், பிறநீர் மாக்களின் அறிய ஆயிடைப் / பெய்நீர் போலும் உணர்விற் றென்ப (தொல்.பொரு.116) என்கிற அடிப்படையில், மண்கலத்தில் உள்ள நீர், மெல்லக்கசிந்து வெளியில் தெரியாமல் பரவுவதைப்போல, வெளிப்பட வேண்டும் பெண்ணின் காதல் என்கிறது, தொல்காப்பியம். இது அக்கால வழக்கமெனினும் இக்கால மானுட வளர்ச்சிப்போக்கில், பெண்ணியக் கோட்பாடுகள் வளர்ந்து, பார்வைகள் சீர்மைபெற்றுள்ள சமகாலத்தில், மிக முரணானதும் பிற்போக்கானதுமாகத் தோன்றும். ஆனாலும் இது அக்காலகட்டத்தையொட்டிப் பார்க்கப்பட வேண்டிய மரபு.

தமிழ்க் காந்தருவத் திருமணம், வடமரபு காந்தருவத்திலிருந்தும் மிக மாறுபட்டது என்கிறார் ந.சுப்புரெட்டியார். எண்வகைத் திருமணங்களில் சாலச்சிறந்தது; புலால்நாறும் நெய்தல் தலைவியை வேளாண் உற்பத்திகொண்ட மருதத்தலைவன் இயல்பாக ஏற்றுக்கொள்ளும் அப்பழுக்கற்றது; திணைகளுக் கிடையிலான கொள்வினை கொடுப்பினைகளில் ஏற்றத்தாழ்வு அற்றது; மணக் கொடை, மாமுது பார்ப்பான் மறைவழி காட்டல் எதுவுமற்ற மிகமிக முற்போக்குப் பாத்திரம் கொண்டது; அறத்தொடு நின்று காதலாகிக் கசிந்துருகுவது, தமிழ்க்காந்தருவம் எனலாம். அப்படிப்பட்ட காலத்தில் பெண்ணானவள், காதல்சார் மெய்ப்பாட்டை கரவுமெய்ப்பாடாகக் காட்ட வலியுறுத்துவது தான் முரணானது.

இந்தவகையில், பிற செவ்வியல் இலக்கியங்களின் இயங்குதளம் பெண், காதலை வெளிப்படையாகப் புலப்படுத்தமுடியாத நிலை இருக்கையில், முத்தொள்ளாயிரம் அப்படிப் புலப்படுத்தி இருப்பதைக் கவனம் கொண்டால், ஒருபுறம் இக்காலச் சனநாயக அடிப்படையில் ஏற்புடையதே. எனினும், இன்னொருபுறம் அக்கால மரபுப்படி, கரவுமெய்ப்பாடு தவிர்க்கப் பட்டிருப்பதால்

முத்தொள்ளாயிரம் பிற்காலத்தைச் சேர்ந்தது எனும் முடிவுக்கும் வர வேண்டியுள்ளது.

ஆனால், இத்தகைய இலக்கணங்களைக் கட்டறுத்து முன்னமே செவ்வியல் கால வெள்ளிவீதியார், ஔவையார் பாடல்கள் விதிவிலக்காக வெளிப்படுத்தப் பட்டிருக்கின்றன.

**கையில் ஊமன் கண்ணில் காக்கும் /**
**வெண்ணெய் உணங்கல்போல பரந்தன்று**
**இந்நோய் நோன்றுகொளற்குஅரிதே (குறு 58)**

**கன்றும் உண்ணாது கலத்தினும் படாது /**
**நல்ஆன் தீம்பால் நிலத்து உக்கா அங்கு**

**எனக்கும் ஆகாது என் ஐக்கும் உதவாது /**
**திதலை அல்குல் என் மாமைக் கவினே (குறு 9)**

**யாமம் உய்யாமை நின்றது /**
**காமம் பெரிதே களைஞரோ இலரே ! (நற் 335)**

**அரிதோ தானே நாணே நம்மொடு /**
**காமம் நெரிதரக் கைந் நில்லாதே (குறு 149)**

இவ்வாறாக வெள்ளிவீதியார் இயற்றிய, சில பாடல்கள் 'தன்னுறு வேட்கை கிழவன்முன் கிளத்தல் எண்ணுங்காலைக் கிழத்திக்கில்லை' என்கிற இலக்கணத்தை மீறியவை. காமம் குறித்த நாணம் கடத்தலை, விழைவை, புலம்பலை வெளிப்படுத்துபவை. போலவே, ஔவையும் இப்படி இலக்கண மரபுகளை மீறுகிற இடங்களைக் காணலாம்.

**முட்டுவேன்கொல் தாக்குவேன்கொல் /**
**ஒரேன்யானும் ஓர் பெற்றிமேலிட்டு**
**ஆ ஒல்லெனக் கூவுவேன் கொல் /**
**அலமரல் அசைவளி அலைப்ப என்**
**உயவு நோய் அறியாது துஞ்சும்ஊர்க்கே (குறு 28)**

**முலையிடைத் தோன்றிய நோய் வளர் இளமுலை /**
**அசைவுரை நெஞ்சத்து உயவுத்திறல் நீடி (அகம் 273)**

**வான்தோய் வற்றே காமம் /**
**சான்றோர் அல்லர் யாம்மரீஇ யோதே (குறு 99)**

போன்ற பாடல்களில் உணரமுடியும். அதேவேளை சங்கச்செவ்வியல் இலக்கியப் பெரும்பரப்பில் இவை விதிவிலக்கும் சிறுபான்மையும் எனக் கணிக்கவும் வேண்டியிருக்கிறது.

**முத்தொள்ளாயிரமும் சங்கச்செவ்வியல் அழகியல் மரபுமீறலும்**

வேம்புதலை யாத்த நோன்காழ் எஃகம் என்றவாறு, வேம்பு வந்ததாலேயே, சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறார் எனும் பண்டை அகமரபுப்படி, இப்பாடலை புறத்தில்தான் வகைப்படுத்த வேண்டும் எனும் முடிபு போல், முத்தொள்ளாயிரச் செய்யுள்கள் அகமரபை மீறியே துலங்குகின்றன.

கிள்ளி, கூடல்கோமான், மாறன், கோதை, கோலியர் கோன் சேரன், தென்னவன், மதுரையார் கோமான், வளவன், வழுதி, மாந்தையார் மாக்கடுங்கோ, தென் கொற்கைக் கோமான், பெருந்தண் உறையார்கோ, அலங்குதார்ச் செம்பியன், நெடுவேள் நலங்கிள்ளி எனச்சுட்டியோ, ஒருவர் பெயர் விளித்தோ பாடப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

செவ்வியல் தமிழ் மரபுமீறலாக, மகளிர்காதல் என்பதும், பெண்குரல் வழி வெளிப்படுத்தப் படுவது என்பதும், முத்தொள்ளாயிர உள்ளடக்கத்தில் மாறுபட்டுக் காணப்படும் ஒரு போக்காகும். இது கருதியும், முத்தொள்ளாயிரம் செவ்வியல் கால நூலா? பிந்தைய கால நூலா? என்ற கேள்வி எழுகிறது.

கொம்பன்னார் காமம், கலவி களி மயங்கிக் காணேன், தண்டப்படுப தடமென் தோள், தொழுதேனைத் தோள்நலமும் கொண்டான், கோட்டு மண் கொள்ள முலை, என்றெல்லாம் வருகிற கூற்றுகளை வைத்து, இப்பாடல்களும் இன்னும் சிலவும் பெண்பாற் புலவரால் இயற்றப் பட்டிருத்தல் வேண்டுமென்பது பொதுவான ஒரு ஆய்வுக் கண்ணோட்டமாக, அமைகிறது. இதனை யாத்த புலவர் பெயர் விவரம் கிடைக்காததால், ஒருவேளை 'ஆண் எழுத்துப் பெண் குரலாக சில அமைந்திருக்குமோ என எண்ணினாலும், பெரும்பாலும் பெண் எழுத்துப் பெண் குரலாகவே அமைந்தன போலவே, இப்பாடல்கள் தோற்றம் அளிக்கின்றன. முத்தொள்ளாயிரத்தின் காலத்துக்கு முந்தைய, சங்கக்கவிதைகளில் ஆங்காங்கே சிறுபான்மையாகக் காணப்படும் காமம் சார்ந்த பெண்ணின் வெளிப்படையான குரல்கள், முத்தொள்ளாயிரத்தில் தீவிரங்கொள்வதைக் காண்கிறோம்.

புறப்புறம் என்றோ கைக்கிளைப் பாடாண்திணை என்றோ சொல்லப்பட்டாலும் செவ்வியல் காலத்துக்கு பிற்காலத்தெழுந்தது முத்தொள்ளாயிரம் என்பதைச் சிந்திக்கையில் சில கருதுகோள்கள் முன்வருகின்றன.

"தொல்காப்பிய உரையாசிரியர் பேராசிரியர், பதினெண் கீழ்க்கணக்கு நூலாசிரியர்களோடு முத்தொள்ளாயிர ஆசிரியரையும் சேர்த்துப் பிற சான்றோர் எனக் குறிப்பிட்டார். எனவே இவர் சங்கப்புலவர் அல்லர் என்பது வெளிப்படையாகும். ஆராய்ச்சி அறிஞர் தி.வை.சதாசிவப் பண்டாரத்தார், இந்நூலின் உள்ள சில அகச்சான்றுகளை எடுத்துக்காட்டி, இந்நூலாசிரியரை கி.பி. 5-ஆம் நூற்றாண்டை ஒட்டிய காலத்தவர் என்கின்றார். முத்தொள்ளாயிரம், கைக்கிளைமாலை (சிற்றிலக்கிய) வகை தனி இலக்கிய வகைமையாக ஏன் இருக்கக்கூடாது?

இரங்க வருவது மயங்கிய வொருதலை / யியைந்த நெறியது கைக்கிளைமாலை என்று இலக்கணம் கூறுமிடம் இங்கு கவனிப்புக்குரியது. ஆண்பாற் கைக்கிளை, பெண் பாற் கைக்கிளை - இப்படிப் பிற்கால வடிவக்கூறுகள் விவாதப்புள்ளியில் தட்டுப்படுவதைத் தவிர்க்க முடியவில்லை. சிற்றிலக்கியத் தாக்கம் மிகுந்த காலத்தெழுந்த இலக்கிய ஆக்கமாக இருக்கலாம். சிற்றிலக்கியக்கூறுகள் மிக்குக் காணப்படுவது பிற்காலத்தைச் சேர்ந்தது எனச்சுட்ட வாய்ப்பு அளிப்பதாயிருக்கிறது.

"வச்சத்தொள்ளாயிரமும் ஒட்டக்கூத்தர் எழுதிய அரும்பைத் தொள்ளாயிரமும் இம் முத்தொள்ளாயிர நெறியே தழுவியுரைக்கப் பட்டனவாமென ஊகிக்கப்படுகின்றன" என்று ரா.ராகவையங்கார் கருத்தையொட்டி யோசிக்கையில், வச்சத் தொள்ளாயிரம் அரும்பைத் தொள்ளாயிரம் ஆகியனவற்றோடு முத்தொள்ளாயிரமும் செவ்வியல் காலத்துக்கு மிகப் பிற்பட்ட காலப்படைப்பு என சிந்திக்கலாம். இ.காளீஸ்வரி 'பெயர்சுட்டா மரபுவீழ்ந்தது' எனக் குறிப்பிடுவதிலிருந்து, மரபுநிலை வழுவிய பிந்தைய காலகட்டத்தைச் சேர்ந்தது எனக்கருதிப் பார்க்கலாம். பெயர்சுட்டா மரபு மாறினாலும், முற்றிலும் பாடாண் புறப் புறத்திணை வகை என்று ரா.ராகவையங்கார் வரையறுத்தாலும், நேரடிப்பெயர்கள் தவிர்க்கப்பட்டு குலப்பெயர்களே சுட்டப் பட்டிருப்பதால் காலகட்டத்தைத் துல்லியமாகக் கணிப்பதில் இடர்ப்பட வேண்டியிருக்கிறது.

தவிரவும் இப்படி, தலைவன் வருகையில் அவனைக் கண்ணாரக் கண்டு காதல் மயக்குறுவது, உலா எனும் சிற்றிலக்கிய அடிப்படை என்பதால், சிற்றிலக்கியக்காலப் படைப்பாக்கம் என்று ஒரு கருதுகோளும் இங்கு கூர்மைப்படுகிறது.

"இந்நூலின் ஆசிரியரைக் குறித்து இரண்டொரு குறிப்புகளே கிடைக்கின்றன. மன்னிய நான்மீன் என்னும் கடவுள் வாழ்த்தினாலும் புகழ் என்ற அதிகாரத்துள் வரும் மடங்கா மயிலூர்தி, செங்கணெடியான் மேல் என்று தொடங்கும் செய்யுட்களாலும் இவர் சைவசமயத்தினாரதல் வேண்டும்." என பதிப்புகள் தெரிவிக்கும்படி, சைவ சமயச்சார்பு கருதிப் பார்க்கிறபோது, பிற்கால ஆக்கம் என கருத்துருவாகலாம். பேராசிரியர் இவரைப் பிற சான்றோருள் வைத்து எண்ணுகின்றமையால் சங்கத்துச் சான்றோர்கட்குப் பிற்பட்ட காலத்தில் வாழ்ந்தவர் என்பதும் புலனாம்" என வையாபுரிப்பிள்ளை குறிப்பிடுவது இங்கு கவனிக்கத்தக்கது".

தொகைநூல்களின் வரலாற்றையும், பிறமொழித் தொகைநூல்களின் போக்குகளையும் சுட்டி, புறத்திரட்டு நூலுக்கு வையாபுரிப்பிள்ளை எழுதியுள்ள ஆழமும் விரிவும் கொண்ட பதிப்புரை செவ்வியல் காலத் தொகைநூல்களுக்கும் பிற்காலத் தொகைநூல்களுக்கும் அடிப்படை வேறுபாட்டைச் சுட்டுமிடம் கவனிப்புக்குரியது.

இவ்வாறாகச் செவ்வியல் காலத்துக்குப் பின்வந்தது, முத்தொள்ளாயிரம் என்பதற்கான சான்றுகளைச் சுருக்கித் தொகுத்துக் கொள்ளலாம் :

1. மிக வெளிப்படையாகவும் துலக்கமாகவும் பெண் காமத்தைப் புலப்படுத்தத் தயங்காமை
2. செவ்வியல் கால சிறுபான்மைக் கைக்கிளை முத்தொள்ளாயிரத்துள் பெரும்பான்மையாக அமைவது...
3. பின்னர் வந்த சிற்றிலக்கியங்களுக்குக் கால்கோளிடுவது... (பிற்காலச் சிற்றிலக்கியங்களுக்கும் முத்தொள்ளாயிரத்துக்குமான கால தூரம் மிகக் குறைவாயிருக்கலாம் எனும் கருதுகோள் - ஆக, காலத்தால் மிகப்பிற்பட்டது )
4. வெறுமனே மன்னர் மயப்பட்ட மாண்புகளும் மன்னர் மீதான காதலும் (கைக்கிளைக் காதலும்) என, சங்கச் செவ்வியல் மரபு சுருங்கிய நிலையில் இயக்கங் கொள்வது...
5. ஆறில் ஒன்றன்றோ புரவலர் கொள்ளும் பொருள் எனும் பாடலில் (ஆறில் ஒரு பங்கு வரி என டி.கே.சி குறிக்கும் உரை) வரி சங்கச்செவ்வியல் காலத்தைச்சுட்டாது, பிற்காலத்தையே சுட்டுமாப் போல அமைவது. விளைச்சலில் ஆறில் ஒரு பங்கு வரியாக வாங்கப்பட்டது என்ற கருத்து பரவலாகக் கூறப்படுகிறது. ஆனால் சங்க இலக்கியங்களில் இதற்குச் சான்று எதுவுமில்லை. (ஆ.சிவசுப்பிரமணியன், கீற்று.காம், 11 ஆகஸ்ட் 2011)
6. பாதீடும் உண்டாட்டுமே நமது செவ்வியல்மரபு. ஆனால் அந்தணர் ஆவோடு பொன் பெற்றார் என்ற பாடற்குறிப்பு மூலம் இது, பிற்காலத்திய வழ்வியல் செயன்மையைக் குறித்துக் காட்டி நிற்கிறது.

இப்படிப் பல்லாற்றானும், முத்தொள்ளாயிரம் காலத்தால் பிந்தைய பல பா வடிவங்களுக்கும், பாடுபொருள்களுக்கும் முன்னத்து ஏராய் விளங்கினாலும், அதன் அழகியல், சங்கச்செவ்வியல் காலத்தின் பொருண்மைகள் சுருங்கி, பிந்தைய காலத்தின் பிரதியாக அமைந்தவாறு, முத்தொள்ளாயிரத்தைச் செவ்வியல் நூற்றொகையில் அடக்கமுடியுமா எனும் செம்மாந்த கேள்வி காத்திரமாக எழுகிறது.

**செவ்வியல் நூல் தொகையில் திருமுருகாற்றுப்படை சேர்க்கப்பட்டதும் செவ்வியல் நூல் பட்டியலில் இறையனார் களவியல் உரை சேர்க்கப்பட்டதும்**

தமிழின் தனித்துவமே சமயச்சார்பற்ற அடையாளம் மட்டுமல்லாது, செம்மொழித் தகுதிப்பாட்டுக்குரிய பண்புக்கூறான காலப் பழமையும் தொன்மை நீட்சியும் சமகாலம் வரையான சீரிளமைத் திறமும் என்று அறிவுலகம் அறியும். செம்மொழித் தமிழ்நூல்கள் பட்டியல் படுத்தும் போது இந்தக் காலப்பழமையைப் போகிறபோக்கில் தட்டி விட்டுப் போவது அறிவு நாணயமற்ற செயல் அல்லவா?

தொன்மையை ஒரு அளவுகோலாகக் கொள்கிறபோது, சங்கஇலக்கியங்களும் தொல்காப்பியமும் இரட்டைக் காப்பியங்களும் என மட்டும் வைத்துக்கொண்டிருந்தால் ஓரளவு சரியான வரையறையாக இருந்திருக்க முடியும். அதிலுமே திருமுருகாற்றுப்படை, ஆசாரக்கோவை இரண்டையும் சங்க இலக்கிய அழகியல் அரசியலோடு முரணுகிற அடிப்படையில் அவைகுறித்த கூர்ந்தாய்வு செய்து வரையறையை மேலும் செழுமைப் படுத்தமுடியும் என்றுதான் தோன்றுகிறது. செயற்கையாக ஒரு அளவுகோல் நீட்டி, முத்தொள்ளாயிரத்தையும் இறையனார் களவியலையும் சேர்ப்பதென்பது காலப்பழமையை முன்னுக்கு நகர்த்திவிடுவதாகும். பிற்காலத்தைய சைவ எழுச்சியைப் புராணீகமாகப் பறைசாற்றி, சங்ககாலத்துக்குள் உட்செரித்துக்கொள்ளும் முயற்சியின் விளைவைக் காத்திரமாக யோசிக்க வேண்டியிருக்கிறது.

**காலக் கணிப்பில் திரிபுவாதமும் தொன்மை எனும் தனித்துவ நீர்த்தலும்**

காலப்பழமைக் கணிப்பில் இப்படி தாராளம் காட்டுவதால், பவானந்தர் மதிப்பீட்டில் ஏழாம் -எட்டாம் நூற்றாண்டு என்றோ வையாபுரியார் கணிப்பில் 12 ஆம் நூற்றாண்டு என்றோ அமைந்த இறையனார் களவியல் வரை எடுத்துக் கொள்வதால், இதர இந்திய மொழிகள் தமிழுக்கு 12-ஆம் நூற்றாண்டுவரை கணக்கில் கொண்டுவிட்டார்கள், எனவே எமது மொழிகளுக்கும் செம்மொழித் தகுதி வேண்டுமெனக் கோரி வாக்கு வங்கி அரசியலின் அறுவடையைப் பெற்றுக் களித்தனர். இதனால் வலிந்து, தமிழுக்குத் தம் சமய அடையாளத்தை ஏற்றும் முயற்சி ஒருபுறமும் தொன்மை எனும் தனித்துவம் குலைந்து சிறுத்துப்போகச் செய்யும் போக்கு இன்னொருபுறமும் நிகழ்தகவாயிற்று. இதுவும் நிற்க.

ஏலவே, வையாபுரியார், கால ஆராய்ச்சி செய்து சங்கச்செவ்வியல் பத்துப்பாட்டில் திரு முருகாற்றுப்படை காலத்தால் பிந்தையது என்றுரைத்ததையோ, நக்கீரர் நால்வர் என்று எழுதியதையோ சீந்தக்கூடவில்லை என்பதோடு, ஆய்வுக்குக் கணக்கில் கொள்ளாது வாளாவிருந்தனர் என்பதுகூட, இருக்கட்டும். ஒருபடி மேலேபோய், தமிழ்த் துரோகி என்று பட்டம் சூட்டினர்.

ஒருவேளை வையாபுரிப்பிள்ளையின் வரலாற்று மொழியியல் (Historical Linguistics) புலமை, கால ஆராய்ச்சிக்குப் பல்லாற்றானும் உதவியிருக்கக்கூடும். அரிதின் முயன்று, தரவும் ஆய்வுக் கருதுகோளும் காட்டி, "பத்துப்பாட்டுகளும் கீழ்க்காட்டியபடி, காலம் பற்றி மூன்று தொகுதிகளாக அமைகின்றன, என்கிறார்.

*1.பொருநராற்றுப்படை, 2.பெரும் பாணாற்றுப்படை, 3.பட்டினப்பாலை, 4.குறிஞ்சிப்பாட்டு, 5.மலைபடுகடாம், 6.மதுரைக்காஞ்சி, 7.நெடுநல்வாடை, 8.முருகாற்றுப்படை 9. முல்லைப்பாட்டு, 10 சிறுபாணாற்றுப்படை" (இலக்கிய தீபம்...)*

சைவம் முந்திக்கொண்டுவிட்டதாகக் காட்டவே, 'முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை' எனும் தொகைப்பாடல் *(முருகு முதலில் அமையுமாறு)* யாக்கப்பட்டதா? எனும் கேள்வியும் இங்கு எழுவது மிக நியாயமானது.

**கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்**
**ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்**
**பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்**
**சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்**

எனும் புறத்திணையியற் சூத்திரத்தைச் சான்று காட்டினால், முருகனிடம் பக்திக்காக ஆற்றுப் படுத்துவது என்பது ஆற்றுப்படை இலக்கணப்படி பொருந்தாது. ஆனால் தொகுப்பித்தோர் / தொகுத்தோர் அரசியலின்படி, சைவம் சங்ககாலத் தொகுப்பிலேயே இருக்கிறது எனும் பெருமிதத்துக்காகவோ, பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படை அதுவும் முதலிலேயே இடம் பெற்று விட்டதோ எனும் ஐயத்திற்கு இடமுள்ளது.

"தொல்காப்பியர் வகுத்த ஆற்றுப்படை இலக்கணத்தில் முருகாற்றுப்படை அடங்காது எனவும் விவாதம் நிகழ்ந்திருத்தல் வேண்டும். நச்சினார்க்கினியர் தமது வழக்கப்படி சொற்களை அலைத்துப் பொருள்கொண்டு இந்நூலும் அடங்குமெனச் சாதித்துள்ளார். 'கூத்தரும் பாணரும்... சொன்ன பக்கமும்' எனவும்,'ஆற்றிடைக் காட்சியுறழத் தோன்றிப் பெற்ற பெருவளம்... சொன்ன பக்கமும் எனவும், இரண்டாகப் பிரித்துக் கூட்டிப் பின்னதற்கு இல்லறத்தைவிட்டுத் துறவறமாகிய நெறியிடத்து நிற்றல் நன்றென்றும், கண்டகாட்சி தீதென்றும் மாறுபடத் தோன்றுகையினாலே தான் இறைவனிடத்துப் பெற்ற கந்தழியாகிய செல்வத்தை யாண்டுந் திரிந்தும் பெறாதார்க்கு இன்னவிடத்தில் சென்றாற் பெறலாமென்று அறிவுறுத்தி, அவரும் ஆண்டுச்சென்று அக் கந்தழியினைப் பெறும்படி, சொன்னபக்கமும் என்று பொருளுரைத்தார். இது பொருளன்று என்பதனைச் சான்றுகாட்டி நிறுவவேண்டா. கூத்தர் முதலாயினோர் நெறியிடையே காட்சி மாறுபாடு தோன்றி... சொன்ன பக்கமும் எனச்சேர்த்தே கொள்ளுதல்வேண்டும். இளம்பூரணர் இவ்வாறே கொண்டார். காட்சி மாறுபடுதலாவது பெருவளம் பெற்று வரும் தமது காட்சியும் வறுமைப்பிணியால் வருந்தித் தள்ளாடிவரும் ஆற்றுப்படுக்கவார் காட்சியும் தம்முன் மாறுபடுதல். இதுவே செம்பொருள். எனவே முருகாற்றுப்படையைத் தொல்காப்பியச் சூத்திரம் கருதிற்றன்றெனலே தகுதி. இதனால் தொல்காப்பியருக்கு யாதோரிழிக்குமின்று என்கிறார், வையாபுரியார்.

கூடவே, ஔவையார் பெயரில் பலர் இருந்ததுபோல் நக்கீரர் பெயரில் நால்வர் இருந்திருக்கிறார்கள். பிற்கால நக்கீரர் ஒருவரைச் சங்ககால நக்கீரராகக் கொண்டு கூட்டியதில் ஏற்பட்ட பிறழ உணர்தலை அவர் சுட்டியுரைக்கிறார். தவிரவும் பத்துப்பாட்டிலிலுள்ள திரு முருகாற்றுப்படை பதினோராம் திருமுறையிலும் எப்படி இடம்பெறும் என்பதுவும் கேள்வி. திருமுறைகள் செவ்வியல் காலத்தால் மிகப் பிந்தையவையல்லவா? அப்படியெனில் பிந்தையகால திருமுறை நூல் ஒன்று, எப்படிச் செவ்வியல் நூற்பட்டியலில் இடம்பெற முடியும்?

**தொன்மம் உட்பாய்ந்து மேற்படிந்த வரலாறு (Historical Over lapping & Over rmaping)**

திருமுருகாற்றுப்படை தோன்றியதனைக் குறித்து வழங்கப்படும் தொன்மக் கதையாடலை எடுத்துக்காட்டுகிறார் வையாபுரியார். "திருப்பரங்குன்றத்தில் சரவணப் பொய்கையின் கரையில் ஓர் அரசமரம் நின்றது. அதிலுள்ள இலை நீரில் வீழ்ந்தால், மீனாகவும், நிலத்தில் வீழ்ந்தால் பரவையாகவும் மாறும். ஒருகால் ஓர் இலை பாதி கரையிலும் பாதி நீரிலுமாக விழுந்தது. கரையில் விழுந்த பகுதி பறவையாகவும் நீரில் விழுந்தது மீனாகவும் அமைந்த விசித்திரப் பிராணியாக அந்த இலை மாறிற்று. பறவைப் பகுதி ஆகாயத்தில் பறக்கவும், மீன்பகுதி நீருள் மூழ்கவும் முயன்றன. அப்போது அங்கு கரையில் பூசை செய்துகொண்டிருந்த நக்கீரர், ஏகாக்கிர சிந்தனையில் வழுவி இந்த அதிசயத்தைக் கண்ணுற்று இரண்டனையும் விடுவிக்க வந்தனர். சிவபூசையில் வழுவிய காரணத்தால் ஒரு பிரம்ம ராட்சசு நக்கீரரைப் பிடித்துக்கொண்டுபோய் ஒரு குகையில் அடைத்து விட்டது. அக்குகையில் இவரையும் சேர்த்து ஆயிரம் பேராகவே அவ்வளவு பேரையும் உண்டுவிட எண்ணி அப் பிரம ராட்சசு நீராடி வருவதற்குப் போயிற்று. அப்போது, நக்கீரர் முருகாற்றுப் படையைப்பாட, முருகப்பிரான் அவரைக் குகையினின்றும் விடுவித்தனர். இந்நூலை ஓதுவாருக்கு வேண்டும் வரம் கொடுப்பேம் என்றும் முருகப் பெருமான் அருள் செய்தனர்."

பிற்காலத்து நக்கீரர் எழுதியதை சங்ககால நக்கீரர் எழுதியதாகத் தொகுத்தோர் / தொகுப்பித்தோர் பிறழ உணர்ந்திருக்கவோ அடையாள மாற்றீடு கருதியோ முரு,கு இடம் பெற்றிருக்க வாய்ப்பு உள்ளதாகத் தெரிகிறது. பெயர்க்குழப்பமும் காலக்குழப்பமும் திரிபு உணர்த்தல்களில் முடிந்திருக்கலாம். நக்கீரர் நால்வர் என்பதற்கும் திருமுருகாற்றுப் படை எழுதிய நக்கீரரும் களவியல் உரைகாரர் நக்கீரரும் வேறானோர் என்பதற்கும் வையாபுரியார் கொடுக்கின்ற ஆய்வுமுடிபு *(இலக்கிய தீபம்,....,பக் 41)* இது.

| வ. எண் | புலவர் | காலம் | நூல்கள் | சமயம் |
|---|---|---|---|---|
| *1* | சங்க நக்கீரர் | கி.பி.*250* | நெடுநல்வாடை | சைவம்? |
| *2* | இலக்கண நக்கீரர் | கி.பி.*850* | அடி நூல் | சமணம் |
| *3* | நக்கீரதேவ நாயனார் | கி.பி.*1000* | முருகாற்றுப்படை முதலிய 11-ம் திருமுறைப் பிரபந்தங்கள் | சைவம் |
| *4* | உரைகாரர் நக்கீரர் | கி.பி.*1200* | களவியலுரை | சைவம் |

இப்பார்வை மிக முக்கியமானதும் சிந்திக்கத்தக்கதும் கனக்கில் கொள்ளவேண்டியதும் ஆகும்.

இந்த அடையாள மாற்று அரசியற் செயற்பாட்டினது ஒரு கூறாகவே, இறையனார் களவியல் யாக்கப்பட்டது என்பது, பலரும் ஒப்புக்கொள்வதுதான். அகப்பொருள் இலக்கணம் கூறும் இறையனார் அகப்பொருள் நூலை, மதுரை ஆலவாய்க் கடவுள் இறையனார் இயற்றினார் என்று அதன் நக்கீரர் உரை கூறுகிறது. இறையனார் என்னும்

பெயர் கொண்ட ஒருவர் இயற்றி இருக்கவேண்டும், அல்லது இந்த நூலை இயற்றியவர் யார் என்று தெரியாத நிலையில் இறையனார் இயற்றினார் எனக் குறிப்பிட்டிருக்க வேண்டும். இந்த நூல் கி.பி. ஏழாம் நூற்றாண்டு வாக்கில் தோன்றியிருக்கலாம். இந்த நூலுக்கு உரைஎழுதிய நக்கீரர் தமது உரைக்கு மேற்கோளாக பாண்டிக் கோவை நூலிலுள்ள பாடல்களைத் தந்துள்ளார். பாண்டிக்கோவை கி.பி. எட்டாம் நூற்றாண்டு நூல். கட்டளைக் கலித்துறை இலக்கணம் கொண்ட பாடல்கள் முதலில் தோன்றிய காலம் என்பார், பவானந்தர் (கழகப்பதிப்பு) தமது இறையனார் களவியல் நூல்முகப்பில். இப்படியிருக்க, வையாபுரியார் இது 12-ஆம் நூற்றாண்டினதாக இருக்க வேண்டுமென்பார். இறையனார் களவியலை செவ்வியல் நூல்கள் பட்டியலில் எப்படி வரவு வைத்தார்கள் என்பதுதான் மிகப்பெரும் கேள்வி.

மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகப் பாடத்திட்டத்தின் 7-ஆம் பக்கம் அறுதியிட்டுரைப்பதுபோல, தவறான சித்திரத்தை கற்போர் மனதில் விதைக்கிறது. மிகப் பிற்காலம் அதாவது 12-ஆம் நூற்றாண்டு இறையனார் அகப்பொருள் நூலை, "சங்ககாலத்தில் எழுந்த இறையனார் அகப்பொருளுக்கு சங்கப்புலவர் நக்கீரரே முதன்முதலாக உரை கூறினாரென்றும் அவ்வுரை பல ஆண்டுகளாக கர்ண பரம்பரையாக வந்த பின்னரே ஏட்டு வடிவத்தில் அமைந்தது என்றும் தெரிகின்றது." இதன் மூலம் இறையனார் சங்க நூல் எனவும் உரை எழுதிய நக்கீரர் சங்ககால நக்கீரர் எனவும் ஒருசேர முன்வைப்பதை கவனிக்கவேண்டும்.

### தொன்மம் உட்பாய்ந்து மேற்படிந்த வரலாறு (Historical Over lapping & over mapping)

*...அரசனும் புடைபடக் கவன்று " என்னை? எழுத்துஞ் சொல்லும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே! பொருளதிகாரம் பெறேமெனில் இவை பெற்றும் பெற்றிலேம் "எனச்சொல்லா நிற்ப மதுரை ஆலவாயில் அழனிறக்கடவுள் சிந்திப்பான்: " என்னை பாவம் ! அரசற்குக் கவற்சி பெரிதாயிற்று. அதுதான் ஞானத்திடையதாகலான், யாம் அதனைத் தீர்க்கற் பாலம்". என்று இவ்வறுபது சூத்திரத்தையுஞ் செய்து மூன்று செப்பிதகழத்தெழுதிப் பீடத்தின் கீழிட்டான்... அரசன் புகுதருகவென்று பார்ப்பானைக் கூவச் சென்றுபுக்குக் காட்டக் கொண்டு நோக்கி, இது பொருளதிகாரம்! நம்பெருமான் நமது இடுக்கண் கண்டு அருளிச்செய்த பொருளதிகாரம்! இதனைக்கொண்டுபோய்ப் பொருள்காண்மின்"* என களவியல் உரை தோற்றச் சரடு தொடர்கிறது .

அவர்கள் அதனைக் கொண்டுபோய் உரை எழுத அக்காலத்தே கோனார் தமிழ் உரை, தென்றல் தமிழ் உரை, சாமி கைடு, சி.என்.சி.கைடு, வெற்றி நோட்ஸ் இன்னபிற உரை போடும் கம்பெனி (பாண்டிச்சேரி மொழி அறிஞர்கள் கும்பினி என்று வாசிக்கவும்) வகையறாக்கள் இன்மையான் அவரவரும் என்னுரை சிறந்தது. இல்லை என்னுரைதான் சிறந்தது என்று "முடிபொருங்கு ஒத்துப்போகாமையயான் மீண்டும் பஞ்சாயத்து கடவுளுக்கே" ஆலவாயி றவிர்சடைக் கடவுள் எடுத்துச்செல்லப்பட்டதாகவும் சரடுநீள, கடவுளும், "இவ்வூர் உப்பூரிக்குடிகிழார் மகனாவான் உருத்திர சன்மன் என்பான் பைங்கண்ணன், புன்மயிரன் ஐயாட்டைப் பிராயத்தான் ஒரு மூங்கைப் பிராயத்தான் உளன்; அவனை அன்னனென்றிகழாது கொண்டுபோந்து ஆசன மேலிரீஇக் கீழிருந்து சூத்திரப் பொருளுரைத்தாற் கண்ணீர் வார்த்து மெய்ம்மயிர் சிலிர்க்கும் மெய்யாயின உரை கேட்ட விடத்து; மெய்யல்லா உரை கேட்டவிடத்து வாளாவிருக்கும் அவன் குமாரதெய்வம் அங்கோர் சாபத்தினார் றோன்றினான்" என்றுரைக்க அப்படியே ஏற்பிசைவு பெற்றதாக நீள்கிறது புராணீகம். இப்புராணப் பின்புலத்தைச் சிறிதும் அறிவியல் மனப்பான்மை இன்றி இப்படித்தான் எங்கள் மொழி உருவாகி வளர்ந்தது வளர்ந்தபிறகு உரைகள் போட்டோம் என்றெல்லாம் சொன்னால் உலக மொழி அறிஞர்கள் மத்தியில் நமக்கு என்ன மதிப்பு மரியாதைகள் கிடைக்கும்? கிஞ்சிற்றும் தர்க்க நியாயங்களில்லாத இந்தப் புராணீகப் பின்புலத்தை மட்டும் கணக்கில் கொண்டு செவ்வியல் பட்டியலில் சேர்த்துவிட்டால் அது எப்படிச் சரியாக இருக்கும்? உண்மையான நம்பகமான நமது தொன்மை வரலாற்றாய்வு ஏன் உணர்ச்சித்தளத்தில் இருட்டடிப்பும் வெளிச்சத்தை மறைக்கும் வேலைகளும் கொண்டதாக மாறவேண்டும்?

எனவே பதினெண் மேல்கணக்கு என்பது பதினேழ் மேல்கணக்கு என்றானாலும் பதினெண் கீழ்க்கணக்கு என்பது பதினேழ் கீழ்க்கணக்கு என்றானாலும் எண்ணிக்கை குறித்து ஒன்றும் பெரிதும் அலட்டிக் கொள்ளாமல் காலக்கணிப்பு, புராணிக நீக்கம் இவற்றை ஒழுங்குசெய்து, செவ்வியல் நூற்றொகையை கூர்ந்தாய்ந்து திருமுருகாற்றுப்படை, ஆசாரக்கோவை நீங்கலாகவும் 41 செம்மொழி நூற்பட்டியலை மேற்சுட்டிய இவற்றோடு கூட்டி இறையனார் களவியல், முத்தொள்ளாயிரம் நீங்கலாகவும் 37 செம்மொழி என்றவாறு காலப்பழமை, சமயச் சார்பின்மை, எனும் சங்கச் செவ்வியலின் இயற்பண்பு அடிப்படையில் மறுவரையறை செய்வதுவே ஆய்வு அறமாக இருக்கமுடியும் என்று தோன்றுகிறது.

### உசாத்துணை:


1. ஆசாரக்கோவை, செல்வக்கேசவராயர், சென்னை, 1916
2. ஆசாரக்கோவை, சாமிசிதம்பரனார், வலைத்தமிழ்.காம்
3. ராகவையங்கார். ரா,முத்தொள்ளாயிரம், செந்தமிழ்ப்பிரசுரம், மதுரைத் தமிழ்ச்சங்கமுத்திரா சாலை, 1935.
4. டி.கே.சிதம்பரநாதர், முத்தொள்ளாயிரம், பாரி நிலையம், சென்னை, 1943
5. சபாஜெயராசா,அழகியல், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், இலங்கை,1989
6. ஆவ்னர்சிஸ், (மொ.பெ : பொன்னீலன்) மார்க்சிய அழகியலின் அடிப்படைகள், NCBH,
7. சபா ஜெயராசா, மார்க்சிய உளவியலும் அழகியலும், இலங்கை முற்போக்குக் கலை இலக்கிய மன்றம் வெளியீடு, இலங்கை , 21-03-2010
8. தெட்சணாமூர்த்தி.அ, இலக்கியவரலாறு, தமிழ் இணையக் கல்விக் கழகம், சென்னை.
9. மாணிக்கவாசகன்,முத்தொள்ளாயிரவிளக்கவுரை, உமாபதிப்பகம்,சென்னை, 2016,
10. இளங்கோ. நா, முத்தொள்ளாயிரம் சில குறிப்புகள், வலைப்பூ பதிவு
11. முனைவர் கே.எஸ்.கோபிநாத் உரையாடல், நாள்: 08-03-2021
12. காளீஸ்வரி. இ, 'செந்தமிழ்' இதழ், மதுரை, அக்டோபர், 2014
13. வையாபுரிப்பிள்ளை,புறத்திரட்டு,சென்னைப் பல்கலைக்கழகம், முதல்பதிப்பு 1938
14. மணிவேல்.மு,கைக்கிளைக்காதல், மதுரை காமராசர் பல்கலைக்கழக வெளியீடு,1992
15. ஆ.சிவசுப்பிரமணியன், கீற்று.காம்,11 ஆகஸ்ட் 2011



கட்டுரையாளர், அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.